# மத்தாப்பு

# +

# சதுரங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003 - - 8
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-10-28
LIBRARY.

558971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தாப்பு
# +
# சதுரங்கம்

ஒரு நாவலும்
சில சிறுகதைகளும்

தமிழ் இலக்கியத்திலே
இரண்டு
கூட்டு முயற்சிகள்

**Mithra Arts and Creations**

சிட்னி சென்னை மட்டக்களப்பு

558971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mithra Books
ISBN 1 876626 31 3

Apart from any fair dealing for the purpose of Private Study, Research, Criticism or Review as Permitted under the Copyright Act, No part may by reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or any means, electronic, mechanical or photocopying, recording or otherwise without prior written permission from the publishers.

Mithra Publication books are published by
**Dr Pon Anura**

**MATHTHAPPOO + SATHURANGAM**

(A Novel and few short stories)

Compiled and Edited by

**ESPO**

**Mithra Books First Edition**
27th December 2000

Cover Design
**Trotsky Marudu**

Illustrations
Adimoolam, Pugazhenthi & Sou

Made in India by Mithra Book Makers

Mithra Arts and Creations

1/23 MUNRO STREET
EASTWOOD 2122 AUSTRALIA
Ph: (02) 9868 2567
e-mail: anura@matra.com.au

30 VANNIAH STREET
BATTICALOA (EP)
SRI LANKA

375/8-10 ARCOT ROAD
CHENNAI 600 024 INDIA
Ph: (044) 372 3182
e-mail: mithra@md4.com.in
Fax : 0091-44-4721336

மித்ர : 48
விலை : 50.00

27 டிசம்பர் 2000
பக்கங்கள் : 162

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-10-18
LIBRARY.

# பதிப்புரை

நான் அம்மா குடும்பத்துச் சாயலன். 'அம்மா பிள்ளை' என்று கேலி செய்வார்கள். இக்கேலி பெருமை தருவது. சின்ன வயதிலிருந்தே அம்மா தோடுடைய செவியளாகவே என் நெஞ்சில் பதிவாகியுள்ளார். பரந்த முகத்தில் வெள்ளைக்கல் தோடுகள் பளிச்சிடும். வசதிகள் வந்த பிறகும் அந்தத் தோட்டை மட்டும் அழிச்சுச் செய்ய அவள் விரும்பியதில்லை. 'மத்தாப்புத் தோடு' என்று கொண்டாடுதல் அவள் சுபாவம். சின்ன வயதிலேயே அதன் வரலாற்றுப் பெருமையையும் அறிந்து கொண்டேன். ஐவர் கூட்டாக எழுதிய மத்தாப்பு நாவலின் இறுதி அத்தியாயத்தை என் அப்பா (எஸ்.பொ) எழுதினார். அதற்குக் கிடைத்த சன்மானத் தொகையிலேயே அந்தத் தோடு வாங்கப்பட்டது. நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. ஈழத்தில் இலக்கியக் கூட்டு முயற்சிகளுக்கு நுழைவாயில் அமைத்த 'மத்தாப்பு' – அதன் நினைவுகள் - இன்னும் என் குடும்பத்தில் வாழ்கிறது. இது ஒரு வகை யோகம்.

ஆனால், இன்றைய தலைமுறையின் தமிழ் நேசர்கள் ஈழத்தில் நடைபெற்ற இனிமையான கூட்டு முயற்சிகளை அறிவார்களா? இரண்டு தலைமுறைக்கு முற்பட்ட யாழ்ப் பாணத்தையும், அதன் வாழ்க்கைக் கோலங்களையும், தமிழ் இலக்கியத்திலே தடம் பதித்த ஐவர் நாவலாக்கி யுள்ளார்கள். தமிழ் சேவிப்பு என்பது புதிது படைப்பது மட்டுமல்ல; பழைமையை அழிந்து விடாது பாதுகாத்தலும். பின்னது ஆவணப்படுத்தும் பணி. இதிலும் மித்ர சிரத்தை ஊன்றி உழைத்தலை நீங்கள் அறிவீர்கள்.

நான் இரண்டு ஆண்டுகள் வந்தாறுமூலை மத்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலயத்தில் படித்தேன். விடுதி வாழ்க்கையும். அப்பொழுதுதான் சாதித்தல் வேண்டும் என்கிற ஊக்கம் என்னுள் வேர் கொண்டது. 'சதுரங்கம்' விளையாடுதல் என் பொழுதுபோக்கு. அப்பாதான் எனக்கு இதன் ஆசான். சில நாள்களிலேயே அவரைத் தோற்கடித்து விட்டேன்! 'நான் விளையாட்டில் எப்பொழுதும் சக்கையன்' என்று சொல்லி தோல்வியில் மகிழ்ந்தார். சதுரங்க விளையாட்டில் மாவட்ட அளவில் ஓர் அங்கீகாரம் வரத் துவங்கியது. ஆனால், என் சாதனைக்கான துறை சதுரங்கம் அல்ல என விலகினேன்.

மட்டக்களப்பு வாழ்க்கையில் தடம் பதித்து, பின்னர் மறக்கப்பட்ட கதாபாத்திரங்களுக்கு இலக்கிய வடிவம் கொடுப்பதாக 'சதுரங்கம்' கூட்டு முயற்சி நடந்தது. பின்னர், அது அரசு நூலாக வெளி வந்தது. அப்பொழுது அதன் 'பாரங்'களை மடிப்பதிலும், அவற்றை நூலாக gather செய்வதிலும் நானும் ஈடுபட்டேன். பொழுதுபோக்கும். நினைத்துப் பார்க்கிறேன். ரஹ்மான் மாமாவின் கொழும்பு அச்சகத்தில் எத்தனை அநுபவம்! சேது பந்தன நிர்மாணத்திலே அணிலின் உழைப்பு நிகர்த்தது என்னுடையது.

இந்த அணிலின் சேவை முப்பது ஆண்டுகள் கழிந்தும் தொடர்கின்றது. உலகளாவிய தமிழ்ப் படைப்பும் - பகிர்தலும் தேவை. அதுவே தமிழின் வளர்ச்சிக்கும் - வளத்துக்குமான தடம். இந்தப் பணியிலே இணையுமாறு தமிழ்நேசர்களை அழைக்கின்றேன். இப்பணியை என் வாழ்க்கையாக்கிக் கொள்ளுதல் மகிழ்ச்சியானது.


**டாக்டர் பொன் அநுர**

**Mithra Arts & Creations**

*1/23 Munro Street*
*Eastwood 2122*
*Australia*
*✆ : (02) 9868 - 2567*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளுறை

வர்ணம் ஒன்று • 7
இ. நாகராஜன்

வர்ணம் இரண்டு • 18
கனக- செந்திநாதன்

வர்ணம் மூன்று • 31
சு. வே.

வர்ணம் நான்கு • 44
குறமகள்

வர்ணம் ஐந்து • 55
எஸ். பொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம்



இ. நாகராஜன்

நாள் முழுவதும் உழைத்துக் களைத்து நெஞ்சு நொந்த சூரியன் இரத்தம் கக்கிய வண்ணம் சரிந்தான். அவன் பிரிவைக் கண்டு பிலாக்கணம் வைப்பதுபோல் புள்ளி னங்கள் கரைந்த வண்ணம் வீதியி லுள்ள மரங்களை நாடிப் பறந்து கொண்டிருந்தன.

ஒன்றின் அழிவிலே தான் இன்னொன்று உதயமாக வேண்டு மென்ற நியதிக்கு எடுத்துக் காட் டாக உலகைச் சுற்றி வளைந்த

# பச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளெனும் அழுக்குத் துணியை நீக்கிக் கொண்டு எட்டிப் பார்த்தான் அர்த்த சந்திரன். உலகின் அரவம் சங்கமத்துக்கு முன் முழுமூச்சுடன் கலகலக்கும் சமயம். பட்டினத்து நாகரீகத்தைக் கொஞ்சமும் எட்டாமலிருக்கும் முல்லைப்பற்றுக் கிராமத்தை நோக்கி அந்த உருவம் நடந்து கொண்டிருந்தது.

பருவத்தின் வாளிப்பையும், அதனோடு இணைந்து நிற்கும் ஆசாபாச உணர்ச்சிகளையும் ஒன்றாகப் பலியிட்டுத் தளர்ந்த உடல், சதா சோகமென்ற உளி கீறிய வடுத்தோய்ந்த முகம்; முக்கால்வாசி நரைத்தும், கால்பகுதி நரைக்கத் தயாராகிக் கொண்டிருக்கும் சிகையும், தாடியும் அந்த முகத்தை இன்னும் கோரப்படுத்தியிருந்தன. சதை வடிந்து எலும்பெடுத்த கங்காளத்தின் மொத்தமான நிலையை நெருங்கிப் பார்த்தால் தான் புரிந்து கொள்ளலாம்.

அந்த உருவந்தான் மாரிமுத்து.

அவன் நடந்து செல்லும் எதிர் திசையிலே உலகத்தின் ஒவ்வோர் அணுவிலும் தனது பால்ஒளியைப் படரவிட்டுச் சூரியனை வென்று விடலாம் என்ற வேகத்தில் அடிவான விளிம்பை விட்டு மெதுமெதுவாகக் கிளம்பிக் கொண்டிருந்த நிலவுக்குச் சூரியனின் சேவையை ஈடுசெய்ய முடியாத பலவீனம். தொட்டந் தொட்டமாக ஒவ்வோர் மரவடிகளிலும் நிழல் இருளாக நின்று நிலவைப் பரிகசித்தது.

மாரிமுத்துவின் காலடியிலும் அந்தக் கருஞ்சாயல், அது அவனது நெஞ்சைப் பிரதிபலிக்கிறதோ என்னவோ!

இலட்சியமற்ற பைத்தியக்காரனுக்கும், அவனுக்கும் எந்த விதமான வேற்றுமையும் இல்லை. நெஞ்சிலே நீக்கமற நிறைந்திருக்கும் வேதனையை ஆழ அமுக்கி-ஆன்றமைந்த ஞானியின் மனநிலையை வலிந்து பிடிக்கும் தீவிர முயற்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டவன் போன்று பொறிகளின் செயலைக் கட்டுப்படுத்தி இரவின் திரையிலே தன்னை மறந்து நடந்து கொண்டிருந்தான்.

கொண்டல் சேர் கோபுரம் கொண்ட முல்லைப்பற்றுப் பிள்ளையார் கோவில் சமீபத்தில் வெண்சாந்து பூசப்பட்டமையால் அந்த மங்கிய நிலவொளியிலும் சாடை காட்டியது. நீறென்ற வாதையில் மூடுண்ட அது மினு மினுத்தது. அவனது இதழ்க் கடையிலே முறுவல்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

அந்த மாகவிஞனின் எண்ணத்தின் நிதர்சன உண்மையா இது! கடந்த - இருபத்தைந்தாண்டுகளாகத் தலை காட்ட முடியாத அந்த நகைப்பு எதனால் வந்தது! தூர்ந்த கிணற்று நீர்போல் ஒட்டிக்கிடந்த கண்களில் இரண்டு துளி முத்துக்கள் பிறந்து இதழ்கடைவழியே உருண்டன.

"கணிங்! கணிங்!"

மாட்டு வண்டியொன்று அமைதியைக் குலைத்துக் கொண்டு முன்னேறியது. வெருட்சி கொள்ளும் காட்டுமான் போல் சற்று ஒதுங்கிக் கொண்டான். யாராவது தன்னைப் பார்த்துவிடப் போகிறார்களோ என்ற படபடப்பு நெஞ்சில்.

நத்தையாக ஊர்ந்த போதிலும் அந்த இடம் நெடு வழியாகவே இருக்கவேண்டுமென்ற அவன் எண்ணத்துக்கு இடக்குப் பண்ணுவதுபோல் கிராமத்தைக் கூறுபோடும் நாற்சந்தி குறுக்கிட்டது.

செழுங்கிளை தாங்கிய ஆலமரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த விழுதுகள் நிலத்திற்பட்டு வைரித்த மரங்களாக உருப்பெற்றிருந்தன. அவனது இளமைக் காலத்து விளையாட்டுச் சாதனங்களுள் அவையும் அடங்கும். காலம் என்னும் வேகம்



UNIVERSITY OF PERADENIYA
2003-10-8
LIBRARY.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை மட்டும் அலைக்கழித்து முதுமையைக் கொடுத்துவிட அதனூடே நாளுக்குநாள் சிறுகத் தேய்ந்து அஸ்தமத்தை அடைய அவன் முற்பட்டிருக்கிறான். ஆனால் அவை காலத்தை எள்ளி நகைப்பது போல் வைரித்து விட்டன. என்ன செய்தாலும் மனிதன் பலவீனன்தானே!

மற்றவர்களின் கவனத்தை ஈர்க்காதிருக்கச் சந்தியை விட்டுச் சிறிது ஒதுங்கி ஆலமர நிழலில் குந்தினான். சோர்ந்த உடலில் ஒருவித குளிர்மை.

"பிப்பி, பிப்பி"....

"டும், டும்"

தேர்ந்த விற்பன்னனின் நாதஸ்வரம், இன்னிசைக்கு ஏற்ப இழைந்து - லயந் தப்பாது முழங்கும் தவிலுடன் கூடி அவனது காதுகளிலும் விழுந்து கொண்டிருந்தது. அந்த இன்னிசை முல்லைப்பற்றுப் பிள்ளையார் கோவிலிலிருந்துதான் வருகிற தென்பதை அவனால் ஊகிக்க முடிந்தது.

ஊருக்குள் நுழைய வேண்டுமென்ற ஆவல் நெஞ்சைக் குடைந்து கொண்டிருந்தபோதிலும் அவனுடன் ஒன்றிப் பிணைந்த லஜ்ஜை குறுக்கிட்டுத் தடை செய்தது. நாடி வந்த இடத்திற்கு செல்ல வேண்டுமானால் ஆரவாரத்தில் அமிழ்ந்து கிடைக்கும் அந்தக் கோவிலைக் கடந்துதான் செல்ல வேண்டும்.

நினைவை அடக்கி - ஒடுக்கி நாதஸ்வர இசைக்கு முற்றாகத் தன்னை ஒப்புக் கொடுத்தான்.

இரண்டொரு மாட்டு வண்டிகள் லாந்தர் ஒளி பரப்பிய வண்ணம் அந்தச் சந்தியைக் கடந்து அப்பாற் சென்றன. அவனிருக்கும் இடத்துக்கு வடக்கே இரு ஒளிச் சன்னங்கள். அவை? யாரோ புகையிலைச் சுருட்டைப் பிடித்துக் கொண்டு வரும் அடையாளம்.

மரத்தோடு மரமாக அரவமின்றி ஒடுங்கிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் பேய் என்று சொல்லுவார்களே, அப்படித்தான் இதுவும்.

"ஏன் அண்ணை, ஊர்வலமும் வாண வேடிக்கையும் எத்தனை மணிக்கு?"

"இன்னும் கொஞ்சத்தில் தொடங்கிவிடும். இது வரைக்கும் தாலிகட்டும் முடிந்திருக்கும்"

"நோட்டீசில் ஆறுமணிக்கெண்டுதானே போட்டிருக்கு."

"ஓம்! தெரியாதே நம்மடை ஆக்களுடைய நேரத்தை?"

"இப்படிச் சிலவழிக்கினமே, இது யார் பொறுப்பு? மாப்பிள்ளை பகுதியோ, பெம்பிளை பகுதியோ!"

"மாப்பிள்ளைக்கு யாரிருக்கினம் பெம்பிளை பகுதிதான்."

"ஏன்?"

"மாப்பிள்ளைக்கு அப்புவும்மில்லை, ஆச்சியும்மில்லை. அந்தப் பொடியன் அனாதைப் பள்ளிக்கூடத்தில் படித்து வாத்தியானவன்."

"என்ன, கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லன்."

"உந்த மாப்பிள்ளை பொடியன் குமாரசாமி இருக்கிறானே... அவன்ரை தகப்பன் மறியலுக்குப் போனவன். ஆளே திரும்பி வரவில்லை. மாத்தளை பக்கத்தில் எவளோ சிங்களத்தியோடை இருக்கிறானெண்டு கேள்வி."

"ஒகோ! இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் விசுவலிங்கம் கொலைவழக்கில் மறியலுக்குப்போன மாரிமுத்து வின்ரை மகனே இவன்? இவங்களுக்கு எப்பிடிப் பிடிச்சுது?"

"ஓய் தகப்பன் செய்ததுக்குப் பிள்ளைக்கு என்ன பொறுப்புக் காணும்? பொடியன் வாட்டசாட்டமாக இருக்கிறான். ஆள் நல்ல குணசாலி..."

அரையும் குறையுமாக விழுந்த சம்பாஷனை சிறிது சிறிதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுகளிலிருந்து விடுபட்டுக் கொண்டது. அந்தக் குமாரசாமி?

"டும்! டும்!"

ஆகாச வெடியொன்று ஓலமிட்டது. அதைத் தொடந்து அதிர்வெடி... வாணவேடிக்கை ஆரம்பித்து விட்டது. அப்புறம் ஊர்வலம்.

எலிவாணம்; பலநூறு எலிகள் அந்தர வெளியில். ஆகாச வெடி; ஒரே தீப்பிழம்பு. ஆகாயத்தில் பலநூறு நட்சத்திரங்கள், வானத்திலிருந்து அந்தரவெளிக்கு இறங்கி விட்டனவா? மத்தாப்பு.

அதோ 'டுமீல்' என்னும் ஓசை... மாத்தாப்பு ஒன்று. ஆகா! பச்சை, சிவப்பு, மஞ்சள், கத்தரி நீலம் இத்தியாதி... ஒன்றா, இரண்டா? பல மத்தாப்புக்கள்.

மனிதனின் வாழ்க்கையும் இதுபோன்ற மத்தாப்புத்தானா? எத்தனை வர்ணங்கள்? ஒவ்வொன்றும் ஒன்றாக ஒரே குழலிலிருந்து பிரிந்து வானவெளியில் பகட்டுகின்றதே. இப்படியான உணர்ச்சிச் சேர்க்கைகளைப் பல சுருதியில் இணைத்து விடப்பட்ட மனிதனும் வாழ்க்கை வெளியில் பகட்டுகிறான்.

அந்த மனிதக்கூட்டத்துள் ஒருவனான மாரிமுத்துவின் இதயமும் ஒரு மத்தாப்பு. அதுவும் பலவர்ணங்களை உமிழ்ந்த மத்தாப்பு.

அதோ! பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள், கத்தரி. வாழ்க்கையில் பசுமைகாட்டி, கருத்துக்கும் கண்ணுக்கும் இதமளித்து கோபத்தீயாகச் சிவந்து இன்பத்தின் நீல வொளியிலே குலவிய காலம் எங்கே?

அந்த ஆலம் விழுதை அணைத்து வீசும் தென்றலின் இதத்தில், நிலவின் தண்ணொளியில் எற்றுண்டு காலமென்ற

காட்டாற்றைத் தாண்டிச் செல்கிறான் மாரிமுத்து.

எவருக்கும் இன்னல்கள் தொடர்ந்து வந்து விரக்தியாகக் கவிந்து விடலாம். ஆனால் அந்த விரக்தியைத் தாண்டிச் சென்றகால இன்பத்தில் லயித்து ஒரு கணமாதல் தன்னை இளமையாக்கிவிடத் தக்க சக்தி பெற்ற நினைவு அவனை விட்டு அகலவில்லை.

ஆண்டுகள் முப்பது கழிவதற்கு முன்...

வலிவும், வனப்பும் கொண்ட உடலைப் பாகுபடுத்தும் தசைநார்கள் திரண்டு அளவளவாக அமைந்த தோற்றம்; சுருண்ட சிகை; தலையிற் சுற்றிய தலைப்பாகையின் கட்டைமீறி நெற்றியில் விளையாடும் எழில்மிகு வதனத்தில் ஒளி வீசும் கண்கள். பார்ப்பவர் உள்ளத்தை ஈர்க்கும் உடலமைப்புக் கொண்ட மாரிமுத்து, கடலும்-திரையும் என்று பேர்பெற்ற மாடுகள் பூட்டியவண்டியில் குந்தியிருக்கிறான்.

**"எல்லோரையும் போலவே யென்னை**
**எண்ணலாகு மோடி போடி"**

அக்காலத்தில் யாழ்ப்பாணப்பகுதியில் நாடகமேடைகளில் பிரபலம்பெற்ற அந்தப் பாட்டை, உதடுகள் உச்சரிக்க அந்த இசை இனிமையில் லயித்தவண்ணம் வண்டியை ஓட்டி வருகிறான் அவன்.

ஆதவன் வானவிட்டத்தின் அந்தத்துக்குச் செல்வதற்கு இன்னும் ஐந்து பாகைக்கு மேலிருக்கிறது. வானில் பொற் கொல்லன் அள்ளித் தெளித்த மஞ்சள் வர்ணப்பொடி உதிர்ந்து மண்ணில் ஒவ்வோர் பிரகிருதியிலும் அழகுறப் பரவியிருக்கும் சூழ்நிலை. இதந்தரும் தென்றலின் குளிர்மையில் அக்காலத்து வீதிகளின் இரு மருங்கிலும் நடப்பட்டிருந்த மரங்கள் இழைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. மோகனமான அமைதியைக் கலக்கிக் கொண்டு வருகிறது வண்டி.

முல்லைப்பற்றுக் கிராமத்துக்கு இன்னும் இரண்டுமைல் தூரமிருக்கின்றது. நேரத்துக்கு போகவேண்டும்மென்று தேவையில்லை. இருந்தும் தனது மாடுகளை துரிதமாக ஓடச்செய்வதில் ஒருதிருப்தி அவனுக்கு. அங்குள்ள இளவட்டங் களுக்குள் எல்லாம் எவ்வளவு தூரத்துக்கு அவன் சகல வற்றிலும் சிறந்திருந்தானோ, அந்த அளவில் தன் மாடுகளும் ஏனைய மாடுகளுக்கெல்லாம் உயர்ந்தனவாக இருக்கவேண்டும் என்பது அவன் இலட்சியம்.

கிளிக்கோடு மறிக்கையில் அவன் கிளியாக நின்று நடுக் கோட்டில் விரைவில் ஓடி, ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குத் தாவி எதிர்பக்கத்து ஆசாமியை அடித்து ஆட்டத்தில் வெற்றி கொள்வதில் மிகவும் சமர்த்தனாக இருந்தான். அந்த ஆட்டமெல்லாம் மெல்ல அவனைவிட்டு நகர்ந்துவிட, இந்தக் காளைகளைப் பேணிக்காத்துச் சவாரிப் போட்டியில் வெற்றிபல பெற்று உச்சமடைந்தவனாக வர அவன் அரும்பாடு பட்டான். அந்தப் பலன் இன்று பாழ்போய்விடவில்லை.

முல்லைப் பற்றிலிருந்து காலை பதினொரு மணிக்குக் கிளம்பியவன் பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ள மாங்குடி புகையிரத நிலையத்தில் புகையிலைச் சிப்பங்களை கொண்டு போய் ஒரு மணி வண்டிக்குக் கொடுக்கமுடியாது, என்று சிலர் தெரிவித்துக் கொண்டார்கள். ஆனால் அவன் ஒரு மணிக்கு முன்னதாகவே கொடுத்துவிட்டு ஆரச்சோர மாடுகளைக் கட்டிவிட்டு, அங்கெல்லாம் அலைந்து திரிந்தான். பின்னேரம் நாலுமணிக்குத்தான் அவன் வண்டியில் மாடுகளை பூட்டினான். அவனது காளைகளை அவன் பேணிக்காப்பதினால் அவை எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலும் அவனை இளப்பமாகப் போகவிட்டது கிடையாது. இன்றும் அப்படித்தான். ஏறக்குறைய ஒன்பது மைல்களை சாதாரணமாகக் கடந்து வந்த அவன் சற்றுமுன்தான் மாடுகளைத் தட்டி விட்டான். ஆனால் அவைகள் தாவிச் செல்ல வகையற்ற முறையில் வழியில் இடையூறா?

அது என்ன! வண்டியைச் சற்று மெதுவாக விடத் தொடங்கினான்.

சொற்ப தொலைவில் கருமையான காட்சி... வீதியை அப்படியே கௌவிக் கொண்டிருந்தது. அது என்ன என்று அவன் எண்ணுவதற்கிடையில் வண்டி அந்த இடத்தை அடைந்து விட்டது. அப்பாற்போக முடியவில்லை.

அங்கு ஐம்பது ஆடுகளுக்குமேல் கூடிக் குமைந்து இடத்தை ஆக்கிரமித்துச் சர்வாதிகாரம் செய்து கொண்டிருந்தன; மாடுகள் வெருட்சி கொள்ளத் தொடங்கிவிட்டன.

"சூ! சூ!"

அவைகள் அசைவதாகக் காணோம்.

"ஏய்! ஆரது ஆட்டுக்காரர்? பாதையில் இப்படி ஆடுகளை விட்டுக் கொண்டிருந்தால் வண்டியை அப்பால் விடுகிற தில்லையா?"

பதிலில்லை!

"என்ன நான் சொல்கிறன் யாரையும் காணவில்லையே..."

வீதியோரத்துக்குத் தூரத்தே நின்ற பூவரச மரத்தில் கொக்கைத் தடிகொண்டு குழைபறித்துக் கொண்டிருந்த உருவம் திரும்பியது. பச்சை வர்ணப்புடவை கெண்டைக் கால் வரை மறைக்க, பொன்நிறப் பாதத்தை வெள்ளிப்பாதசரம் அணி செய்ய, திரும்பிய அந்த உருவத்தைக்கண்டு சொக்கிச் சுழன்று விட்டானா? என்ன? அத்தகைய அழகுள்ள பெண்களை அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்எப்போதாவது பார்த்தது கிடையாதா?... பின் ஏனிந்த லயிப்பு? கடுமையான தொனியில் எவரையும் வெருட்டும் அவனது குரல் அடைத்து விட்டதா? அந்த அழகு.... அதில் ஒரு வகைப் பிடிப்பு... பிடிப்பிலே குழைந்து செல்லும் மனம்.

சற்று நேர மௌனந்தான். ஆனால் அது ஏதோ நீண்ட நேரக் கனவுகளை அவன் உள்ளத்தில் உற்பத்தி செய்து கொண்டிருந்தது. அந்தப் பெண் என்ற தேனில் விழுந்த ஈயாகி விட்டான் மாரிமுத்து. அவள் அவனது நெஞ்சக் குளத்தில் நீச்சலடிக்கத் தொடங்கி விட்டாள். அந்த அலைகள் உருண்டு திரண்டு கரையில் தொட்டு மடிந்து அவனுள் எத்தனையோ வர்ணக் கனவுகளை எழுப்பிவிட்டன.

அதோ! இன்னொரு மத்தாப்பு. அந்த மத்தாப்பிலிருந்து வெளிவரும் ஒளிபந்துப் பூக்கள் வானிற்பரவி வெடித்துப் பலவகை வர்ணங்களை உதிர்த்து விட்ட போதிலும் அந்த பச்சை வர்ணமே முழுவதையும் ஆக்கிரமித்தது போன்ற ஒரு உணர்ச்சி.

அந்தக் கல்யாண ஊர்வலத்தில் முக்கிய பங்கு கொள்ளும் மாப்பிள்ளைக்கு வாழ்க்கை பசிய நினைவுகளையும் உல்லாசத்தையும் உவந்தளிப்பதற்கு அது-அந்தப் பச்சை சூசகமாக அமைந்ததா?

அன்றி இங்கே மரத்தடியில் குந்தியிருந்து கடந்த காலச் சம்பவத் தீனியை இரைமீட்கும் தனக்கு அந்தப் பழைய இன்ப நினைவுகளை நினைவூட்டுவதற்காகத்தான் அப்படி தோன்றுகிறதா?

இடுப்பில் கையை வைத்துப் புகையிலையை எடுத்து வாயில் போட்டுக்கொள்ள முனைந்த அவனது கரங்களில் தட்டுப்படுவது எது? தட தடத்துப்போன துன்ப வாழ்க்கைக்குப்பின் புனர் ஜென்மமும் இன்பமும் அளித்து இன்னொருத்தியின் ஞாபக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னமாக இருக்கும் சங்கிலி.

அந்தச் சங்கிலியை யாருக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் திரும்பவும் வந்தபோது மாரிமுத்துவுக்கு பழைய ஞாபகம் வந்துவிட்டது. பசுமையான அந்த நினைவு....

வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தான். "எனக்கு ஏற்ற ஜோடி" மாரிமுத்துவின் மனம் அப்படித்தான் சொன்னது.

"என்ன ஆளைப்பார்க்கிற பார்வை?" என்ற வார்த்தைகள் அவனைக்கற்பனை உலகத்திலிருந்து பூலோகத்திற்கு இழுத்து வந்தது. அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் அவள் அடுத்துச் சொன்ன வார்த்தைகளும் சிரிப்பும்...

"ஆடுகளை இப்படியே கண்டு மிரண்டு போச்சே உங்கடை மாடுகள்... உதுகளும் ஒரு மாடுகளா?.....ஆருக்கேனும் கண்ட விலைக்கு கொடுத்துவிட்டு நடந்து போங்கோ" என்று சொல்லிச் சிரித்தாள்... கடகடவென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பு உப்பரிகையில் நின்று சிரித்த சீதையின் சிரிப்பா? அல்லது இராசசூய யாகத்தில் துரியோதனனின் தடுமாற்றத்தைக் கண்டு சிரித்த பாஞ்சாலியின் சிரிப்பா?... அவள் சிரிப்பு என்ன விளைவைக் கொண்டு வரப்போகிறதோ! யார் கண்டார்கள்?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் 2

# சிவப்பு



கனக — செந்திநாதன்

ஊர்வலம் முன்னேறியது...

அடுத்த மத்தாப்பு வெடித்தது. எல்லா நிறங்களும் ஒன்றன்பின் ஒன்றாய் மேலெழுந்தன. முடிவில் சிவப்பு,

ஒரு கணம், ஆலமரம், பூமி, ஆகாயமெல்லாம் இரத்த நிறச் சிவப்பாக மாறிவிட்டன. ஆலமுண்ட ஐயன் மன்மதனை எரித்த நெற்றிக் கண்ணைத் திறந்து விட்டானோ என்னவோ? என்று கவிகள் வர்ணிக்கலாம். அல்லது பூரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனாகிய குழந்தை மேகக் கல்லுடன் மோதி அதன் பெருவிரலில் இருந்து விழும் இரத்தத்துளி அது என்று கற்பனைப் புலவர்கள் கதை அளக்கலாம். ஆனால் மாரிமுத்துவுக்கு அந்தச் சிவப்பு மத்தாப்பு தன் கண்களின் கோபச் சிவப்பையே ஞாபகப் படுத்தியது.

'உதுகளும் ஒரு மாடுகளா!' என்று தன்னுடைய 'கடலையும் - திரையையும்' பார்த்துக் கேட்டுச் சிரித்தாளே அந்தச் சிறுக்கி என்பதை நினைக்க, வந்த கோபத்தில் தன் கண்கள் எப்படிச் சிவந்தன என்பதை இன்று அவன் நினைவுத் திரையில் கொண்டு வந்தான்.

பாஞ்சாலியின் சிரிப்பு பாரத யுத்தத்தையே ஆக்கிவிட்டதை அவன் நாட்டுக் கூத்தில் கண்டிருக்கிறான். ஆனால் இந்த வள்ளியம்மையின் - ஆமாம் அதுதான் அவள் பெயர் - சிரிப்பு தன்னை எப்படி ஆக்கிவிட்டது என்பதை இன்று நினைக்கும் போது அவனால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. சிரித்தான்.

பல வருடங்களுக்குப் பிறகு சிரிக்கும் சுதந்தரமான சிரிப்பு அது. சிரித்தான்; பலம் கொண்ட மட்டும் சிரிக்க ஆசைதான். ஆனால் தன்னை யாரும் பார்த்து விடப்போகிறார்களே என்ற பயத்தால் அடக்கமாகவே சிரித்தான்.

மனிதன் வாலிப உணர்ச்சிகளின் பேறாய் ஆராயாது செய்யும் செயல்களைப் பின்னால் எண்ணிப் பார்க்கும்போது, 'எப்படி முட்டாள் தனமாக நடந்து கொண்டோம்' என்றெண்ணித் துக்கப் படுகின்றான்; சிரிக்கிறான். மாரிமுத்துவும் மனிதன் தானே? அதிலும் அதிகப் படிப்பில்லாத - வெள்ளையுள்ளம் படைத்த - அசல் கிராமத்தான் அல்லவா?

அவள் சிரிப்பினால் ஏற்பட்ட கோபவெறியில் இரண்டு மாடுகளுக்கும் மாறிமாறித் துவரங் 'கேட்டி' யினால் வெளுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோசங் கொண்ட மாடுகள் நாய்ப்பாய்ச்சலில் பாய்ந்தும் அவன் அடிப்பதை நிறுத்தவில்லை. அணிலின் முதுகிலுள்ள வரிகளைப் போலக் 'கடலுக்கும் - திரைக்கும்' எத்தனையோ வரிகள் நீளமாகக் கன்றிச் சிவந்து போயிருந்தன.

"வாயில்லாச் சீவன்களைப் போட்டு ஏன் தம்பி அடிக்கிறாய்?" என்ற ஒரு முதியவரின் கேள்விதான் அவனை இந்த உலகுக்குக் கொண்டு வந்தது. மாரிமுத்துவின் முன்கோபம் முல்லைப்பற்றுக் கிராமத்திலேயே பிரசித்தமானது. திடீரென்று பொங்கி எழும் புயல்வேகம், அடுத்தகணம் அடங்கவிடக் கூடியதுதான். ஆனால் அந்த ஒரு கணத்தில்...

"அடியாமல் என்ன செய்கிறது" என்ற பதிலோடு நாணயக் கயிறுகளை அவன் சுண்டி இழுத்தான். மாடுகளுக்குகூட அவன் செயல் புரியவில்லை. அவைகள் நுகத்தடி மேலெழும்ப அந்தரத்தில் முன்னங்கால்களை உயரத் தூக்கி உடனே நின்றன.

"நானும் அந்தச் சந்திவரைக்கும் வாறேன்" என்றார் பெரியவர்.

"சரி! ஏறுங்கோவன்" என்றன் மாரிமுத்து.

வண்டி புறப்பட்டது. "மாடுகள்" அன்ன நடைபோட்டன.

"மாடுகளின்மேலை இவ்வளவு கோபமேன் தம்பி."?

'அதையேன் கேட்கிறியள் ரோட்டிலை ஐம்பது ஆடுகள் கூட்டமாக நிக்க இந்த மாடுகள் வெருளுகுதே, நாளைக்கு இதுகள் என்னண்டு சவாரியோடப் போகுது? நூற்றி இருபைத் தைந்து பவுண் கொட்டி அளந்தேன். வெருண்டாலும் காரிய மில்லை. பெரியவரே! ஒரு பெட்டைச் சிறுக்கி 'உதுகளும் ஒரு மாடுகளா?' என்று சிரிச்சுப்போட்டாளே. அதை நினைக்க...'

"அதுக்காக மாடுகளை அடிக்கலாமோ தம்பி. அதிலை ஆடு மேய்ச்ச பொட்டையா சிரிச்சது? அவள் இந்த மாஞ்சோலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின் அல்லிராணியாச்சே. ஆரும் வாய் கொடுத்துத் தப்பமுடியாது தம்பி. உனக்குச் சவாரிச் சின்னத்தம்பியைத் தெரியுமே? அவன்ரை மகள் தம்பி இவள். அவனோ சவாரி சவாரி என்று திரிந்ததாலை குடும்பமே நாசமாய்ப் போச்சு. காணி பூமி எல்லாம் வித்து மாடுகள் வாங்கினதுதான் மிச்சம். அந்த வள்ளிப் பெட்டைக்கும் வயசாப்போச்சு. கலியாணந்தான் பொருந்து தில்லை. சீதனமும் இல்லை. எல்லாத்தையும்தான் அவன் அழிச்சுபோட்டானே. பரம்பரையாய் வந்த ஆடுகள் தான் மிச்சம். கொஞ்சம் வாய்தான் என்றாலும் வெள்ளை உள்ளம் தம்பி அந்தப் பெண்ணுக்கு. ஆடுகள் என்றால் உயிர் அதுக்கு. அல்லது வீட்டை விட்டு வெளிக்கிடுமா உதுகளை மேய்க்க"? என்று கிழவனார் சொல்லிவிட்டு, 'ஒரு கிள்ளுப் பொயிலை தா தம்பி" என்றார்.

மாரிமுத்துவின் உள்ளம் நிம்மதி அடைந்து விட்டது. வேண்டிய தகவலைச் சேர்த்துவிட்டானே. ஒரு கிள்ளுப்போயிலை கேட்ட பெரியவருக்குப் பாதிப் புகையிலையையே கிழித்துக் கொடுத்துவிட்டான்.

முச்சந்தி வந்துவிட்டது. கிழவனார் விடை பெற்றுக் கொண்டார். வண்டி மூலையில் திரும்பி முல்லைப்பற்றுக் கிராமத்தை நோக்கியது.

அவன் மனதிலும் ஒரு திருப்பம் ஏற்பட்டுள்ளது. ஒரு சிறிய விஷயத்திற்கு இப்படிக் கோபம் வந்துவிட்டதே என்பதை நினைத்து அவன் சிரித்தும்விட்டான். மாடு, வண்டி, சலங்கைஒலி, கடபுடாச் சத்தம் ஒன்றும் அவனுக்கு இப்போது கேட்கவில்லை. கேட்பது ஒன்றே ஒன்றுதான் 'உதுகளும் ஒரு மாடுகளோ" என்பது தான் அது. நினைவில் மிதப்பதும் அவளின் சிரிப்பொலிதான்.

நாட்டுக் கூத்தில் வரும் 'திரிலோகமும் புகழும்' இராசா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஞ்சோலையில் உலாவும் அடுத்த நாட்டு இராச குமாரியைப் பார்த்து 'காதலாகினேன் நானே, செந்தேனே என் மானே' என்று பாடும்போதெல்லாம் அது என்ன பண்டம் என்று அவனுக்கு விளங்குவதில்லை. ஒருவேளை இதுதான் அந்தக் காதலோ?...

மனநினைவு பின்னே தங்கிவிட வண்டி முன்னேறியது.

முல்லைப்பற்றுக் கிராமத்தின் பிள்ளையார் கோவிலின் 'காண்டாமணி' 'டாண் டாண்' என அடித்தது. 'அப்பனே! பிள்ளை யாரே!' என்று தலையில் மூன்று முறை குட்டிக் கொண்டான் மாரிமுத்து. வயல் வெளியை அடுத்த மாந்தோப்பு வளவின்முன் வண்டி நின்றது.

முற்றத்துச் சாக்குக்கட்டிலில் காலைத் தொங்க விட்டபடி புகையிலையைச் சுருட்டிக் கொண்டு ஒரு முதியவர் இருந்தார்.

சலங்கைச் சத்தங்கேட்டதும் அவர் பார்வை வெளிக் கடவையை நோக்கியது. அங்கே மாரிமுத்து மாடுகளுடன் வந்து கொண்டிருந்தான்.

"என்னடா மாரி, மாடுகள் நல்லாய்க் களைச்சிருக்கு. யாரோடையும் சவாரி விட்டியா?" கிழவனின் பொக்குவாயில் புன்னகை. மகனுடைய சவாரிப் பைத்தியத்தை அவர் நன்றாக அறிந்திருந்தவர்தானே

"இல்லை அப்பு; கொஞ்சம் பெலமாய் விட்டுக் கொண்டு வந்தனான்; அதுதான் களைத்திருக்கு" என்று சொல்லிக் கொண்டே மாடுகளைத் தொட்டிலிற் கட்டி விட்டு நாக்கு நுரையை வழித்தெடுத்து ஏரியிற்பூசி 'நாலு தட்டு' த் தட்டினான். வைக்கோலை மடித்து முறுக்கி கழுத்தையும் உடம்பையும், கால் களையும் உரோஞ்சினான். அப்போதுதான், தான் வைத்திருந்த துவரங் 'கேட்டி' மாடுகளின் முதுகில் விளையாடியிருக்கும் விளையாட்டை அவன் நிதர்சனமாகக் கண்டான். 'இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொட்டுக் கண்ணீர்' அவன் கண்வழியே உருண்டோடியது.

வைக்கோலை உதறித் தொட்டிலுக்குள் போட்டு அவை அசைபோட ஆரம்பித்தபோதுதான் அவன் மனம் குளிர்ந்தது. அந்த நேரத்தில்தான் "மாரிவாவேன் சாப்பிட!" என்ற தாயின் குரல் கேட்டது.

எப்போது சாப்பிட்டாலும். "நீ சாப்பிட்டாயா? அப்புவுக்கு மருந்து கொடுத்தியா? பசுமாட்டுக்குத் தவிடு வைத்தியா?" என்றெல்லாம் கேட்கும் மகன் இன்று ஒன்றும் பேசாமல் பாதி சாப்பிட்டுமுடிந்ததும் 'போதும்' என்று சொல்லிவிட்டு எழுந்ததைக் கண்டதும் கிழவிக்கு ஏதோ போல இருந்தது. "என்னடா மாரி வழியிலை ஆரோடையும் சண்டையா?" என்று அவள் கேட்டு விட்டாள். "இல்லை. எனக்குப் பசியில்லை" என்று முணுமுணுத்த படி முற்றத்துக் கயிற்றுக் கட்டிலின் மேல் போய்ச் சரிந்தான்.

மாடு, கன்று, தோட்டம், வீடு ஆகியவற்றைப் பற்றியே இது வரை யோசித்த அவன் மனத்திரையில் இன்று 'அவள்' அடிக்கடி வந்து சிரிப்புக் காட்டினாள். மேலே அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தபடி அவன் படுத்திருந்தான். சந்திரன் ரோகிணித் தையலுடன் கூடிச் சரசமாடுவதுபோல அவனுக்குப் பட்டது. ஒரு சோடி 'மாம்பழ' வெளவால்கள் ஆகாயத்தில் இணை பிரியாது நீந்திச் செல்வது அவன் கண்ணுக்குத் தெரிந்தது. பக்கத்து முருங்கையில் சேவலும் பேடும் அருகருகாக உறங்குவதைக் கண்டு அவன் மனம் மகிழ்ந்தது.

எப்படிக் கண்களை மூடி அப்படி இப்படிப் புரண்டு படுத்துப் பார்த்தாலும் நித்திரை வருவதாயில்லை. வள்ளியம்மையின் சிரிப்பு அவனை வதைத்தது.

சாமக்கோழி கூவிச் சற்று நேரஞ்சென்ற பின்தான் அவன் கண்ணயர்ந்தான். அந்த நித்திரையிலும் அவன் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனாக்கள்...

விடிந்தது. அவசரம் அவசரமாகத் தோட்டவேலைகளை முடித்துக்கொண்டு அவன் புறப்படத் தயாரானான். வண்டியைப் பூட்டி ஆசனத் தட்டில் அமர்ந்து அவன் புறப்பட ஆயத்தமாகும் போது யாரோ கைத்தட்டி, 'மாரிமுத்து' என்று கூப்பிடும் சத்தம் கேட்டது. 'இதேதடா சனியன்' என்று அவன் வாய் அவனை அறியாமலே சொல்லியது. திரும்பிப் பார்த்தான்.

அவனுடைய அருமை நண்பன் சிவகுரு ஓடிவந்து கொண்டிருந்தான்

அவன் ஏதோ சொல்ல வாயெடுக்கமுன் "ஏறு வண்டியில்... ஒரு அவசர காரியம்... மாஞ்சோலை வரைக்கும் போயிட்டு வருவம்" என்றான் மாரிமுத்து.

"அடிசக்கை! நானும் அங்கை தான் போகவந்தேன்" என்று துள்ளி ஏறிக்கொண்டான் சிவகுரு.

தனக்கு நேற்று நேர்ந்த அவமானத்தை - அவளின் சிரிப்பை - பெரியவர் அவளைப் பற்றிச்சொல்லியதை மாரிமுத்து சொல்லச் சிவகுரு 'அடிசக்கை, அடிசக்கை' போட்டுக்கொண்டு இருந்தான். இந்த 'அடிசக்கை' சிவகுருவின் நாவோடு உடன் பிறந்த 'வாய்வாதம்'.

எல்லாவற்றையுங் கேட்டு முடிந்ததும் இந்த 'அடிசக்கை' சிவகுரு அருமையான யோசனையொன்றை வெளியிட்டான். சவாரிமாடு பார்க்கப் போகிற சாட்டிலே சின்னத்தம்பி வீட்டுக்குப் போய் முடியுமானால் வள்ளியம்மையையும் பார்த்துச் சோடி சரிவருமானால் பெரியவர்களைக் கொண்டு தானே இந்தக் காரியத்தை முடித்துவைக்கிறேன் என்பதுதான் அது.

அவன் யோசனையின்படியே சின்னத்தம்பியின் வீட்டுப் படலையில் வண்டியை நிறுத்திவிட்டு இருவரும் உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைந்தார்கள்.

'சின்னத்தம்பி அம்மான் நிற்கிறாரோ?' என்ற சிவகுருவின் கேள்விக்கு 'ஓம் நிற்கிறார்: ஆரது தேடுகிறது? அப்பு உன்னை இங்கை யாரோ தேடுகினம்' என்று சொல்லிக்கொண்டே வள்ளியம்மை எட்டிப்பார்த்தாள்.

ஒரு கணம் அவள் மனது 'திக்' என்றது. 'இந்த ஆள் ஏன் இங்கை வந்தார்; நேற்று நான்... என்ன செய்து விட்டேன்...? சரி, பார்ப்போமே' என்று அவள் மனம் வினாவும் விடையுமாக அங்கலாய்த்தது.

"யார் பிள்ளை வந்து நிற்கிறது?' என்ற கேள்வியோடு வந்த சின்னத்தம்பி மாரிமுத்துவைக் கண்டதும், "ஓ! நீயே? என்ன சங்கதி? மாடு கிடு பார்க்க வந்தியளோ? பிள்ளை அந்தப் பலகைத் தடிகளை எடுத்து வந்து போடு, தம்பியள் இருக்க" என்று உபசரித்தார். பலகைத் தடிகளோடு அவள் வந்தாள். மாரிமுத்து நிமிர்ந்தே பார்க்கவில்லை. அவளும் பார்க்கவில்லை. எங்கேயோ இருந்த வெட்கம் அந்தநேரம் பார்த்து ஓடிவந்து ஒட்டிக்கொண்டது. சிவகுருவின் கண்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தன. 'அடிசக்கை! ஜோடி பிழையில்லை' என்று அவன் மாரியின் காதில் 'குசு குசு' த்தான்.

சின்னத்தம்பியே சம்பாஷணையைத் தொடங்கினார். அந்த ஊரில் நிற்கிற சவாரி மாடுகளின் நிறம், குணம், குறி எல்லா வற்றையும் பற்றி 'ஒரு பாட்டம்' பேசி முடித்தார். தன்னிடம் இருக்கிற 'களுகன் சோடி'யின் வீரப்பிரதாபங்களைப்பற்றி ஒரு 'பாரதம்' அளந்து கொட்டினார். மாடுகளின் கதை எங்கெல் லாமோ போய் சென்ற கிழமை நடந்த 'திட்டிப்புலச்' சவாரியில் வந்து நின்றது.

சின்னத்தம்பி அம்மான் சொன்ன ஒரு விஷயத்தை மாத்திரம்

558071

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுரு. 'அடிசக்கை' போட்டு வரவேற்றான். மாஞ்சோலைக் கிராமத்தின் முடிசூடா மன்னனான இரு மரபுந்துய்யவந்த விசுவலிங்கத்தின் 'பூச்சியன் சோடியை' எப்படியென்றாலும் நாளைக்கு நடக்கப்போகும் சவாரியில் சின்னத்தம்பி அம்மானின் 'களுகன் சோடி' வென்று விசுவலிங்கத்தை 'தலை இறங்கப்' பண்ணவேண்டும் என்பது தான் அது.

சிவகுரு 'இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாக உபயோகித்து மாரிமுத்துவின் சோடியில் 'கடலை'யும், சின்னத்தம்பி அம்மானின் 'களுகன்', சோடியில் 'மயிலையை'யும் நாளைக்குப் பூட்டுவ தென்றும் சவாரியில் மாடுவிடுவது மாரிமுத்து என்றும் இந்தச் 'சோடி'க்கு முன்னால் விசுவலிங்கத்தின் 'பூச்சியன் சோடி' பட்டுது என்றும் உற்சாகமாகப் பேசிமுடித்தான்.

சின்னத்தம்பி அம்மானும் சிவகுருவின் இந்த யோசனை சரிதான் என்று வரவேற்றார். "பிள்ளை! இரண்டு இளநீர் எடுத்து வா; தம்பிமாருக்கு வெட்டிக்கொடுப்பம்" என்ற இதமான வார்த்தையைக் கேட்டதே ஒட்டியிருந்து கதை கேட்ட வள்ளியம்மைக்கும் உச்சி குளிர்ந்தது.

அவள் இரண்டு இளநீரும் கத்தியும் கொண்டுவந்தாள். அதோடு ஒரு 'வெடிகுண்டை'யும் தூக்கிப் போட்டாள். "உவையின்ரை மாட்டை நம்பிச் சவாரி விடாதை அப்பு. நேற்று எங்கடை தெருவிலை ஆடுகளைக் கண்டே வெருண்டது அந்த மாடுகள். குறுக்கை இழுத்துக்கொண்டு ஓடினாலும் ஓடும்." மாரிமுத்துவுக்கு ரோசம் பிறந்துவிட்டது. "நாளைக்கு விசுவலிங்கத்தின்ரை மாடுகளுக்கு இறக்காது விட்டால் இந்த மீசையை எடுத்துவிடுகிறேன்" என்றது அவன் வாய், அவனை அறியாமலே.

அவள் மறுபடியும் சிரித்தாள். நேற்றைய சிரிப்பல்ல; இதமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பு... கடைக்கண் பார்வை. சின்னத்தம்பியும் எதையோ நினைத்தவராய் 'சரி பார்ப்போம்' என்று சொல்லிவைத்தார். 'சரி பார்ப்போம்' என்ற இந்த வார்த்தை வெளிப்படையாக ஒரு பொருளுமற்ற சொற்கூட்டந்தான். ஆனால் 'உள்ளர்த்தம்' எவ்வளவோ நிறைந்தது.

OOO

வண்டியில் மாடுகள் பூட்டப்பட்டன. வள்ளியம்மை தான் தங்களது களுகன் சோடியில் 'மயிலை'யைத் தொட்டிலில் இருந்து அவிழ்த்து வந்து தகப்பனாரிடங் கொடுத்தாள். தனது மகளின் கைராசியில் சினனத்தம்பிக்கு ஒரு நம்பிக்கை.

மாரிமுத்து தனது 'கடல்' என்ற பேர்பெற்ற மாட்டை 'வெளிக்கை'க்கும் சின்னத்தம்பியின் 'மயிலை'யை 'உள்க்கை'க்கும் பூட்டிவிட்டு ஆசனத்தட்டில் அமர்ந்தான். சின்ன தம்பியும் சிவகுருவும் 'கடைக்கிட்டி'யில் பிடித்துக் கொண்டு நின்றார்கள். மாடுகள் அந்தரத்திற் கிளம்பி எகிறிக்குதித்தன. 'அப்பனே! பிள்ளையாரே! என் மானத்தைக் காப்பாற்று' என்று மனதில் நினைத்துக்கொண்டான் மாரிமுத்து.

வள்ளியம்மையும் வேண்டாத தெய்வமெல்லாவற்றையும் வேண்டினாள். கடைக்கிட்டியில் பிடித்தவர்கள் கையை விட்டார்கள். புழுதிப்படலம் கிளம்பியது... திட்டிப்புலப் பெருவெளியில் உள்ள அரச மரத்தடியில் சின்னத்தம்பியின் மயிலைக்குச் சோடியாக மாரிமுத்துவின் கடல் பூட்டப்பட்ட வண்டி வந்து நிமிர்ந்ததும் சவாரி பார்க்க வந்து நின்ற ரசிகர்கூட்டம் மொய்த்துக்கொண்டது.

பன்னிரண்டு சோடி மாடுகள் ஏற்கெனவே வந்து சேர்ந்து விட்டன. சவாரி பொருத்துகிறவர்கள் அங்கங்கே நின்று 'குசு குசு' த்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது சோடி புறப்பட்டுவிட்டது. சனங்கள் தெருவின் இருமருங்கும் துவரங்கம்புங் கையுமாக ஓடி நின்று உற்சாக மூட்டினார்கள். சீழ்க்கை வலித்து ஆரவாரித்தார்கள். இதோ இரண்டாவது சோடி, வாய்க்கவில்லை. 'மெத்துப் படான்'.

சனங்களின் உற்சாகம் குறைந்துவிட்டது. மூன்றாவது சோடியில் பின் வண்டி மாடுகள் குறுக்கை இழுத்துக் கல்லிலே ஏறி விழுந்து புரண்டுவிட்டன. சனங்களின் கூட்டம் அங்கே.

சின்னத்தம்பியின் மாடுகள் ஓடப்போகுது என்று யாரோ குரல்கொடுத்தார்கள். எல்லோரும் மறுபடியும் கூடிவிட்டார்கள்.

புழுதிப்படலம் வானமண்டலத்துச் சூரியனை மறைத்தது. வண்டிகள் புறப்பட்டுவிட்டன. முன்வண்டியாக விசுவலிங்கத்தின் 'பூச்சியன் சோடி' அந்தர பவனத்தில் வருகின்றது. மாரிமுத்து நுகத்தோடு நுகம் அணைந்தவுடன் தன்னுடைய 'கடலு'க்கு இரண்டு 'இழுவை' இழுத்துவிட்டு வாலைப்பிடித்துக் கிளப்பி 'குங்காரம்' இட்டான். அன்றுதான் அவன் வீரத்தின் கொடி யேற்றநாள். அந்தப் பரீசைஷயில் அவன் வெற்றி பெற்றேயாக வேண்டும். அல்லாது போனால்... வள்ளியம்மை வண்டிக்குப் பக்கத்தே நின்று 'உதுகளும் ஒரு மாடுகளோ?' என்று சிரிப்பது போல அவனுக்குப்பட்டது.

சிவகுரு, 'சின்னத்தம்பிஅம்மான்!' என்று குரல் கொடுத்தான். சடார்! சடார்! துவரங்கம்புகள் பறந்தன. சீழ்க்கை ஒலி மிகுந்தது. சனக் கூட்டத்தின் 'ஏய்! கை! சூ!' என்ற கூச்சல் கடலொலியை மிஞ்சியது.

மாரிமுத்துவின் 'கடல்' சரியான இடம்பார்த்து இறங்கியது. சின்னத்தம்பியின் மயிலையும் அதற்குச் சளைக்கவில்லை. பசாசு வேகம்; கால் மைலுக்கு இரண்டு வண்டிகளும் சரிசமனாக ஓடி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ! அதோ! முன் வண்டியாக வந்த விசுவலிங்கத்தின் மாடுகள் மாரிமுத்துவின் மாடுகளை விலத்தவிடுமா? விடாதா?... ஒருவருக்குந் தெரியவில்லை. மாரிமுத்து ஆசனத்தில் இருக்கவே இல்லை. ஏர்க்காலோடு படுத்து மாடுகளின் அடி வயிற்றைத் தடவி 'சூச்சம்' எழுப்பினான். ஓடும் வண்டியில் இப்படியான சாகசவேலை மெத்த அபாயமானது. ஆனால் அன்று கூட அப்படிச் செய்து வெற்றி பெறாது விட்டால்... அவன் வாழ்க்கையே இருண்டுபோய்விடுமே.

விசுவலிங்கத்தின் பூச்சியன்களை நெருக்கி அடித்து தெருவில் முன்னேறிவிட்டான் மாரிமுத்து. அப்பாடா! ஒரே ஆரவாரம். சீழ்க்கை ஒலி.

பாடாத பாடுபட்டுப் படிப்பித்த தன்மகன் பரீசைஷயில் சித்தி யெய்தி உத்தியோகத்திற்கு வெளிக்கிளம்பும் முதல் நாளன்று தாய் அவனைப் புதுவகைப் பார்வை யொன்று பார்ப்பாளே. அதைப்போலத் தன் மாட்டை-கடலை-அவன் புதுவகையாகப் பார்த்துப் பூரித்தான். 'நீ! ராசாதான்ரா' என்று சொல்லி முதுகில் ஒரு தட்டுத் தட்டினான்.

தெருவோரங்களிலும் பற்றைகளுக்குள்ளும் நின்று வேடிக்கைபார்த்த சனங்கள் அரசமரத்தடியில் வந்துகூடி விட்டார்கள். பலர் மாரிமுத்துவையும் மாடுகளையும் மாறி மாறிப் பார்த்துப் புகழ்மாலை சூட்டினார்கள். ஆனால் சின்னத்தம்பி அம்மான் சொன்னவார்த்தைகள்தான் அவன் இதயத்தை அப்படியே குளிர்வித்தன. "மாரிமுத்து! என்ன செய்தாலும் உன்ரைகடல் கடல்தான். சரியான தருணம் பார்த்து இறங்கிச்சுதே. என்ரை மாடும் அவ்வளவு தோல்வி போய்விட வில்லைப்பார். எப்பிடி மாடுகளெண்டாலும் மாடுவிடுகிறதும் ஒருபழக்கம்தான். நீ ஆசனத்தட்டில் இருந்து இண்டைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிராவிட்டால் ஒருக்காலும் விலத்தியிருக்கமுடியாது. சும்மா புளுகுக்குச் சொல்லயில்லை. உண்மை" என்று வர்ணித்தார். 'உதுகளும் ஒரு மாடுகளோ?' என்று கேட்ட வள்ளியம்மை தனது தகப்பனாரின் வார்த்தைகளை ஒருமுறை கேட்டால் என்று அவன் சிந்தனை ஓடியது.

சின்னத்தம்பியின் சொற்களும் மாரிமுத்துவின் சிந்தனை ஓட்டமும் ஒருபுறம் இருக்கட்டும். மறுபுறம் பாருங்கள்! கண்கள் கொவ்வம்பழம் போற்சிவக்க இவர்களைக்கறுவிப் பார்க்கிறாரே. அவர்யார்? தெரியவில்லையா? மாஞ்சோலைக் கிராமத்து முடிசூடாமன்னன் விசுவலிங்கம் அவர்தான். அவர்பார்வை! அந்தப்பார்வை என்ன செய்யும் என்று அவரை அறிந்தவர் களுக்குத்தான் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-10-8
LIBRARY

# உர்வலம்



சு.கே.

நீலம்

ஊர்வலம் மூலை திரும்பி நின்றது. திரும்பிய வேகத்தில் "பெற்றோல் மாக்ஸி"ன் ஒளிவெள் ளம் வேலிப் பூவரசுகளிடையே சிக்கிச் சிதறுண்டு சுழன்றது அந்த ஒளித் துளிகளில் இரண்டொன்று மாரிமுத்துவின் கண்களிலும் பட்டுக் கணத்தில் மறைந்தன.

நாதஸ்வர வித்துவான் 'செஞ்சு ருட்டி' இராகத்தைத் தொட்டுச் சுவைக்கத் தொடங்கிய விதத்தி லிருந்து எப்படியும் அந்த ஊர்வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்வதற்கு அரைமணி நேரமோ முக்கால் மணிநேரமோ செல்லுமென மாரிமுத்துவுக்குத் தோன்றியது. 'செஞ்சுருட்டி' கணத்துக்குக் கணம் உயிர்த்துடிப்புடன் மெருகேறி, இழைந்தும் சுருண்டும், ஊர்ந்தும், ஓடியும் அந்தர வெளியெங்கும் மனமோகன மயக்கத்தை அள்ளித் தெளித்துக்கொண்டு உயர்ந்து சென்றது. அந்தக் கானமழையில் நனைந்து தன்னிலை மறந்த ஒரு நிலை, ஒரு கணப்போது அவனுக்குச் சித்தித்தது.

'டுமீல்'– மாரிமுத்து சிந்தனை கலைந்து வானவெளியைப் பார்த்தான். மருந்தோடு தீ கலந்த வேகத்தில், மாற்றத்தில் மத்தாப்பிலிருத்து நீலப் பூக்களும் இரண்டொரு சிவப்புப் பூக்களும் ஆகாயத்தில் மலர்ந்து மறைந்தன.

மாரிமுத்துவின் மனமத்தாப்புக்கு நினைவு தீவைத்து விட்டது.

சவாரிப் போட்டியில் முடிசூடா மன்னனாக விளங்கிய விஸ்வலிங்கம் மண்கவ்விய செய்தி சனக்கூட்டத்திற் பெரிய பரபரப்பை உண்டாக்கியது. இவ்வளவு நாளும் சாதாரண மனிதனாக விளங்கிய மாரிமுத்து, அப்பொழுது வெற்றி வீரனாக நிமிர்ந்துநின்றான். உலகையே அலட்சியஞ் செய்யும் ஒரு புன் முறுவல் அவன் இதழ்க்கடையில் மலர்ந்திருந்தது. அவனைக் கண்ணாரக்காண ஆவல் கொண்ட சனக்கூட்டம் நெரிந்து திணறியது.

ஒருவாறு கூட்டம் கலைந்தபோது, ஆலமரத்தின் கீழே, வண்டிக் கிராதியைப் பிடித்துக்கொண்டு நின்ற விசுவலிங்கத்தின் கண்களை மாரிமுத்துவின் கண்கள் சந்தித்தன. அந்தக் கண்கள் கோபத்திலும் குரூரத்திலும் தோய்ந்து இரு அக்கினித் துண்டங்கள் போன்று காட்சியளித்தன. ஒரு கணநேரம் மாரிமுத்து திடுக்கிட்டான். அடுத்தகணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு, வண்டியில் மாடுகளைப் பூட்டி ஆசனத்தட்டில் ஏறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்தான். சின்னத்தம்பியும் 'அடிசக்கை' சிவகுருவும் ஏறி இருக்க, வண்டி "ஜல் ஜல்" என்ற சத்தத்துடன் புறப்பட்டது.

அலட்சிய பாவத்துடன் அள்ளிச் சொருகப்பட்ட தலைப் பாகை; இரத்தச் செம்மைபடர்ந்த முகத்தில் துளிர்த்து நின்ற வியர்வை முத்துக்கள்; முறுக்கேறிய தோள்களிலும் மார்பிலும் எண்ணெய்க் கசிவுடன் கூடிய ஒரு பளபளப்பு; இவையெல்லாம் அந்திவானின் செவ்வண்ணத்துடன்கூடி அவனில் விளையாடிய போது, அந்தத் தோற்றம் சின்னத் தம்பியின் மனதில் ஒரு வகை அங்கலாய்ப்பை உண்டாக்கியது. அதனால்தானோ அவர், "தம்பி சால்வைத் துண்டை எடுத்து உடம்பைப் போர்த்திக் கொள்" என்றார். மாரிமுத்து சால்வையால் தன்னைப் போர்த்திக் கொண்டே, "விசுவலிங்க அண்ணரின் கண்களைப் பார்த்தியளோ" என்றான்.

"ஓம், ஓம்; பார்த்தேன். பயங்கரமாயிருக்கு; அதுதான் யோசிக்கிறேன்."

"அதற்கென்ன யோசனை. அவர் என்ன பெரிய கொம்போ?"

"சீச்சி! அப்படிச் சொல்லாதை தம்பி. அவரைப்பற்றி நீ கேள்விப்படவில்லையோ?"

"ஓ, நல்லாய்க் கேள்விப்பட்டேனே. பெரிய சாதிமான்; நடப்புக் காரன்; சண்டியனும் கூட."

"நீ முல்லைப்பற்றில் இருக்கிறதாலை அவரைப் பற்றி உனக்குத் தெரியாது. இந்த மாஞ்சோலைக் கிராமத்திலை பெரிய காணிபூமிக்காரன் அவர்தான். அவர் சுண்டுவிரலை அசைத்தால் இந்த ஊர் ஆடும். முந்தி பாட்டன்காரன் ஒருத்தர் உடையாராய் இருந்து ஐந்து ரூபாய்க்கும் பத்து ரூபாய்க்குமாய் காணியும் வயலுமாக வாங்கிச் சேர்த்து வைத்துவிட்டுக் கண்களை மூடினார். இந்த மனிசன் அதை வைத்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரைக்கசக்கி மணக்கிறான். இப்ப நான் செய்யிற வயலும் அவரிட்டை குத்தகைக்கு எடுத்ததுதான்"

"அடிசக்கை, அதுதான் அம்மான் பயப்படுகிறார். வயலை மறிச்சுப் போடுவாரோ, இல்லையோ?" - சிவகுரு நளினம் பண்ணினான்.

"மறிச்சால் மறிக்கட்டுமே. விசுவலிங்கத்தின் வயல் இல்லாமலே உலகத்திலே எத்தனையோபேர் சீவிக்கிறார்கள்" மாரிமுத்துவின் குரல் கணீரென ஒலித்தது.

"இந்த வயலுக்காக நான் பயப்படவில்லைத் தம்பி. மானத்துக்குத்தான் பயப்படுகிறேன். அந்த மனிசன் ஒரு முரடன். எந்தப் பழிபாவத்துக்கும் அஞ்சமாட்டான். இந்த ஊரிலை கோயிலுக்கும் அவன்தான் மனேச்சர்; பள்ளிக்கூடத்துக்கும் அவன் தான். எல்லாத்துக்கும் அவனேதான். இதெல்லாத்தையும் விட அவன்ரை மைனர் விளையாட்டுக்கள்தான் படு மோசம்... பார் தம்பி, போன தை மாதம் அவன் ஒரு வேலைக்காரப் பொடிச்சியைப் புதிதாய்க் கொண்டு வந்தான். தகப்பன் தாய் இல்லைப் போலிருக்கு; பஞ்சப்பாட்டால் வீட்டு வேலைக்கு வந்ததென்று கேள்வி. பொடிச்சிக்கு ஊரும் புதிசு; மனிசரும் புதிசு. ஆளும் கொஞ்சம் சிவப்பி. அவளை மோசம் பண்ணிப் போட்டு வேறிடம் பார்க்கும்படி சொல்லிவிட்டான். அந்தப் பொடிச்சி அவனைக் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டுதாம். அந்தப் பாவி இரங்கவில்லை. மறுநாள் அவள் பள்ளிக்கூடக் கிணத்துக்கை மிதந்தாள். சவத்தை சோதிச்சுப்பார்த்த டாக்குத்தர் அவள்... அதுதான் தம்பி, அழகான பெண்கள் இந்த ஊரிலை இருக்கப்படாது. வள்ளிம்மையை நினைத்தால் நெஞ்சு 'பக்' என்கிறது" - சின்னத்தம்பியின் கண்கள் கலங்கின.

"அடிசக்கை, அப்படியோ சங்கதி?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரவர் சிந்தனையோட்டத்தில் லயித்திருந்தனர். நீண்ட மௌனம் தூங்கியது.

மாரிமுத்துவுக்கு வள்ளியம்மை என்ற பெயரைக் கேட்டபோது நெஞ்சு குளிர்ந்தது. வள்ளியம்மையின் நினைவு அவன் அங்க அணுக்கள் எங்கும் செறிந்து கிளு கிளுத்தது. முன்பு தன்னையும் தனது மாடுகளையும் கேலி பண்ணிச் சிரித்த அவள் இப்போது வெற்றி வீரனாக நிற்கும் தன்னைக் கண்டு என்ன நினைப்பாள்; எப்படிப் பார்ப்பாள் என்று அந்த நினைவு கற்பனை பண்ணியது. அவன் மனத்திரையில் வள்ளியம்மை தோன்றி, தட்டி மறைவில் நின்று சரசம் புரிந்தாள். நாணம் படர்ந்து செம்மைச் சிவப்பேறிய அவள் முகத்தில், அவளது மனக்கனவுகள் கொள்ளையாய்த் தேங்கிக் கிடப்பதுபோலவும், பெருந்தாகம் கொண்ட கண்கள் தான் பாராதபோது தன்னைப்பார்த்து அழைப்பது போலவும், தான் பார்த்த போது தட்டி மறைவில் மறைந்து விட்ட அவள் கால்விரல்கள் உள்ளக் கதைகளை எழுதிக்காட்டுவது போலவும் அவனுக்குப்பட்டது. மாரிமுத்துவின் 'கூடு' ஆசனத்தி லிருக்க, அவனுள்ளே உள்ள 'அவன்' வள்ளியம்மையிடம் போய்விட்டான்.

காலமங்கை இருட்போர்வையினால் உலகை மூடினாள். வண்டிச் சத்தத்தைக் கேட்டுத் தெருநாய்கள் தங்கள் பாஷையில் ஏசியும் பேசியும் திட்டின. இவைகளை மாத்திரமல்ல. விசுவலிங்கத்தின் வண்டி தனக்குப்பின்னே வருகிறதென்பதைக் கூட அவன் அறியாத நிலையில் வள்ளியம்மையோடிருந்தான்.

"முளைத்து மூன்றிலை விடாத பூடுகள் திட்டிப்புலச் சவாரியில் என்னை வெல்லவோ" என்ற விசுவலிங்கத்தின் ஆங்கார ஒலி அவனை வள்ளியம்மையிடமிருந்து பிரித்தது.

"பார் பார், தம்பியவைக்கு நல்ல பாடம் படிப்பிச்சுக் காட்டிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைப்பற்றாருக்கு மாந்தோப்பு விசுவலிங்கத்தைப் பற்றித் தெரியாது போலை" - இப்படித் தொடர்ந்தது விசுவலிங்கத்தின் குரல்.

"ஓமண்ணை, அதுதானே கேட்கிறேன். எங்கேயோ இருந்து வந்து எங்களுக்கு நடப்புக்காட்டவோ? உவங்களை விடக்கூடா தண்ணை. விடக்கூடாது" - ஒத்தூதப் பிற்பாட்டும் பாடியது ஒரு குரல்.

மாரிமுத்து திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தில் கோபம் கொப்பளித்தது; உதடுகள் துடிதுடித்தன.

"தம்பி, சும்மாயிரு. வண்டியை வீட்டுக்கு விடு. என்னாணை ஒன்றும் பேசாதே" - சின்னத்தம்பி பேசியபோது தெறித்து வந்த பயத்தைப் பார்க்க மாரிமுத்துவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. மாரிமுத்து நிமிர்ந்திருந்து "ஏய்... ஏய்" போட்டான். நாலுகாற் பாய்ச்சலில் ஓடிய மாடுகள் சின்னத்தம்பி வீட்டுப் படலையில் நின்றன. வண்டித்தட்டி திறந்து ஆயத்தமாயிருந்தது. வள்ளியம்மையின் மனக்கதவுந் திறந்து தன்னை வரவேற்பதற்கு ஆயத்தமாயிருப்பதுபோல மாரிமுத்துவுக்குத் தோன்றியது.

"தம்பி மாட்டை அவிழ், கொஞ்சம் ஆறிப் போகலாம்" என்றார் சின்னத்தம்பி. அவர் மகளைக் கூப்பிட்டு "வள்ளி வென்று போட்டோம்" என்றார்.

"இல்லை... நாங்கள்..." மாரிமுத்து வெக்கப்பட்டான்.

"என்னடா அம்மான் கேட்கிறார். கொஞ்சம் ஆறித்தான் போனாலென்ன?" என்று சிவகுரு மாரிமுத்துவுக்குப் பேருதவி புரிந்தான். சின்னத்தம்பி 'மயிலையை' அவிழ்த்து வள்ளியம்மையிடங் கொடுத்தார்.

மாரிமுத்து 'கடலை' அவிழ்த்துக் கொண்டே வள்ளியம்மையைப் பார்த்தான். அவள் மயிலையின் கன்னத்தைத் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுக் கன்னத்துடன் அணைத்துக் கொண்டு மாரிமுத்துவைப் பார்த்து, கண்ணால் மயக்கினாள்! மாரிமுத்துவுக்கு இன்ப வேதனையிலே தேகம் புல்லரித்தது. அவள் செய்ததைப்போலத் தானும் செய்யாமலிருக்க அவனால் முடியவில்லை. தன் 'கடலை'யின் கன்னத்தைத் தன் கன்னத்துடன் அணைத்தவாறு அவளைப் பார்த்தான். அப்பொழுது அவள் கண்களிற் கிடந்த எழுதாக் காவியம் அநந்தம்! அநந்தம்! வள்ளியம்மை 'மயிலை'யின் ஏரியை அன்புடன் மிருதுவாகத் தடவிக்கொண்டே சென்றாள். மாரிமுத்துவுக்கு மலர்க்கரமொன்று தன் தோள்களிற் பட்டும் படாமலும் ஊர்ந்து செல்வதுபோலத் தோன்றியது. கண்மூடி அந்த அனுபவத்தை உள்வாங்கிச் சுவைத்தான்.

வள்ளியம்மை தயாரித்து வந்த கோப்பியை அவள் கையால் வாங்கிக் குடித்தபோது கோப்பியின் சுவை இல்லையாகி மறைந்துவிட, அதில் ஏதோ ஒரு புதுச்சுவை தெரிந்தது. அன்புக்குச் சுவையுண்டானால் அதுதான் இதுவோ! கோப்பி குடித்து முடிந்தவுடன் 'அடிசக்கை' சிவகுரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு திட்டிப்புலச்சவாரியைப் பற்றி வர்ணிக்கத் தொடங்கினான். மாரிமுத்துவோ வள்ளியம்மையின் உதட்டில் நெளிந்த உணர்ச்சிக் குவியல்களை எண்ணிக் கொண்டிருந்தான்.

மாரிமுத்து வண்டியைப் பூட்டிக்கொண்டு வீட்டுக்குப் புறப்படும் போது இருண்டு விட்டது. அரிக்கன் லாம்புடன் வள்ளியம்மையும் சின்னத்தம்பியும் வந்து வழியனுப்பி வைத்தனர். வண்டி படலையைக் கடக்கும்போது, "அவயளைக் கொஞ்சம் கவனமாகப் பார்த்துப் போகச் சொல்லுங்கோ, அப்பு" என்றாள் வள்ளியம்மை. மாரிமுத்து அவளைப் பார்த்து கண் சிமிட்டினான். சின்னத்தம்பி மகளைப் பார்த்துப் பூரித்தார். அப்போதுதான் சின்னத்தம்பிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு இளம் உள்ளங்கள் பேசாமற் பேசி ஒட்டி உறவாடிய மர்மம் விளங்கியது.

நாலு நாட்களின் பிறகு ஒருநாள், தோட்டத்துக்குப் போய் விட்டு வீடுதிரும்பிய மாரிமுத்து, தன் பெற்றோரும் சிவகுருவும் ஏதோ ஒன்றைப்பற்றி வெகு ரசிப்போடு பேசிக் கொண்டு இருப்பதைக் கேட்டு முற்றத்து வேலி மறைவில் நின்று விட்டான்.

“அடிசக்கை, கேள் ஆச்சி அப்படி. முந்தாநாள் விசுவலிங்கத்தின்ரை கையாள், சின்னத்தம்பி யண்ணையின்ரை மோளுக்கும் விசுவலிங்கத்துக்கும் சம்மந்தம் பேசிவந்தார். முடியாதென்றால் அந்த ஊரிலை வாழ ஏலாது. முடியுமென்றால் கிளியை வளர்த்து பூனை கையில் கொடுத்த மாதிரி...” என்றான் சிவகுரு.

“ஏன் கசக்குதோ, விசுவலிங்கத்துக்குக் கொடுக்க, சாதிமான், நல்ல முதிசகாரன்” மாரிமுத்துவின் தந்தை எகத்தாளமாகக் கேட்டார்.

“போ அண்ணை, குலமும், பணமும் ஆருக்குவேணும்? கொஞ்சமாவது மனிச ஒழுக்கம் வேண்டாமோ? பெரிய மனிசனாட்டம் வேஷம் போட்டாற் காணுமோ. அஞ்சு நாளைக்கு முந்தி ‘சுப்பர்வளவு’ மூத்ததம்பி வீட்டோடு நடப்புக் காட்டி இருக்கிறார். மூத்ததம்பியின்ரை மூத்தவன் இவனைப் போல ஒரு போக்கிரிதானே? ‘விசுவலிங்கத்துக்கு முடிவு கட்டுகிறேன்’ என்று திரிகிறானாம். ஒருநாளைக்கு நிச்சயமாய் அவன் கையாலை இந்த விசுவலிங்கம் சாவான். அதுகிடக்கட்டும், சின்னத்தம்பியம்மான் பொடிச்சியை வீட்டிலை வைச்சிருக்கப் பயப்படுகிறார். அந்தப் படுபாவி என்ன செய்வானோ? அது தான் உங்களோடை கதைக்கச் சொன்னார்.”

“எதைப்பற்றி...”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமடா தம்பி எங்கடை செல்லாச்சி அக்கையும் சொன்னா, பொடிச்சி நல்ல சிவப்பியாம். கொஞ்சம் வாய்க்காறி என்றாலும் காரியக்கட்டியாம்" என்றாள் மாரிமுத்துவின் தாய்.

"என்னடி சொல்லுகிறாய்"... தந்தையின் குரல் அதட்டியது.

"சுரக்காய்க்கு உப்பில்லை எண்டுதான். இந்த மனுசனுக்கு ஒன்றும் விளங்காது. வள்ளியை எடுப்பமெண்டுதான்..."

"ஓ! அப்படியா, மாரிமுத்துவுக்கு மனமோ?"

"அடிசக்கை இனியென்ன நாள் பார்க்க வேண்டியது தான்."

சிவகுரு இவ்வளவு தூரம் முன்னேறி,சிரத்தையுடன் காரியம் பார்ப்பான் என்று மாரிமுத்து சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அப்பொழுதுதான் அங்கே வந்தவன் போல மாரிமுத்து வாசலில் ஏறினான். சிவகுரு அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "சரி நான் வரட்டுமா, மாப்பிள்ளை" என்று கூறிக்கொண்டு நடந்தான்.

அடுத்த பூரணை இரவு; இரண்டு வீடுகளிலும் பன்னீரும், சந்தனமும் மணத்தன. குத்துவிளக்கும் பூரணக்கும்பமும் பொலிந்து விளங்கின. தவிலும் நாதஸ்வரமும் இணைந்து இசையெழுப்பின. பொட்டும் பொருத்தமுமாக கலியாணம் நடை பெற்றது. அக்கினி சாட்சியாகவும் சபையோர் சாட்சியாகவும் அம்மி மிதித்து, அருந்ததி கண்டு, மாரிமுத்துவும் வள்ளியம் மையும் மணமக்களாயினர்.

மறுநாட்காலையில் இருட்டோடு எழுந்து மாட்டுப் பட்டிக்குச் சென்ற மாரிமுத்து திடுக்கிட்டு நின்றான். உலகமே சுழலுவது போலவும் பின்னர் அது பிளந்து தன்னை விழுங்குவது போலவும் உணர்ந்தான். தான் காண்பது கனவா, நனவா, என அறியாது தடுமாறினான். கண்கள் "பொல பொல" எனக் கண்ணீர் சொரிந் தன. நாத் தடுமாற "ஐயோ... யோ... போய் விட்டாயா... இராசா" என்று கதறிக் கொண்டு ஓடினான். அங்கே அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருக்குயிராய் நேசித்த 'கடல்', சவாரிப் போட்டியில் வெற்றி மாலை சூடிய காளை, பிணமாய்க் கிடந்தது. உறைந்த கள்ளிப் பாலைக் கொண்டுள்ள சட்டியொன்றும் வேறு நஞ்சுக் கொடிகளும், இலைகளும் பக்கத்திற் கிடந்தன. இது யார் செய்த வேலை? ஆம், வஞ்சந் தீர்ப்பதற்கு அவன்தான் செய்திருக்க வேண்டும். அந்த விசுவலிங்கம்தான் செய்திருக்க வேண்டும். இந்த வாயில்லாப்பிராணியில் வஞ்சம் தீர்த்துவிட்டானே பாவி... கலியாணச் சந்தடியில்... என்று எண்ணம் பரந்தது. அதற் கிடையில் மக்கள் கூடிவிட்டனர். முல்லைப்பற்றிலிருந்து கலியாணத்திற்கு வந்தவர்களுக்கு இது பெரிய அதிசயமாகப் படவில்லை. விசுவலிங்கம் இதுவுஞ் செய்வான்; இதிற் கொடியதுஞ் செய்வான் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் வாய்விட்டுப்பேசப் பயம். மாரிமுத்துவுக்குத் தன் 'கடலை'க் கொன்றவன் கடவுளாயிருந்தாலும் அவனை வஞ்சம் தீர்க்க வேண்டும் போல் தோன்றியது. கையில் அலவாங்குடன் உருத்திரமூர்த்தியைப் போல் நடந்தான். அவனைத் தடுத்து நிறுத்தி ஆறுதல் கூறுவதற்கு அவர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல.

வருடங்கள் இரண்டு உருண்டு சென்றன.

மாரிமுத்து தந்தையானான்; வள்ளியம்மை தாயானாள். அவள் கையிலே பிள்ளைக் கனியமுதொன்று கிடந்து மாம்பழக் கன்னம் குழியச் சிரித்தது. மாரிமுத்துவுக்கு உலகத்து இன்பங்களனைத்தும் உருண்டு திரண்டு தன் மகனுருவிற் கிடப்பதுபோலத் தோன்றியது. நினைக்க நினைக்க நெஞ்சு இனித்தது. குழந்தையின் ஒவ்வொரு அங்க அசைவிலும், குறுநடையிலும்; குதலை மொழியிலும், ஆடிவரும் அழகிலும் மாரிமுத்து கவலைகளை மறந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மகனுக்கு வேடிக்கைகாட்டும் சாக்கில், மாரிமுத்து தன் மனைவியையும் கூட்டிக்கொண்டு மாந்தோப்பு வைரவர் கோவில் திருவிழாவுக்குச் சென்றான். அன்று அந்த வைரவர் கோவில் விசேட திருவிழா. "வைரவர் இருக்கிறாரா?" என்று சந்தேக தோரணையில் கேட்குமளவிற்கு ஆரவாரம் பெருத்த திருவிழா. பேர்போன சிகரங்களும், முத்துச்சப்பரங்களும் முன்வீதியில் அணியணியாக நிமிர்ந்து நின்றன. சோடினை வேலைப் பாடுகளுக்கு அளவில்லை. ஒளிவெள்ளத்தில் வீதி இந்திர பவனம்போல் காட்சிதந்தது. உள்ளே மூலஸ்தானத்தில் ஒரு சுடர் விளக்கு எண்ணெயில்லாமல் துடித்து, இருளின் நெரிப்பினால் செத்துக் கொண்டிருந்தது.

பெரிய மேளச்சமா முடிந்துவிட்டது. சின்னமேளச்சமாவின் ஆரம்பமாக சனக்கூட்டதினிடையே சலசலப்புப் பிறந்தது; சனம் கெம்பியது. இப்படிப்பட்ட தருணங்களிலே ஆளடக்க அந்த வட்டாரத்தில் விசுவலிங்கத்தைத் தவிர வேறு ஆளில்லை. அவர் மதயானைபோலச் சுற்றிச் சுழன்று ஆளடக்குவதே ஒரு தனி அழகு. அவர் கையிலே முறுக்கிக் கயிறாகத்திரித்த சால்வை கிடந்தது. அதனால், அடித்தும் தட்டியும் வாயால் உரப்பியும் ஏசியும் ஆளடக்கிக் கொண்டிருக்கின்றார். வயிற்றைத் தடவிக் கொண்டு அசைந்தாடிய இரட்டைப் பட்டுத் தங்கச் சங்கிலி அவரது வேலைக்கு இடைஞ்சல் கொடுத்தபோதிலும் செல்லமாக அதை எடுத்துத் தோளில் எறிந்துகொண்டு நடந்தார்.

அவர் கண்கள் தூரத்திலே ஒதுங்குகின்ற மாரிமுத்துவைக் கண்டுவிட்டன. தனது பிரதாபத்தை மாரிமுத்துவிற் காட்டுவதற்கு அதுதான் தக்க இடமென எண்ணினார். ஆளடக்குவதுபோல நுழைந்து நுழைந்து சென்று மாரி முத்துவுக்கு இரண்டடி கொடுத்தார். "இரடா, ஒருக்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னால் தெரியவில்லையோ? இதென்ன திட்டிப்புலமென்ற நினைப்போ?" என்று உறுமினார். சபை சிரித்தது. மாரி முத்துவுக்கு ரோஷம் பொங்கிக்கொண்டு வந்தது. இறந்துகிடந்த 'கடல்' நினைவுத் திரையில் தோன்றியது. அதன் பக்கத்திற் கிடந்த கள்ளிப்பால் சட்டியும் தெரிந்தது. அவனை அறியாமலே அவனது கைகள் சால்வையை எடுத்து அரையிற் கட்டிக் கொண்டன. "ஓய், உம்மைப்பற்றி நல்லாய் விளங்கும். மனிதரில் வைத்த கோபத்தை மாடாட்டில் தீர்க்கிற வீரனென்று தெரியும். வாலை முறுக்கினால் ஒட்ட நறுக்கி விடுவேன்" என்று கூறிக் கொண்டு வீறாப்புடன் நின்றான். அப்போது சமயசஞ்சீவியாகப் பக்கத்தில் நின்ற சிவகுரு அவனைப் பிடித்துக்கொண்டான். சிலர் விசுவலிங்கத்தைப் பிடித்துக் கொண்டனர். "சும்மா விடண்ணை, அவன் கிடக்கிறான்" என்று ஆறுதல் கூறினர். திருவிழா முடிந்த போது, சிவகுரு மாரிமுத்துவை அவனுடைய வீட்டுக்குப் போக வேண்டாமெனத் தடுத்தான்; தூரத்தில் குறிவைத்துத் திரியும் விசுவலிங்கத்தின் கையாட்களைக் காட்டினான். கோவிலின் உள்வீதியின் வடமேற்கு மூலையில் அவர்கள் பேசிய விதத்தைச் சொல்லித் தடுத்தான். ஒருவழியாக மாரிமுத்துவையும் மனைவியையும் கோவிலுக்குப் பக்கத்திலிருந்த "சுப்பர்வளவு" மூத்ததம்பி வீட்டுக்குக் கூட்டிச்சென்று படுக்கவைத்தான்.

பொழுது விடிந்தது. திருவிழாப் பார்த்துவிட்டுத் திரும்பிய விசுவலிங்கம் கொலைசெய்யப்பட்டார் என்ற செய்தி ஊரை ஒரு கலக்குக் கலக்கியது.

அதைத்தொடர்ந்து மாரிமுத்து கைது செய்யப்பட்டான்.

மூத்ததம்பியின் மூத்தமகன் மாரிமுத்து விசுவலிங்கத்தைக் கொலைசெய்ததைக் கண்ணாற் கண்டதாகக் கூறினான்.

விசுவலிங்கம் கொலை வழக்கு ஒருவருடத்துக்கு மேலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. அந்த வழக்கில், உண்மையால் பொய்யை வெல்ல முடியவில்லை. பொய்ச் சாட்சிகளின் சோடனையால் மாரிமுத்து வுக்கு இருபத்தைந்து வருடச்சிறைத் தண்டனை கிடைத்தது.

பால்வடியும் தனது அருமை மகனின் நிலவு முகமும், வள்ளியம்மை என்னும் சோக சித்திரமும் துடிதுடித்துச் சோரும் தாய் தந்தையரின் நினைவும் தன்னைப் பின்தொடர்ந்துவரச் சென்ற மாரிமுத்துவைச் சிறைக் கதவுகள் வரவேற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் 4 மஞ்சள்



குறமகள்

**மா**ரிமுத்துவைச் சிறைக் கதவுகள் வரவேற்றன.

சிறை வரவேற்கவா செய்தது?

தன்னிரு கரங்களாலும் வாரியணைத்து இறுகப் பிணைத்து அவன் இளமையையும் இன்பத்தையும் தானே பருகிச் சுவைத்தாயிற்றே. ஆகா! எப்பேர்ப்பட்ட அருமையான அரவணைப்பு. பெற்ற தாய்! அவள்கூட இத்தகைய அன்பணைப்பைத் தரவில்லை. கொண்ட மனைவி! அவள் தந்த அரவணைப்போ இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களே. அன்புத் தனயன்! இரு கைகளாலும் அப்புவின் கழுத்தைக் கட்டியணைத்து முத்தமிட்டது ஒரு வயது முடியும் வரைதான். எரிமலையாகிவிட்ட உள்ளம் கண்ணீரை உலரவைத்து அக்கினிக் காற்றாக்கிப் பெருமூச்சாக வெளிப் படுத்தியது.

டுமீல்... சிறைப்பட்டிருந்த நட்சத்திர மலர்கள் சிரிப்பைச் சிந்தி ஆகாயத்தில் சிதறி மலர்ந்தன. ஆம். விடுதலை என்றால் ஒரு சணத்தில் கருகிப்போகும் மத்தாப்புக்கூடக் களிப்புடன் சிரிக்கிறதே. ஆனால் மாரிமுத்து... அவன் பஞ்சடைந்த - நீர்மல்கிய கண்களுக்கு எல்லா நிறங்களும் ஒரே மஞ்சள் நிறமாகத்தான் தெரிந்தது. எல்லா வர்ணங்களையும் தன்னுள் அடக்கி ஒளி - மஞ்சள் வர்ணத்தையே வெளியே காட்டும் சூரியனைப் போல் - எல்லாவித உணர்ச்சிகளையும் உள்ளடக்கிக் காவி உடுத்துவரும் சந்நியாசியோ இம்மாரிமுத்து.

கூட்ட நெரிசல் கண்ணுக்குத் தெரிந்தது.

மகன்! அந்த மகனுக்குக் கல்யாணம். ம்... அந்த மகன் பிறந்த நாட்கள்...

"இஞ்சை உங்களைத்தானே! பட்டினத்திலை படங்காட்டு றாங்களாம், வள்ளி திருமணமாம்."

"அதுக்கென்ன அதுபாட்டுக்கு நடக்கட்டன். என்ரை வள்ளிக்குத்தானே திருமணம் எப்போதோ முடிஞ்சு போச்சே."

"போங்கோ, எங்கடை காடியவத்தைக் கூத்திலை காக் கொத்துக் கந்தரின்ரை மேனெல்லே வள்ளிக்கு ஆடினது."

"ஓ! ஓ! அந்த வள்ளி இப்ப என்னையல்லே ஆட்டுது."

"சும்மா பகிடியை விட்டுட்டு... இந்த வசுக்கோப்பிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்பிளையும் பெம்பிளையும் சேந்து ஆடுறாங்களாம். பெரிய யானை வருதாம்..."

"உனக்கார் உந்தப் புதினமெல்லாம் சொன்னது? கூட்டாளி நாகம்மாவோ?"

"டேய்! அது ஆசைப்படுது! அதுக்கு நூறு குறுக்குக் கேள்வி!" – இது தாயின் குறுக்கீடு.

"பின்னைச் சரி. வாவன் இந்தப் பெண்டுகளும் வாயிலை வயித்திலை வந்தவுடனை அதிலை ஆசை இதிலை ஆசை எண்டு தாங்கள் நினைச்சதை முடிச்சுப்போடுவினம். நல்ல சாட்டு யாவெண்டு."

ஆசையோடு பேசினான். ஆவலோடு வண்டியில் அலுங்காமல் நலுங்காமல் அழைத்துச் சென்றான். அவன் மாத்திரமா சென்றான் - அந்த முல்லைப்பற்றுக் கிராமமே திரண்டு போனது. யாழ்ப்பாண முத்தவெளியிலே அடிக்கப்பட்ட கூடாரத்தில் "வள்ளி திருமணம்" என்னும் பேசுகிற படக்காட்சி நடந்து கொண்டிருந்தது. அது அவர்கள் வாழ்விலே ஒரு பொன்னாள். நினைத்து நினைத்து அப்பசுமையான எண்ணத்தை வாழ்நாள் முழுவதும் ரசிக்கலாமே. படம் பார்த்துவிட்டு வந்தபின் மாரி முத்துவும் வள்ளியம்மையும் இந்தப் 'புதினமான புதினத்தை' வாய் ஓயாது பேசி மகிழ்ந்தனர். கிழவன் குமரனான அதிசயம் அவர்கள் மனதில் என்றும் நிலைத்ததால் தங்கள் குலக் கொடிக்கு குமாரசாமி என்றே பெயரிட்டனர்.

அக் குமாரசாமி - இன்று எல்லோராலும் மதிக்கப்படும் ஒரு மணமகன். அவனுக்கு ஆசையோடு பெயரிட்ட அன்னை... மத்தாப்பு பல வர்ணங்களை எழுப்பி ஒரு கணநேரம் உலகை ஒளி மயத்திலாழ்த்திவிட்டுக் கரித்துகள்களாக மாறிப் பறந்தது. அவளுந்தான் தியாகத்தின் திருவுருவாகத் தன்னைக் கருக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாளோ?

மாரிமுத்து சிறைக்குச் சென்றபோது குமாரனுக்கு வயது ஒன்று. கோட்டடியில் வள்ளியம்மையும், குழந்தையும், சிவகுருவும் நின்றிருந்தனர். வழக்கின் போக்கையும் நீதியின் தடுமாற்றத் தையும் கண்டு வழக்கு என்ன முடிவையடையுமென்று எல்லோரும் ஊகித்திருந்தனர். வழக்கு முடிந்தது! வள்ளியம்மையின் கண்களைச் சந்திக்கவே அஞ்சினான் மாரிமுத்து. கல்லாக்கிக் கொண்ட தன் மனதைத் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் அவள் எங்கே கலைத்துவிடுவாளோ என்று பயந்தான். பார்க்க வேண்டுமென்ற அவா கட்டை மீறியபோது பார்க்கவே பார்த்தான். அவனால் நம்பவே முடியவில்லை.

அவள் - கண்களில் ஒரு அசாதாரண ஒளி - நம்பிக்கை பொழியும் முகம் - எல்லாவற்றையும் வென்றுவிட்ட உறுதிபெற்ற உள்ளம். துயரமெல்லாம் மூடி உள்ளடக்கி முத்திரையிட்ட வாய். இவற்றோடு அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனது செல்வக் குமாரனும் கைகளைத் தட்டித் தட்டி 'அப்பு, அப்பு' என்று ஆரவாரித்தான். அதன்பின் தான் அவனும் நெஞ்சுறுதியோடு அன்பு பொழியும் அனுதாபப் பார்வையை அவர்கள்மீது செலுத்திவிட்டு உயிரோடு புதைக்கப்படும் சிறைச்சாலைக்குள் மறைந்துவிட்டான். அன்று இந்த வாத்தியார் குமாரசாமி 'அப்பு, அப்பு' என்று வாணீர் வடிய வடியக் கூப்பிட்ட காட்சி...

ம்... ம். சிறை வாழ்க்கை! அந்த நரக வேதனை சொல்லியா தெரியவேண்டும்? அதுவும் வாலிப முறுக்கேறிய மாரிமுத்துவின் உள்ளம் தொடக்க காலத்திலே புரட்சி செய்யத்தான் செய்தது. சிறையதிகாரிக்கு யார் குற்றஞ் செய்தாலன்ன செய்யாவிட்டா லென்ன. அவன் கடமையைச் செய்துகொண்டே வந்தான். சவாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுகள் அவனை இழுத்த காலம் போய், தண்ணீர் வண்டியை அவன் இழுக்கும் காலம் வந்தது. வள்ளியம்மை அமுது படைக்க உண்டு உரமேறிய உடல் மற்றச் சிறைக் கைதிகளுக்குச் சமைத்துப் போட்டு நலிந்தது. ஏர் பிடித்து வயலுழுத கைகள் மடத்தல் ஏந்திக் கல்லுடைத்தன. அன்று வள்ளியின் “உதுகளும் ஒரு மாடுகளோ” என்ற வார்த்தையைக் கேட்டுக் கோபத்தில் மாடுகளுக்குச் சவுக்கினால் அடித்தஅடி இன்று சிறையதிகாரி மனைவியுடன் சண்டையிட்டுவிட்டு வந்த கோபத்தினால் அவனுக்குக் கிடைத்தது.

நரகத்தையும் மோட்சத்தையும் அனுபவிக்க நாம் வேறு பிறவி எடுக்கத் தேவையில்லை. ஏதோ ஒரு வழியில் அவை நம் கண் முன்னேயே நடைபெறுகின்றன. குடியன், சூத்தியன், சூதாடி என்றெல்லாம் பெயர் பெற்ற விசுவலிங்கம் எப்படித்தான் கௌரவப் போர்வையைப் போர்த்தாலும் இவற்றை அனு பவிக்காமலா போகப் போகிறான்?

வருடம் ஒன்று பறந்தது. வள்ளியம்மையையும் இரண்டு வயதுக் குமாரனையும் கூட்டிக்கொண்டு வெலிக்கடைக்கு வந்தான் சிவகுரு. முல்லைப்பற்றுக் கிராமமெங்கே! வெலிக் கடைச் சிறைச்சாலை எங்கே? ஆச்சரியத்தால் விக்கித்துப் போய்விட்டான் மாரிமுத்து. அவள் வனப்பு - வாளிப்பு எல்லாம் இருந்த இடம் தெரியாமற் போய்விட்டது. கஞ்சி கூடக் குடிக்காது காசு சேர்த்து வந்த மர்மத்தை அறிந்துபோது அவன் கண்கள் கண்ணீரைச் சிந்தின. உள்ளம் வெடித்தது. இந்தத் தடவை அவளாலும் கண்ணீரைக்கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு கணம் பிரிவின் ஆராமையால் இருவரும் கோழைகளாக மாறிவிட்டனர்.

அநியாயமாக ஒருவன் தண்டிக்கப்பட்டால் அவன் துக்கத்தால் அழுவதில்லை. அவமானத்தால், ஆத்திரத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிப்பான். தன்மீது சோடித்துவைத்த பொய்ச்சாட்சிகளைக் கண்டு பொருமுவான். அவர்களைத் தயார்பண்ணி வைத்தவர் களைக் கண்டு பொங்குவான். பழிக்கு பழி வாங்க வேண்டு மென்று துடிப்பான். அதுவும் தண்டனையை அனுபவிக்க அனு பவிக்க இப்படியான வெறிஏறிக் கொண்டே போகும். எப்பேர்ப்பட்ட நல்லவர்களும் அபாண்டப்பழி சுமத்தப்பட்டவுடனே தம் நல்ல குணங்களை இழந்துவிடும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். கயவர்களாக மாறிவிடுவார்கள். சமூகமே ஒரு பொதுநல வாதியை சமூக விரோதியாக்கிவிடும். அந்நிலையில் தானிருந் தான் மாரிமுத்து. அவன் நல்ல பண்புகள் அவனையறியாமலே விடை பெற்றுக் கொண்டிருந்தன. அந்த நிலையைக் கடந்து அவன் வெற்றிபெறுவானானால் அவன் தான் மனிதருள் மனிதனாகக் கருதப்படுவான். ஆனால் அவனும் ஓர் சாதாரண மனிதன்தானே? அதுவும் தனது ஆசைக்கனி-அன்புக்கிளி வள்ளியம்மையின் உடம்பைக் கண்டதும் அவன் ஆண்மை பொங்கியெழுந்தது.

எவனாலோ அவள் வாழ்வு பறிபோவதா?

"அது எங்கடை விதி ராசா. கடவுள் விட்ட வழியைக் காணுவம்." வாயாடி வள்ளியம்மையா பேசுகிறாள். ஆற்றாமை யோடு பெருமூச்செறிந்தான் மாரிமுத்து.

"அநியாயம் செய்தவர்களைச் சாமி தண்டிப்பார். நீ என்னாணை ஏறுமாறாய் ஒண்டும் செய்து போடாதை!"- இது சிவகுரு

"அது என்னத்தைச் செய்யும்? இஞ்சை பார் எலும்பெலும்பாய் தெரியுது"

"அது போகட்டும் சிவகுரு. உன்னாலைதான் வள்ளியம்மை எனக்குக்கிடைத்தாள். அதைப்போல இப்பவும் உன்னாலைதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் குடும்பம் மானத்தோடு வாழுது. என்ரை பிள்ளையை நல்லாய்ப் படிப்பித்து ஆளாக்கிவிடு. அவனை அடிக்கடி இஞ்சை கூட்டிவராதை.

"அவன்ரை பிஞ்சுமனம் வேதனைப்படும். சின்னனுகள் கெதி யாக ஆத்திரப்பட்டுப் படிப்பை விட்டுடுங்கள். அவன் தலை யெடுத்த பிறகு நான் சுத்தவாளியென்று அறிந்தால் போதும். வள்ளி, பிள்ளையைக் கவனமாகப் பார்த்துக்கொள். அவனாலும் அப்பன் குற்றமற்றவன் என்பதை ஊருக்குக் காட்டட்டும். என்ன வள்ளி நீ உப்பிடிப் போனால் ஆர் குழந்தையைப் பாக்கிறது?"

"இதுகளைப்பற்றி நீ கவலைப்படாதை. நான் எல்லாம் பார்த்துக்கொள்ளுறன். நானுமல்லே மாடவிழ்க்கப்போறன். வள்ளியின் கூட்டாளி நாகம்மாதான்."

"ஓ... ஓ... பேந்தென்ன வள்ளிபாடு கொண்டாட்டந்தான். கூட்டாளிகளுக்கை போராட்டம் தொடங்கினால்தான் திண்டாட்டம்..."

கதைகள் சுற்றிச் சுழன்று புறப்படும் நேரம் வந்தது. மிகக் கஷ்டத்துடன் ஒருவரை ஒருவர் தேற்றிக்கொண்டு விடைபெற்றுக் கொண்டனர். மாந்தோப்பு வளவு, வழக்குக்காக விலைப்பட்டதை மட்டும் சொல்லவில்லை. அடுத்த வருடம் காண்போமென்ற அசட்டு நம்பிக்கையை நினைவில் வைத்துக்கொண்டு பிரிந்தனர்.

நினைவா அது? கனவு. ஆம், கனவேதான். சிறைக் கூடத்திற் கிடைத்தனர் சில சிங்கள நண்பர்கள். அவர்களிடம் சகோதர மொழியையன்றி வேறு எத்தனையோ கலைகளையுங் கற்றுக் கொண்டான் மாரிமுத்து. முடிவில் நாட்டில் மஞ்சள் உடைக்கிருக்கும் மதிப்பைத் தமக்குப் பயன்படுத்த யோசித்தான். ஆம்! சிறையை விட்டுத் தப்பி ஓடிச் சிலநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளித்திருந்து, பின் பிக்கு வேடமணிந்து ஊருக்கு ஓடிவருவ தென்ற திட்டம்.

மஞ்சள் அங்கி! மங்கலப் பொருளாயிருப்பதும் மஞ்சள். ஆனால் இலையுதிர் காலத்திலும் உலகமெல்லாம் மஞ்சள் போர்வைக்குள் தான் காட்சியளிக்கிறது. மனிதன் வாழ்வு வெறுத்து சன்னியாசம் கொள்ளும்போதும் மஞ்சள் உடைக்குள் தான் நுழைகிறான். மரஞ்செடி கொடிகளும் மஞ்சள் நிறம் பெற்றவுடன் மங்கிவிடுகின்றன. மஞ்சள் அங்கியில் மாறுவேடம் புனைய நினைத்த மாரிமுத்துவின் வாழ்க்கையும் மங்கத் தொடங்கியது.

பின்னிரவு. பதுங்கிப் பதுங்கிச் சென்றுகொண்டிருந்த மாரிமுத்துவின் தலையில் ஒரு குண்டாந் தடியடி. சிறைக் காவலரிடம் தப்பியும் நகர்காவலரிடம் தப்ப முடியாத மாரிமுத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான்.

"துரதிருஷ்டம் படைபடையாகத் தொடர்ந்து வரும்" என்பதற்கு மாரிமுத்துவின் வாழ்வு ஒரு சான்றோ?

உடலாலும் உள்ளத்தாலும் நலியத் தொடங்கிய வள்ளியம்மை இன்னொருமுறை கணவனைச் சந்திக்கும் பாக்கியத்தைப் பெறாமலே, குமாரனைச் சிவகுருவிடம் ஒப்படைத்து விட்டுத் தீராத ஏக்கத்துடனும் மாளாத துயரத்துடனும் மடிந்துவிட்டாள். சிகிச்சை பெற்று வந்த மாரிமுத்துவுக்கு இது பேரிடி. எவளொருத்தியை அவன் வாழ்வின் இலட்சியம் என்று கருதியிருந்தானோ - எவளொருத்தியை தன் மனச் சிறையிலிருத்திச் - சீராகச் சிறப்பாக வைத்திருக்க வேண்டுமென்று கருதியிருந்தானோ - எவளொருத்திக்கு அன்பு பாராட்டி ஆசையைப் பொழிந்தானோ - அவள் இன்று மண்ணோடு மண்ணாகிவிட்டாள். உள்ளத்தின் மூல வேரிலே ஆட்டங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டது. உலகில் தனக்கென ஒன்று மில்லை என்ற சூன்ய நிலை. குமாரன் தொடு வானத்தில் 'மினுக் மினுக்' என்னும் ஒரு சிறு நட்சத்திரமாகத்தான் காட்சியளித்தான். அவனா வழி காட்டப் போகிறான்? இனித் தான் யாருக்காக வெளியேறவேண்டும் என்ற விரக்தி மனப்பான்மையோடு எதிலும் பட்டும் படாமலும் சிறை வாழ்க்கையை மேற் கொண்டான். பெற்ற தாய், தந்தை, மனைவி, வீடு, வாசல் எல்லாவற்றையும் இழந்து விட்ட அவனுக்கு, சிவகுருவும் முல்லைப்பற்றுக் கிராமமும் ஒரு கனவுலகக் காட்சியாகத் தெரிந்தது. அன்று தொடக்கம் சிறைவாழ்வில் ஒன்றிவிட்ட மாரிமுத்து கூடிய சீக்கிரமே அதிகாரிகளின் நன்மதிப்புக்குப் பாத்திரனானான்.

இலங்கைச் சுதந்திரதினம் வந்தது. அந்த மகத்தான தினத்திற் கைதிகள் சிலருக்கு விமோசனம் கிடைத்தது... சுதந்திர தினத்திற்கு முதல் நாள் இரவு விடுதலையாக வேண்டிய கைதிகளின் பட்டியல் வாசிக்கப்பட்டது; அதில் பதினைந்து வருட சிறைத் தண்டனையை முடித்திருந்த மாரிமுத்துவின் பெயருங் காணப்பட்டது.

சிறைச்சாலைக் கதவுகள் அகலத் திறந்துகொண்டன. உரிமைகளை - உணர்ச்சிகளை அடக்கி யொடுக்கி வைத்த அந்தப் பாரிய சிறையின் அனுபவம் அப்பப்பா! மகா கொடுமை நிறைந்தது. மாரிமுத்து நெடுமூச்செறிந்தான். எதிர்பாராத விடுதலைதான்! ஆனால், இந்த விடுதலை இன்பத்தை அவன் எங்கே சென்று கழிப்பது? அன்னை தந்தை அழகான மனைவி அனைவரும் அழிந்தொழிந்தபின்...

ஏன் அவன் ஒரே மைந்தன்?

உள்ளுணர்வு எழுப்பிய அந்த ஒரு கேள்விக்குள் குறுகிச் சுருண்டு கொண்டான். ஆனால் தொடர்ந்து வந்த உணர்ச்சியிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயமான ஞான உபதேசம்...

அந்த மகனைக் காணுவதினால் இதயம் நலம் பெறலாம். ஆனால் இதுவரை அனாதையாக வளர்ந்து நல்ல எதிர் காலத்தை நோக்கிச்செல்லும் அவனைக் குறுக்கிட்டுக் கெடுப்பதா?

வேண்டாம்!

விரக்தி கவிந்த மனநிலையுடன் ஒன்றும் தோன்றாது சிறைவாசலிலே நின்ற மாரிமுத்துவின் தோளில் ஸ்பரிசம் பட்டது; திரும்பினான். அவனுடன் கைதியாகவிருந்து இன்று வெளியேறிய அப்புகாமியின் திட்டத்தை அவன் வரவேற்றான். சிறையிலே கிடந்து தவித்த அப்புகாமி கதிர்காமத்துக்கு நடந்து போகப் போகிறனாம்.

மாரிமுத்துவும் அவனது எண்ணத்துக்கு இசைந்தான். அது மாசி மாதம் நாலாம் திகதி. இலங்கை சுதந்திரம் பெற்ற நாள். அந்தநாள் தொடக்கம் காலியை நோக்கிச் செல்லும் பாதை வழியே இருவரும் நடக்கத் தொடங்கினார்.

நாட்கள் நாற்பத்தைந்துக்கு மேலாகிவிட்டன. வீதியை வாசஸ்தலமாகக்கொண்டு அவர்கள் செய்த யாத்திரையின் முடிவு நெருங்கியது. அதோ கதிர்காமம்.

மாணிக்க கங்கையின் இன்ப அலைகள் சுரந்து கரை வந்து தொட்டு விளையாடும் வனப்பு. எழிலாந்த புள்ளினங்கள் சிற கடிக்கும் இன்பம். யாத்திரிகர்களின் ஸ்நானலயிப்பு. அனைத்தும் அவர்களைக் கவர்ந்தன.

நடந்த களைப்பும், நெஞ்சின் வாதையும் ஒன்றாக அந்த நதியில் ஐக்கியமாகிவிட்டதா? அப்புகாமியும் மாரிமுத்துவும் அந்த நதியில் குளித்துக் கோவிலுக்குச் சென்றனர்.

"முருகா! முருகா!"

பக்தர் குழாமின் பக்தி ஓலம். எங்கும் சுடர்விடும் கற்பூரத் தீ; இனிய பண்ணிற் தோய்ந்துவரும் தேவார இசை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற காலத்திய இன்னலும் எதிர்காலத்திய பிரச்சனைகளும் தலைகாட்டாத மோனம் சூழ்ந்த ஆலயத்தினுள்ளே சென்று வணங்கி புனித இதயமுடன் வெளிவந்தனர் மாரிமுத்துவும், அப்புகாமியும்.

அங்கே மரத்தின் அடியொன்றில் நீண்ட தாடியும், மஞ்சள் அங்கியுமாக ஒருவன். அவன்... ...

மாரிமுத்து நிமிர்ந்து பார்த்தான். காலமென்ற புழுதியிலே சிறிது சிறிதாக மாற்றமடைந்திருந்தாலும் அந்தப் பிரகிருதியை மாரிமுத்துவினால் இனங்காண முடிந்தது.

நெருங்கினான்.

அந்த உருவமும் – அதாவது தற்போதைய சந்நியாச நிலையிலிருக்கும் முத்துவேலுவும் – கவனித்தான். முத்து வேலுவின் கண்களில் சுரப்பதென்ன? உண்மைக் கண்ணீரா அல்லது நடிப்பா? மாரிமுத்து பித்துப் பிடித்தவன்போல் நின்றான்.

முத்துவேலு நடந்து வந்து மாரிமுத்துவை அடைந்தான். "கதிர்மாத்தானின் சந்நிதிக்கு வந்தேன். ஆனால் எனது மனதிலே அரிக்கும்...

"என்ன?"

"உன்னைப் பொய்ச் சாட்சி சொல்லி மறியலுக்கு அனுப்பி வைச்சன். எனது வைராக்கியத்தைத் தீர்க்க வந்த நான்தான் கொலையாளி. ஆனால் அந்தப் பலன் அடுக்கடுக்காக எனது குடும்பமழிந்து ஒரேயடியாய்... ..."

விக்கலுக்கிடையே அவன் திக்கிச் சொன்னவை பல. மாரிமுத்து அவனைத் தேற்றி "போனவை போகட்டும்; இந்தக் கதிர்காமத்தான் சந்நிதியில் உன்னை நான் மன்னித்து விட்டேன்" என்றான். மாரிமுத்துவின் இச்செய்கை முத்து வேலுவின் மனத்தை உருக்கியது.

மாரிமுத்துவும், அப்புகாமியும், முத்துவேலுவும் கதிர்காமத் திலுள்ள தேநீர்க் கடையொன்றுக்குள் புகுந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம்



**எஸ்.பொ**

# கத்தரி

அர்த்த சந்திரன் அஸ்தமிக்க, வானத்தில் இருள் குவிகிறது...

அரைத்தூக்கத்தில் கண் சிமிட்டும் விண்மீன்கள்.

செழுங்கிளை தாங்கி இருள் விரிக்கும் ஆலமரம்.

அதன் கீழே இருபத்தைந்து வருட வாழ்க்கைப் பாதையிலே மனதை மேயவிடும் மாரிமுத்து.

ஒரு வினாடிப் பொழுதின் பின்னத்தில் வானத்தின் இருளைக் கிழித்துக் கொண்டு கிளம்பும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தாப்பின் ஒளித்துளிகள். வெள்ளிகளுக்கு ஒளியூட்டும் நினைவுடன், மருந்து கொடுத்தவேகத்தில் மேலெழும் ஒளிப் பந்துகள், அந்தரத்தில் பயணம் தடைப்பட்டுக் கீழே இறங்கி, மறுபடியும் சூன்ய இருளுடன் இருளாக... ஒளிப்பந்துகள் சதிராடிய அரங்கமும், ஒளிவீதியும் மறைய...

மீண்டும் வானத்தில், வண்ணத்திற்கு ஒன்று வகைக்கு ஒன்றாகப் பூக்கும் மலர்களைப்போல எழில்காட்டும் மத்தாப்பின் ஒளிப்பந்துகள்!

ஆலமரத்தின் மேலே சிந்தும் ஒளித்துளிகள். வானிலிருந்து அறுந்த நட்சத்திரங்கள் தன் சென்னியில் விழும் மயக்கத்தை மாரிமுத்துவுக்குத் தருகிறது. கணத்தின் துகட்பொழுதில் பரவிய ஒளிப்பிரவாகத்தில், ஆலின் அடியில் அதனுடன் தழுவி வளரும் அரசங்கன்றொன்று அவன் கண்களிற் படுகின்றது. அவன் கைதியாக முல்லைப்பற்றுக் கிராமத்தை விட்டுச் சென்ற அந்தக் காலத்தில் அந்த மரம் அங்கு கிடையாது.

இப்பொழுது?

இருப்பன இல்லையாகி, இல்லாதன இருப்பனவாகி, சிறியன உப்பிப் பருத்துப் பெரியனவாகி, பெரியன முதுமை எய்தி, தேய்ந்து, அணுவணுவாக மங்கிப்போகும் விந்தைகளும், அனந்தகோடி அநித்திய மாற்றங்களும் நிகழும் வாழ்க்கையின் ஒற்றைவழிப் பாதையைத் திரும்பி நோக்கும் மாரிமுத்து, தன் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய......

வாழ்க்கை?

காலவெள்ளத்தின் நீர்ப்பரப்பிலே சுழிந்து, குமிழ்ந்து, சூனிய உள்ளடக்கத்தை வைத்து உருவம் காட்டி, அற்ப வினாடிப் பொழுதின் சிறுபின்னத்தில் நித்திய யாத்திரை செய்ய முனைந்து, அநித்தியத்திற்குள் நித்தியமாகிவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்க்குமிழியாக..... இல்லை ஆலங்கிளைகளுக்கு மேலே, அரைத் தூக்கத்திற் கண் சிமிட்டும் நட்சத்திரங்களுக்குக் கீழே, அந்தர வெளியில், ஒளியின் சித்து விளையாட்டுக்களில் பம்மாத்துக் காட்டி, மீண்டும் சூனியத்துடன் சூனியமாகிவிட..... அந்த ஒளிப்பந்துகளைத் தன்வயிற்றிற் சுமந்து, பின்னர் தீயின் வாதனையில் அவற்றைப் பிரசவித்த கொட்டு, வெறும் கொட்டாகச் சாம்பல் படிந்த அழுக்கு நிலையில் கிடக்க, அதைச் சடலமென்று சொல்லிக் கட்டையுடன் கட்டையாக அடுக்கி இடுகாட்டில் சாம்பராக்கிவிட....

அப்புறம்?

அந்த வினாவின் உள்ளடக்கமான சூனியம் மாரியின் உள்ளத்திற் பரவிப் படர்கின்றது... மத்தாப்பிலிருந்து எழும் பச்சை ஒளிக்கதிரின் பசுமையுடன் அரசமரத்தடியில் அவனுடைய வாழ்க்கையின் திசையை மாற்றியமைத்த அந்தச் சம்பவம் உரம் உண்டு வளர்கின்றது.

**க**திர்காமத்தைவிட்டுப் புறப்பட்ட மாரிமுத்து, அப்புகாமியுடன் மலைநாட்டிற்கு வந்தான். அப்புகாமிக்கு மாத்தளை தான் பிறந்த மண். அங்கு ஏதாவது வேலைதேடிக் கொள்ளலாமென்ற நம்பிக்கையை, அவன் மாரியின் உள்ளத்தில் வளர்த்திருந்தான். குற்றமற்ற தன்னைக் கொலைகாரனாகக் கற்பித்த முல்லைப் பற்று அவனுக்குப் பிணம் எரியும் சிதையாகத் தோன்றியது... அவர்கள் கண்டியை அடைந்தார்கள்.

அங்கு மாத்தளைக்குச் செல்லும் பஸ்ஸிற்காக அவர்கள் காத்திருக்கும் பொழுது, அந்தப் பக்கமாக வந்த தரகர் தம்பையா, மாரியை அடையாளம் கண்டுகொண்டார். முல்லைப் பற்றிலிருந்து ஏழு மைல் தூரத்திலுள்ள பட்டினமே அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த ஊராயினும், சுற்றுவட்டாரத்திலுள்ள பிராந்தியமெல்லாம் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு. ஆளும் வெகு 'சுழியன்'. புகையிலைத் தரகு, மாட்டுத் தரகு, கல்யாணத்தரகு முதலிய பல துறைகளிலும் பாண்டியத்தியமுள்ள சகலகலாவல்லவர். சிறையில் பல வருடங்கள் வாடி அல்லலுற்று, உருக்குலைந்து போயிருக்கும் மாரியை இப்பொழுதும் அவரால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது என்றால், அதற்கு அவருடைய தரகுக் கலை ஞானமும், ஞாபக சக்தியுமே காரணங்களென்பது உண்மை. கண்டிக்கு, முதலாளி சங்கரப்பிள்ளையின் மகளுடைய கல்யாண விஷயமாக வந்திருக்கிறார்.

"நீ..." என்று சிறையைப்பற்றி விசாரிக்க நினைத்த அவர், மாரியின் முகத்தில் தோன்றிய சுருக்கங்களினால் பின்னடைந்து, கேட்கக் கருதிய கேள்வியை விடுத்து, "இங்கை எப்ப வந்தனீ?" என்பதுடன் முடித்துக்கொண்டார். தரகர் தம்பையாவின் சிறப்பியல்புகளுள் ஒன்று மனமறிந்து பேசுவதும்.

"வேலையொண்டு தேடுகிறனண்ணை?'

"வேலை றோட்டிலையா போட்டுக்கிடக்குது?"

"மாத்தளையில் ஏதோ..."

"இங்க, நீ என்னோட பேக்கதை கதைக்காமல் வா. இஞ்சையுள்ள மூலைக்கடையொண்டிலை சேத்துவிடுறன்... ஏன்? சங்கரப்பிள்ளை முதலாளியும் என்ரை கூட்டாளிதான். அவனிட்டையே வேலை இருக்கு வா."

மாரிமுத்து அப்புகாமியைப் பார்த்துத் தயங்கினான். ஆனால் அப்புகாமி ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை.

அடுத்த தினமே மாரிக்கு சங்கரப்பிள்ளையிடம் வேலை கிடைத்தது.

கீரிமலை - சுதுமலை ஆகிய மலைவளங்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமானாறு போன்ற நதிவளமும் பெற்றும், வானம் பொய்க்கும் புண்ணிய பிராந்தியமான யாழ்ப்பாணப் பகுதியின் மக்கள், வறுமையுடன் நடத்தும் நித்திய போராட்டங்கள் காரணமாகத் தென்னிலங்கையிலும், மலைநாட்டிலும் பல 'மூலைக் கடைகள்' நடத்திவருவதை யாவரும் அறிவார்கள். கப்பலோட்டிய தமிழனின் வீரமெல்லாம், மூலைக்கடை வியாபாரத்தில் முடங்கிக் கிடப்பினும், ஒரு புகையிலைக் கட்டின் மூலதனத்தில் நிறுவப்படும் அவை சீக்கிரமே பொருள் குவிக்கும் பெரிய ஸ்ரோர்களாக மாறுவதற்கு அவர்களுடைய கருமித்தனம் மட்டுமல்ல, சாமர்த்தியமும் காரணமென்பதையும் நினைத்துப் பெருமைப்படலாம். தன் சாமர்த்தியத்தினால் முன்னுக்கு வந்துள்ள பலருள் சங்கரப்பிள்ளையும் ஒருவர். அவரிடம் 'லகர'த்தில் மூலதனமுள்ள ஸ்ரோர் மட்டுமெல்லாமல், மூன்று நான்கு லொறிகளுமிருந்தன. பேச்சுடன் லேசாகத் தனது லொறி ஒன்றிற்கு ஒரு கிளீனர் தேவைப்படுவதாகவும், தனக்கு இந்தச் 'சிங்கள மோடை'யன்களில் நம்பிக்கையில்லாததினால், ஓர் ஊர் பிறந்தவனையோ அல்லது இந்தியனையோ தேடி வருவதாகவும் தெரிவித்திருந்தார். தரகர் தன் கைவரிசையைக் காட்டி, தனக்குக் கண்டியிலுள்ள செல்வாக்கை நிருபித்ததுடன், மாரிமுத்துவுக்கும் கைமேலே வேலையும் சம்பாதித்துக் கொடுத்துவிட்டார்.

மாரிமுத்துவுக்குப் பொறியியற் சூட்சுமம் இணைக்கப்பட்டது போலானான். இயந்திரமாக இயங்கினான். லொறி ஸ்டேஷனுக்கும், கடைகளுக்கும் மாறிமாறிச் சென்று திரும்பும். சாமான்கள் ஏற்றப்படும் - இறக்கப்படும். இந்த நித்திய வேலையின் ஒரு அங்கமாக இயங்கினான் மாரிமுத்து. மாத முடிவில் சம்பளம் கிடைப்பதுடன், நாள் தவறாமல் முதலாளியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏச்சும் பேச்சும் 'கிம்பள'மாகக் கிடைக்கும். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது வேலை செய்துவந்தான் மாரிமுத்து.

அடிக்கடி மகன் குமாரசாமியின் எண்ணமும், 'அடி சக்கை' சிவகுரு தம்பதிகளின் நினைவும் மனதிற் கிளை விடும். சிவகுருவைப் போன்ற ஒரு தங்கமான நண்பனைப் பார்த்து, மகனைப் பற்றி விசாரித்து... 'அவர்களைப் பொறுத்தவரையில் நான் நினைவிலிருந்து அழிந்துவிட்ட கனவு போன்றவன். ஏன் அவர்களைப் பார்த்து அவர்களுடைய நிம்மதியைக் குலைக்கவேண்டும்?' என்று எதிர்வாதம் செய்து தழைக்கும் கிளைகளைத் தறிப்பான். இந்த விவகாரம் சிறுவர்கள் விளையாடும் 'கிரி கிரி'ப் பந்து மாதிரி.....

இதற்கிடையில் இரு ஆண்டுகள், கலியுகத்தின் கால வெள்ளத்தில் சுழிந்துசென்று, இறந்தகாலமென்ற கடலுக்குள் மறைந்தன.

அப்பொழுது ஒரு நாள்... மாரிமுத்துவின் உடல்நிலை தளர்ந்து, உள்ளத்தில் சோர்வு குமைந்தது. கைகளும் கால்களும் குத்தலுடன் உளைந்தன. ஒவ்வோர் அங்க அணுவிலும் ஊசிகொண்டு குத்திப் பிய்ப்பதைப்போன்ற வலி. தனக்குக் 'காய்ச்சல் காய்வதாக' முதலாளியிடம் தெரிவித்தான். அவருடைய உள்ளம் ரூபா நோட்டுகளிலான மலட்டுத் திடல். "நாளைக் காலமை ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்துத் தண்ணி வாங்கலாம்" என்று விஷயத்தைச் சுண்டங்காயாக்கி விட்டார். இருப்புக்கொள்ளாத வேதனை மாரிக்கு. நெருஞ்சிக் காடாகக் குத்தும் படுக்கையில் புரள முடிய வில்லை. நோய் தன் உடலில் பாய்ச்சியிருக்கும் பலஹீனத் தையும் மறந்து, வேதனையை மறக்கும் வேட்கையில், கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துச் செல்லும் வழியே நடக்க ஆரம்பித்தான். தான் கண்டியிலிருந்து தென்கும்பரைக்குச் செல்லும் பாதையில் நடந்து செல்வதை நிதானிக்கிறான். இரவு நேரமாகிவிட்டது. தூரத்திற்குத் தூரம் மின்சார கம்பங்கள். பல்புகள் என்றழைக்கப் படும் கண்ணாடி குமிழிகளுக்குள் சிறைப் பட்டுவிட்ட மின்மினிப் பூச்சிகளின் சோபிதத்துடன் அவை மங்கிய ஒளியைப் பரப்புகின்றன.

அவன் எவ்வளவு நேரம் நடந்தானோ? எவ்வளவுதூரம் நடந்தானோ? தலை சுற்றுவதாகப் பிரமை தட்டுகிறது. மயக்கம் தன் விட்டத்திற்குள் விற்பூட்டும் பூட்டுகிறது. நினைவும் உணர்வு மற்ற ஒரு கயிற்றரவு நிலையில் அவதானிக்கிறான்.

வீதியின் ஓரத்தில் ஒரு அரசமரம். அதைச்சுற்றி ஒரு மேடை. அதில் இன்னமும் புத்தர் சிலை திருப்பள்ளி கொள்ளவில்லை... அவ்வளவுதான். பிரக்ஞை இழந்தவனைப்போல் அந்த மேடையிலே சரிகிறான்... நோயின் வேகம். முனகல் சத்தம். மனித ஸ்பரிசத்தில் சுருண்டுவிடும் சரக்கட்டையைப்போல சுருண்டு படுக்கிறான். கண்டிப்பகுதிக் குன்றுகளின் உச்சியை முத்தமிட்டு வீசிவரும் சீதளவாடை அவன் உடலை ஊசியாய்த் துளைக்கிறது. அவன் மேலும் கூனிக் குறுகுகின்றான். அவனுடைய அங்கம் முழுவதும் சாரணின் ஒரு பகுதிக்குள் ஆமையாகிய நிலையில்... உலகமே மரணாவஸ்தைக்குள் அமுங்கிப் போவதாகவும், இறந்துபோன வள்ளியம்மை இரு கைகளையும் அகலவிரித்துத் தான்வாழும் அமர உலகிற்கு அவனையும் அழைப்பதான நிழலுருவ நினைவுகள்... முனகல்... பிதற்றல்...

இரண்டொரு சேவல்களின் அலறல். இரவுமங்கை தனது நிர்வாண கோலத்தில் வெட்கமுற்று ஒளித்தோடி மறைய நினைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் வேளை!

மாரிமுத்துவுக்கு மயக்கம் தெளிவுபடாத விழிப்பு ஏற்படுகிறது. கரம் நீட்டியழைத்த வள்ளியம்மை எங்கே? சிலந்திவலை விரித்திருந்த பனித்திரையை ஊடறுத்து ஒரு உருவம் மரத்தடிக்கு வருவதைக் கவனிக்க முடிகிறது.

அந்த உருவம் தனது கையோடு கொண்டு வந்த பெட்டியை இறக்கிவைத்துப் படுத்துக்கிடக்கும் அவனை அவதானிக்கிறது. பின்னர், அவனுக்குச் சமீபமாகவந்து குந்தி, தீக்குச்சியொன்றினைக்கிழித்து, அதன் இருட்தலையில் ஜனித்த சுடரில் அவனுடைய முகத்தைப் பார்க்கிறது. ஏதோ பயம் தெளிந்ததைப் போன்று, அரசமரத்தின் மேடையில் மூன்று கற்களை எடுத்து அடுப்பாக அடுக்கி, அதற்குள் திணித்த விறகுகளில் தீயை மூட்டுகிறது.

"உம்... உம்..." - மாரிமுத்துவின் முனகல்.

"அற கவுத?" - யாரது என வினவும் அந்த ஒலியில் பெண்மை தொனிக்கிறது. பதில் சொல்ல அவனுடைய நாக்கு உன்னுகிறது. ஆனால் முனகல் ஒலியைத் தவிர வேறெதுவும் புறப்பட மறுக்கிறது.

அந்த உருவம் – அவள் – அவனுக்குச் சமீபமாகவந்து நெற்றியைத் தொட்டுப் பார்க்கிறது. அந்த விரல்களிற் சுருதி கூட்டிக் கிளம்பும் பரிவும் பாசமும்... ஒருகால் வள்ளியம்மை ஆவி உலகைவிட்டு, இந்த அரசமரத்தின் கீழே வந்து...

"அம்மே சனிப்ப நத்த?"

சங்கரப்பிள்ளை சிபாரிசு செய்த தர்மாஸ்பத்திரியின் நிறத் தண்ணீர் கொடுக்கக்கூடிய குணத்திலும் பார்க்க இதந்தரும் அந்தச் சொற்கள்... மனிதத் தன்மையின் மிக உயர்ந்த குணங்கள் ராக லயமாக இழையும் குரல்.. இந்த ஊர்வலத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செஞ்சுருட்டி' இராகத்தினைப் பொழிந்தவனால் மட்டுமல்ல, நாதஸ்வரத்தையே தனது அடிமையாக்கிக் கொண்ட இராஜரத்தினம்பிள்ளையாலே கூட எழுப்ப இயலாத இனிமை அந்தக்குரலில் இருப்பதாக மாரிமுத்துவுக்குப் படுகிறது.

மாரிமுத்து எழுந்திருக்க முனைகிறான்...

'தமுச கொயிகரி யண்டெப்பா...' – எங்கும் போக வேண்டா மென்று சொல்கிறாள். அவனால் யாரிடம், எங்கே போகமுடியும்? முல்லைப்பற்றுக்கா? அவனைப் பெற்றுச் சீராட்டி வளர்த்து, மணப்பந்தலிற் பார்த்துத் தங்கள் கடமையை முடித்து மோட்ச கதியை அடைந்துவிட்ட பெற்றோரிடமா? இரண்டு வருடங்கள் அவனுடைய சுகபோகங்களுக்குத் தன் உடலை ஈடு வைத்து, இன்பம் அளித்து, இன்று இனிய கனவாக மறைந்து விட்ட வள்ளியம்மையிடமா? பிஞ்சு வயதிலேயே தன் தந்தையின் முகம் மறந்து, அனாதையாகப் படித்து முன்னேறிக் கொண்டிருக்கும் குமாரசாமியிடமா? தன் நட்பிற் சுகங்காணாத சிவகுருவிடமா? அவனுக்கு இந்த அவனியில் உற்றார் யார்? உறவினர் யார்? நனி சிறந்ததாம் - பொன்நாடாம் - பிறந்த மண்ணாம்! மண்ணாங்கட்டி! இருக்கும் பொழுது மாடுகளைக் கள்ளிப்பாலின் துணையுடன் கொன்றும் அனாதையான வேலைக் காரப் பொடிச்சியைக் கிணற்றிலே அடித்துப் போட்டுக் கிராதகச் செயல் செய்தும், செத்தபின்னருங் குற்றமற்ற மாரிமுத்துவைச் சிறைக் கம்பிகளை எண்ணவைத்த 'இருமரபுந் துய்யவந்த' விசுவலிங்கம் நடமாடிய பொட்டற்காடு அது! பொய்ச்சாட்சி சொல்லும் முத்துவேலன் தழைத்த கள்ளிப்பற்றை! அதற்கா? இல்லை, இல்லை... ஊரவன் என்று வெளிச்சம் போட்டு, இரத்தம் உறிஞ்சும் அட்டையாக வேலைவாங்கும் சங்கரப்பிள்ளையிடமா? இலவச மருந்துத் தண்ணீர் பெற்றுத்தருவார் என்றா? மண்டையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்துக் கிளம்பும் சிந்தனை அலைகள். எழுந்து நடக்க இயல வில்லை. கால்கள் சக்தியையும் இயக்கத்தையும் இழந்து விட்டனவாக... படுத்துக்கிடக்கிறான். மனித உள்ளங்களின் வேதனைகளுக்கும் போராட்டங்களுக்கும் இரங்காது, மாற்றங் களில் மருட்சியடையாது, உருண்டோடிக் கொண்டிருக்கும் காலவெள்ளம். அதன் சுழிப்பிற் பல வினாடிக் குமிழ்கள் குமிழ்ந்து மடிகின்றன...

"தமுச பொண்ட" அவள் கொடுப்பதைக் குடிக்கிறான்.

அவள் கொடுத்த கொத்தமல்லித் தண்ணீரா அல்லது அவள் செலுத்தும் அனுதாபமா தன் உடலுக்கு இதந்தருகிறது என்பதை அவனால் இனங் கண்டுகொள்ள முடியவில்லை. இருப்பினுஞ் சோர்வு நீங்காத நிலையிற் படுத்துக் கிடக்கிறான்.

பொழுது புலர்கிறது. அவனை அங்கேயே படுத்திருக்கும் படியும், அப்புறமாக மருந்து வாங்கலாமென்றும் ஆறுதல் கூறித் தன் தினசரி வியாபாரத்திற்கு ஆயத்தஞ்செய்கிறாள். அடுப்பில் சட்டியை ஏற்றி, மாவை ஊற்றி அப்பம் சுடுகிறாள். சுடச்சுட அப்பம் விலை போகிறது; வாடிக்கைக்காரர்கள் – வாழ்க்கையின் அடித் தளமான உடலைப் பிழிந்து உழைத்து வாழும் பஞ்சைகள் அரசமரத்தைச் சுற்றி அரைப்பசி போக்கி...

அப்பஞ் சுட்டுக் கொண்டே வியாபாரத்தைச் சாமர்த்தியமாகக் கவனிக்கும் அந்தப் பெண்ணை மாரிமுத்து வியப்புடன் பார்க்கிறான்.

அவள் – அலிஸ்நோனா – காவியத்தின் தலைவியாவதற் கேற்ற அழகியல்ல. 'வளிசாக' முப்பத்தைந்து வயதிருக்கும். கிழவியென்று சொல்லிவிட இயலாத வாலிப வனப்பு; காலியான கற்பூரப் பெட்டியிலிருந்து எழும் வாசனையைப் போல, மயக்கந் தரும் ஒருவகை வாலிபம். அழகு அலைகளுடன் சுருண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்குங் கேசத்தில், ஒரு மயிராவது நரைக்கவில்லை. சதைப் பிடிப்பான வட்டமுகம். அதில் வியர்வைத் துளிகள் அரும்பியிருப்பினும் அவை வழிந்தோடும் வாய்க்கால்களை இன்னும் வயதின் முதிர்ச்சி அவள் முகத்திற் கோடு கிழிக்க வில்லை. காரின் பிற்புறத்தை அப்படியே அடைத்து விடவல்ல மாமிசமலையல்ல; சோளக்கொல்லைக் கதிருமல்ல. கடை வாயிற் புன்னகை புஷ்பிக்கும் இதழ்களில் மறைவிடம் தேடிக் கொண்ட பற்களுக்கிடையில் வெற்றிலை மென்று சுவைத்தபடி தன் வேலைகளைச் சுறுசுறுப்பாகக் கவனிக்கிறாள். சுறுசுறுப்பினாலும் பெண்களுக்கு அழகு சேருகிறது. இடையிடையே அவள் மாரிமுத்துவின் மீது கண்களைத் திருப்பி, ‘கொஞ்சநேரத்தில் வேலை முடிந்துவிடும்; உடனே நான் வருவேன்’ என்று கொஞ்சும் நயனமொழிகளைத் தன் பாஷையிற் சிந்துகிறாள்...

சிந்தனைத் தொடரைக் குலைத்து, மத்தாப்பிலிருந்து மேலெழும்பும் ஒளிப்பந்துகள்... நீலத்துளிகளை அது அதிகஞ் சிந்தி, சுற்றுப் பிரதேசத்தையும் தன் நிறத்திற்குள் அமுக்குகிறது?

பிள்ளையார் கோவிலிலிருந்து திரும்பும் ஊர்வலத்திலிருந்து கிளம்பும் ஓசைகள். தவில்காரர்களும், நாதஸ்வரக்காரர்களுந் தங்களுடைய திறமைகளையெல்லாம் பிழிந்து பொழிகிறார்கள். தங்கள் கலைத்திறமையைச் சபைமெச்ச அங்காடிப் பொருளாக்குகிறார்கள். திறமையாவது, மண்ணாவது... வாங்கிய பணத்திற்கு மாரடித்துத் தொலைக்கிறார்கள்... ... ...

குமாரசாமி கணவனென்ற அந்தஸ்தை அடைந்துவிட்டான். அவனும் இந்தக் காலத்து இளமட்டங்களைப் போன்று காதலென்ற விவகாரத்திற்குள் சிக்குண்டு, அதன் பேறாகக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல்?

அது அவன் வாழ்க்கையிற்கிடைத்தது. உண்மை. இரண்டே இரண்டு வருஷக் குடும்பவாழ்க்கை. அப்புறம் சிறை. சிறையிற் சிக்கிக்கொண்டவர்களிடையே எத்தனையோ சுயதிருப்திப் பழக்கங்கள் குடிபுகுந்துவிடுகின்றன. ஆனால் இந்தப் பழக்கங் களுக்கு மாரிமுத்துவின் உடல் வளைந்து கொடுத்துவிட வில்லை. வள்ளியம்மையின் மரணச் செய்தியுடன் தனது காதல் உணர்வுகள் மரித்து விட்டதாகவே அவன் நம்பினான். காதல் உணர்ச்சி, பனிப் பிரதேச மரங்களைப்போல, இலையுதிர் காலத்தில் இலைகளை உதிர்த்தி, வஸந்த காலத்திற் குருகு தளிர்த்து, பட்டுப்போகும்வரை உடலிற் பரவிக்கிடக்கிறது. சிறையில் வாடிய காலத்திலும், சங்கரப்பிள்ளையின் கிளினராக — இயந்திரமாக — உழைத்த இரண்டாண்டு காலத்திலும், பட்ட மரமாகக் காட்சி தந்த அந்த உணர்ச்சிகள், அலிஸ்நோனாவின் குடிசையில் வாழத் தொடங்கியதிலிருந்து, வஸந்த காலத்தின் அணைப்பினை அனுபவிக்கும் பாவனையில் துளிர்விட்டு...

அலிஸ் வற்புறுத்தி அவனைத் தன் குடிசைக்கு அழைத்து வந்தாள். திறமை வாய்ந்த ஒரு 'வெதமாத்தையா' வைக் கொண்டு வைத்தியம் செய்வித்துப் பூரணகுணம் ஏற்படச் செய்து விட்டாள். செல்வந்தரான சங்கரப்பிள்ளையின் நெஞ்சிற் புகமறுத்த மனித பாசம், அந்தக் குடிசைக்குள் அலிஸ்நோனா உருவத்தில் நடமாடுவதாக மாரிமுத்துவுக்குப் பட்டது.

அவள் ஒரு புதிர். அவளைப்பற்றிப் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவின. அவளை மனைவியாக ஏற்றுக் குடும்பம் நடத்திய பண்டா, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வேறொரு 'கும'ருடன் ஓடிப்போய்விட்டான். போனவன் திரும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. 'வழக்கு வைத்துப் படி வாங்கலாம்' என்று பலர் ஆலோசனை நல்கினர். ஆனால் தன்னை வெறுத்து, வேறொருத்தியைத் தன் நெஞ்சிலும் மார்பிலும் வளர்த்தி வாழும் அவனுடைய பிச்சைச் சம்பளத்திலும் பார்க்கத் தன் உடலை வருத்தி உழைத்துச் சம்பாதித்து வாழ்வது மேலென அவள் கருதினாள். அவள் சுடும் அப்பஞ் சுவையானது; அவள் பேச்சும் அப்படித்தான். வாலிபம்-அவள் வயதுக்கொவ்வாது அவளுடலிற் குடிபுகுந்திருக்கும் வாலிபம்-குளுமையானது. வெற்றிலைச் சிவப்பேறிய இதழ்களின் ஓரங்களில் நர்த்தனமாடும் புன்னகையையும், சுருட் கேசம் கொண்டவளின் குணங்களைப்பற்றி நவயுக காமசூத்திர ஆசான்கள் கொடுக்கும் விளக்கத்தினையும், ஆதாரமாக வைத்துகொண்டு; அவளைப்பற்றித் தங்கள் உள்ளத்திற்குமையும் இச்சைகளுக்குத் திரை கட்டி கதைபரப்பினார்கள் பலர். வாடிக்கையாக அப்பந் தின்பவர்கள் பாக்கித் தொகையை 'தாளாக'ச் செலுத்துவது, கதைக்கு இறக்கை கட்டியது. 'இவள் நடத்தை கெட்டவள். அதுதான் அவள் புருஷன் விட்டுட்டு ஓடினான். இல்லாவிட்டால் இவள் தன் புருஷனிடம் பராமரிப்புப் பணம் கோரி வழக்கு வைத்திருக்க மாட்டாளா?' என்று தர்க்கம் பேசுவதாக அபிநயித்தனர் சில மைனர்கள்! ஆனால் மாரிமுத்துவுக்கு, அவள் மனிதப் பண்பினைக் காப்பாற்ற மனுஷியாகவே வாழும் பெண்ணாக மட்டுமே தோன்றினாள்.

வானத்தில் சிந்திய நீல மத்தாப்பு ஒளிபரப்பும் நிறத்தின் சாயலைப் பூரணமாகப் பெற்ற மஹாவலி கங்கை ஓடிக் கொண்டிருக்கிறது. கண்டாரை மயக்கித் தன் காலடிப்படுத்தும் சின்னமேளக்காரியின் அபிநயத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையிலே அமர்ந்து நீரோட்டத்தின் வாக்கிலே கால்களை விட்டிருந்த மாரிமுத்துவின் உள்ளத்திற் சிந்தனைகள் குதிருகின்றன.

'நோனா எனக்கு உயிர்ப்பிச்சை தந்தாள். அவள் உதவிக்கு என்ன கைமாறு செய்ய முடியும்? உடல் குணமாகிவிட்டது. இன்னமும் அவளுக்குப்பாரமாக அவளுடைய குடிசையில் வாழ வேண்டுமா? 'அந்தச் சிங்களத் தேவடியாள் வீட்டுக்குப் போன உனக்கு இங்கை வேலையில்லை' என்று சங்கரப்பிள்ளை கையை விரித்துவிட்டார். அவருக்கு என்னிலும் பார்க்க வாலிபனான இந்தியாக்காரக் 'கிளீனர்' கிடைத்துவிட்டான். இன்னொரு வேலை சம்பாதித்துத்தர தரகர் தம்பையா எப்பொழுது வருவாரோ? உதவக்கூடிய அப்புகாமியோ சிறைப் பறவை. பாவம். அவன் மறுபடியும் சிறைக்குச் சென்றுவிட்டான்... இனி?'

அங்கு வந்து சேர்ந்த நோனா அவனுடைய சிந்தனைகளைக் கலைத்தாள்.

"நாங் எல்லா இடமும் உங்களைப் பார்த்தாங்; ஏங்க போனது நீங்க? சங்கரப்பிள்ளை மொதலாளி வேலைபோனது சுட்டி கவலைப்பட வேணாங். நாங் வளி சொல்றது. நாங் ஐஞ்சு நூறு றுப்பியலா வைச்சிருக்கிறது. அந்த மரத்துக்கிட்டை ஒரு தேக்கடை போடுவாங்."

தானே தேநீர்க்கடை வைத்துத் தந்து, அவன் வாழ்க்கையை வளப்படுத்த முனையும் அவளுக்கு என்ன பதில் சொல்லுவான்.

"யோசிக்க வாணாங்; நாங் சொல்றதுக்கு நீங்க சம்மதந் தானே?"

சொந்த ஊரில் மனைவியை விட்டு, உத்தியோகம் பார்க்கும் ஊரில் பிரமச்சாரி வேடம் புனைந்து, வேறு பெண்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைத்துப் பார்க்கும் ஹாலிவூட் நெறி இன்று வாலிபர்களின் உள்ளங்களில் நுழைந்திருக்கிறது. உண்மைக்குத் திரைபோட்டு மறைத்துப் பொய்மையையே பேசிப் போலியாக வாழ்ந்து, கணவனும் மனைவியும் இரு வேறு திசையிற் பீடுநடை போடுகின்றனர் இக்காலத்தில். ஒருவர் மனதிலுள்ளதை மற்றவர் அறியாத நாகரீகம் இப்போது புகுந்துள்ளது. இந்த நாகரீகம் புகாத அந்தக் காலத்தைச் சேர்ந்தவன் மாரிமுத்து. அவன் தன் வாழ்க்கையை ஒளிவு மறைவின்றி அவளுக்குக் கூறியிருக்கிறான்; அவளுந் தன்னுடைய துயர்மண்டிய வாழ்க்கையை அவனுக்குச் சொல்லிருக்கிறாள். பொதுவான துயரிழை இருவரையும் நெருக்கமாகப் பிணைத்து வருவதையும் அவன் உணருகிறான்.

"என்னை நம்புங்க, அந்தச் சில்வா ஆளு நம்பளுக்கு மிச்சங் கரைச்சல் தாறது. நீங்கதாங் நம்மளுக்கு உதவி செய்ய வேணுங்."

சில்வாவிடமிருந்து அவளைக் காப்பாற்றுவதற்கு?

வாழ்க்கையென்ற தனி வழிப் பாதையில் நடந்து செல்வதற்கு, பேச்சுக்கும் - சௌகரியத்திற்கும் ஒரு வழித்துணை தான் தேவை. வயது செல்லச் செல்ல மனிதன் இந்தத் தேவையை அதிகம் அதிகமாக உணருகிறான். வழித்துணை பெறும் பிரயத்தனந்தான் காதலா? கொம்பருக்கு அழகு, படர் கொடி. வள்ளியம்மை என்ற கொடி கருகிவிட்டது என்பதற்காக, இன்னொரு கொடியைத் தாங்கும் வலிமையைக் கொம்பர் இழந்துவிட்டதா?

மாரிமுத்து சம்மதந் தெரிவிக்கிறான்.

அரசமரத்தடியிற் தேநீர்க்கடை முளைத்தது. மாரிமுத்துவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோனாவும் பிரயாசையுடன் உழைத்தார்கள். உள்ளங் கலந்த நிலையில் அந்நியோன்யமாக வாழத் தலைப்பட்டார்கள். அன்பு என்ற தங்கச் சங்கிலி அவர்களைப் பிணைத்தது. சிங்களத்தி தமிழன் என்ற இன உணர்ச்சிகள் கிடையாது. மொழிப் பிரச்சனை யேயில்லை... அவள் பேசும் தமிழ் அவனுக்கு விளங்கும்; அவனுடைய ... அவளுக்கும் புரியும்.

தேநீர்க் கடையில் உருவான தாம்பத்திய வாழ்க்கை நிம்மதி நிறைந்ததாக இருந்தாலும், சில்வாவின் போக்கு விசுவலிங்கத்தை ஞாபகப்படுத்தியது. 'அடிசக்கை' தம்பதி களையும், மகன் குமாரசாமியையும் சாவதற்கு முன்னர் ஒரு தடவை பார்த்துவிட வேண்டுமென்ற நினைவுகள் சந்திவான முகிற் கூட்டங்களின் உருவில் மொய்த்தன... இந்தத் துன்ப நினைவுகளை முற்றாக ஈடு செய்தது நோனாவின் அன்பு. இல்வாழ்க்கையின் பயனாக நோனா தாய் என்ற அந்தஸ்தை எய்தவில்லையாயினும், வருடங்கள் பல ஓடி மறைந்தன.

மணமக்கள் சகிதமாக ஊர்வலம் வீட்டை நெருங்குகின்றது. ‘ஆல்போற் தளைத்து அறுகு போல் வேரூன்றிப் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழட்டும்’ என்று மாரிமுத்துவின் சூனிய உள்ளத்தை வெடித்துக் கிளம்பும் ஆசிமொழிகள். வான இருளைப் பிளந்து மத்தாப்பின் ஒளிப் பூக்களை அந்தரத்திற்கு அனுப்புவதில் ஒரு வேகம் ஏற்படுகிறது. வெளியை ஒளியிற் குளிப்பாட்டும் அந்த ஒளிப் பூக்களில் அநேகமானவை மஞ்சளுஞ் சிவப்புமாகக் காணப்படுகிறன. சிவப்பு மனித இரத்தத்தையும், மஞ்சள் அக்கினியின் தீநாக்குகளையும் மாரி முத்துவுக்கு ஞாபகப் படுத்துகின்றன....

நினைத்துப் பார்த்தாலே உடல் பதைபதைக்கும் அந்தக் கோரச் சம்பவம்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958ஆம் ஆண்டின், மே மாதத்தில் ஜனித்த ஒரு நாள்...

ஆரம்பத்தில் மனிதன் தன்கருத்துக்களை ஒலியினாற் புலப்படுத்தினான். பின்னர் தன் பொழுதுபோக்குக் கற்பனை யிலுதித்த குறியீடுகளினால், சௌகர்யத்திற்காக, மொழியினை உண்டாக்கினான். வசதியாகத் தன்கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு வாழ்வதற்கு மொழி ஒரு சாதனம். அதற்குமேல் மொழி யல்ல வாழ்க்கை. உலகின் சிறந்த பொக்கிஷம் மனிதன்; அவனை அணிசெய்வது மனிதத்தன்மை. மனிதத்தன்மையை இழந்து, மனிதர்களையே அழித்து மொழியைக் காக்கப் புறப்படுவது சுத்தப் பைத்தியக்காரத்தனம். பசிப்போராட்டத்திற் திருடர்கள், கொலைகாரர்கள், விபசாரிகள், பிச்சைக்காரர்கள் ஆகியோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அப்போராட்டத்தில் மனிதன் நித்தம்நித்தம் சாம்பிச் சாகிறான். அதைப்பற்றி ஒருவருக்குங் கவலையில்லை! ஆனால் மனிதனே உண்டாக்கி, மனிதனே கற்பித்து, காலவெள்ளத்தின் மாற்றங்களுக்கும் அழிவுக்கும் உள்ளாகும் மொழிக்காக மனிதன் தன் மனிதப் பண்பையே இழந்து, மனிதனையே பலிவாங்கும் மிருகப்புத்தி எவ்வளவு சீக்கிரம் காட்டுத்தீயாகப் பரவிடுகிறது?...

"தெமள ஜாதி நெதிவேவ! பாஷா தெக்கக் அப்பிட்ட எப்பா. சிங்களத்தமய் அப்பிட்ட ஓண" - ஒரு கோஷம்.

"ஸ்ரீயை எதிர்ப்போம்; சிறையை நிறைப்போம்" - எதிர்க் கோஷம்.

வீரத்தின் விளைநிலமாக ஒருகாலத்தில் வாழ்ந்த தமிழ் மகனின் மறம் தார்ச்சட்டிகளில் மண்டின. எழுத்து அழிப்பு இயக்கம். எதிர்ப்புக்கு எதிரான தமிழ் அழிப்பு இயக்கம். 'தார்பூசிச் சாமோ தமிழ்' என்ற கோஷம் வெண்பா உருவில் ஒலிக்கிறது. ஆனால் தார்பூசிச் சிங்களம் மட்டும் செத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமோ?

கண்டிநகரம் அல்லோல கல்லோலப்படுகிறது. பல்லாயிரம் ஆண்டுகள் பண்பாடு என்ற சேலைக்குள் மறைக்கப்பட்டிருந்த மிருகவெறி விழிப்புக்கொள்ளுகிறது. சிங்களம் பேசும் மிருகங்கள், தமிழ்பேசும் மிருகங்களைத் தாக்குகின்றன. தார்பூசும் இயக்கம், இரத்தஞ் சிந்தும் இயக்கமாகக் கோர உருவம் எடுக்கிறது. சிங்கத்தின் இரத்தத்தையே குடிக்கும் சிங்கத்தைப் பார்த்திருக்கிறோமா? ஆனால் தன் இனத்தின் இரத்தத்தையே 'குடிக்க' வேட்கைகொண்டு வெறிக்கூத்தாடும் மனித மிருகங்கள்?

மூலைக்கடைகள் கொளுத்தப்படுகின்றன... தன் வேலைக் காரனுக்கு மருந்து வாங்கிக்கொடுக்க மறுக்கும் கருமியின் சொத்துக்களை செந்தீயின் சர்ப்பநாக்குகள் தீண்ட மறுக்குமா?

மஞ்சள் - சிவப்பு - நீலம் ஆகிய வர்ணக் கலவைகளாலான தீ நாக்குகள்... வீதியிற் சிந்தப்படும் மனித இரத்தம்...

ஊழிக் காலத்தின் ஒத்திகை...

தேநீர்க்கடையை அடைத்த நோனா, மாரிமுத்துவைத் தன் குடிசைக்கு அழைத்துவந்து, கொல்லையிலுள்ள பீப்பாவிற்குள் அடைத்து வைக்கிறாள்.

"நோனா! நான் தமிழன். நான் செத்தால் என்ன? நான் வாழ்க்கையை ஐம்பது ஆண்டுகளுக்குமேலாக அனுபவித்து விட்டேன். இனி வாழ்ந்து தான் என்ன பயன்? எனக்குப் புனர் ஜன்மமளித்த உத்தமி நீ. என் உயிரைக் காப்பாற்றும் போராட்டத்தில் உன் உயிரைப் பணயம் வைக்காதே என்னை விட்டுவிடு..." என்ற கருத்தினை உள்ளடக்கி எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். ஆனால் தமிழனின் இரத்தத்தைக் குடிக்க இச்சைகொண்ட மிருகக் கூட்டத்தினரிடமிருந்து ஒரு தமிழனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றும் வெறி நோனாவின் உள்ளத்தில் அதி தீவிரமாகப் பரவியிருந்தது. மிருகக் கூட்டத்தினரிடமிருந்து ஒரு தமிழனைக் காப்பாற்ற ஒரு பேதை தன்னந் தனியாக நடத்தும் போராட்டம்.

"நம்ம இரண்டு ஆளுங் மனிசங்தானே?" மனிதனின் துல்லிய உணர்ச்சிகளிற் பூக்குஞ் சொற்கள்.

மனிதனின் பலஹீன உணர்ச்சிகளைத் தூண்டி, அதனுள் மூண்டெழும் ஹோமத்தீயில் தங்கள் பதவிகளை அறுவடை செய்து, தலைவர்களாக வாழ முனையும் மொழி வெறியர்கள் (அவர்கள் சிங்களவராக இருந்தாலென்ன, தமிழராக இருந்தா லென்ன?) குடிசைவாழ் குத்துவிளக்காம் அலிஸிடம் பாடம் கற்க வரவேண்டும். பாராளுமன்ற தந்தக்கோபுரத்தில் அமர்ந்து இறை மாட்சித் தர்மங் கற்க முனைவதை விடுத்து, அலிஸீகள் வாழும் மண்குடிசைகளில் மனிதத் தன்மையின் இலட்சணங்களை முதலிற் பயின்றுகொள்வது மேல்.

இரத்தவெறி கண்ட கூட்டமொன்று அலிஸின் குடிசைக்கு முன்னால்தான் நிற்கின்றது. அலிஸின் காதல் விவகாரத்திற் தன்னை, ஆப்பிழுத்த குரங்காக உவமித்துக்கொண்ட சில்வா அக்கூட்டத்திற்குத் தலைமைதாங்குகின்றான். கர்ஜனை செய்யுங் குரலிற் 'கொஹெத அற பற தெமள மினிஹா?' என் கேட்கிறான். சில்வாவின் தடித்த குரல் மாரிமுத்துவுக்குப் பழக்க மானது. தன் இரத்தத்தை பச்சையாக குடித்துவிட வேண்டு மென்ற தாகம் அந்த குரலிற் குவிந்து கிடப்பதையும் உணர முடிகிறது.

'ஏய்?' - நோனாவின் உறுதியான குரல்.

'அப்பிட்ட ஓண, எத்துளே இன்னவதே?'

"நே"

"பொறு கியாண்ட எப்பா."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத் தொடர்ந்து நோனோ, ஏதோ சிங்களத்தில சரமாரி யாகப் பேசுகிறாள்.

'அறிவுகெட்ட மூடப்பிண்டங்களே! நான் சிங்களத்தி; நீங்கள் சிங்களவர்கள். ஆனால் உங்களை நினைத்து நான் வெட்கப் படுகிறேன்; நீங்கள் அக்கா, தங்கைகளுடன் பிறந்ததுண்டா? அவர்களுடைய புருஷன்மார்களை நரமாமிசப் புலாற்கடையிற் கூறுபோட்டதுண்டா? அல்லது சிங்களச் சாதிதான் உயர்ந்த சாதி என்பது உங்களுடைய நினைப்பா? நான் அன்று ஒரு சிங்களவனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தேன். அவன் தன் சிற்றின்ப வேட்டையிலே என்னைப் பரிதவிக்க விட்டுச் சென்றான். சில்வா! நீ மகா அயோக்கியன். மாரிமுத்துவின் துணை மட்டும் எனக்குக் கிடைத்திருக்காவிட்டால் அப்பத் துண்டினை இறாஞ்சும் காகத்தினைப்போல எத்தனையோ பேர் என்னுடைய கற்பைச் சூறையாடி இருப்பர். ஒரு சகோதரியின் மானத்தைக் காகக வக்கின்றிச் சொறிநாய்களைப் போல நீங்கள் அரசமரத்தைச் சுற்றிவந்தகாலத்தில், அந்தத் தமிழன் என் மானத்தைக் காப்பாற்றினான். அந்தத் தமிழன் உடல் என்னைத் தீண்டியதால் என் உடல் அழுக்காகிவிட்டதா? தமிழனாவது? சிங்கள வனாவது? நாம் முதலில் மனிதராக வாழவேண்டும்' அவளைத் தன் கற்பனையில் நாடகத் தமிழ் பேச வைத்து மாரிமுத்துவின் உள்ளம் பூரிக்கின்றது.

குடிசையின் வாசலில் ஊழிப்பேயின் சுடலை நடனம்.

'அம்மே! அம்மே!' என்ற ஈனக்குரல். மாரிமுத்துவின் இரத்தத்தைத் தேடிவந்த அவர்கள் அலிஸ் நோனாவின் - தமிழனுடன் வாழ்ந்த ஒரு சிங்களத்தியின் - இரத்தத்தைக் கண்டு, திருப்தியுடன் திரும்புகின்றார்கள்.

பேதையின் மரணாவஸ்தை கொப்பளிக்கும் அனுங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பரணிபாடி, இன்று ஒலிபெருக்கிக்குழாயில் வீராப்புப் பேசுவதுடன் ஒடுங்கிவிட்ட தமிழ் வம்சத்தின் சாபக் கேட்டை நினைத்து வருந்தி, தான் பீப்பாவிற்குள் ஒளித்துக்கிடந்த கோழைத்தனத்திற்கு வெட்கி, வாசலுக்கு வருகிறான் மாரிமுத்து...

இரத்தம் – தியாக இரத்தம் – சிந்திக்கொண்டிருக்கும் அவளுடைய தலையை ஆதரவுடன் தன் மடியில் வைத்துக் கொள்ளுகிறான்.

இரண்டு ஜதைக் கண்களில் பிரளய காலத்தின் அன்புப் பெருக்கு. மாரிமுத்துவின் கண்களிலிருந்து புரளும் கண்ணீர்த் திவலைகளைத் துடைத்துக் கொண்டே நோனா, 'நீங்க ஊருக்குப் போறதுதாங் நல்லங். சில்வா மிச்சங் கரைச்சல் தருவாங். நீங்க தப்பிறதுதான் எனக்குவேணுங். ஊருக்குப் போறது... உங்கடபிள்ளை குமாரசாமியைப் பாருங்க. நீங்க நல்ல மனுஷனென்பது சுட்டி உங்க மொகத்தைப்பார்த்துத் தெரிஞ் சுடுவாங்க. நீங்க... போறதுதானே?... சத்தியம் சொல்லவேணும்... ஊருக்குப் போங்க...'

முல்லைப்பற்றுக்கா?

இங்கு இரத்தம்!

அங்கு?

இங்கு சில்வாக்கள் நடமாடுகிறார்கள்....

அங்கு விசுவலிங்கங்கள் நடமாடினார்கள்....

தலையைத் தனக்குச் சமீபமாகக் கொண்டு வரும்படி சைகை காட்டுகிறாள். அவன் தன்னுடைய தலையை அவளுடைய முகத்துக்கு நேரே குனிகிறான். அவள் தன்னுடைய கழுத்தில் மின்னிய சங்கிலியைக் கழற்றி அவனுடைய கைகளிற் கொடுத்து, "நம்ம செயினைத் தாராங், எடுத்திட்டுப் போங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒங்க மகன்ட சின்னமாவொடை – நம்ம – உபகாரம் இதுதாங். மகண்ட பொஞ்சாதிக்கிட்டே இதைக் கொடுக்கவேணுங்..." மூச்சுத் திணறியபடியே பேசுகிறாள். அவியுஞ் சுடரும்; அதற்கு நெய்யூற்ற இயலாது தவிக்கும் மனிதனும்....

"நம்பளுக்குத் தங்க மிச்சங் அதரய் தர்றீங்கென்னா ஊருக்குத்தான் போகவேணுங்..." – அவள் பேசிய கடைசி வார்த்தைகள்....

இராணுவச் சப்பாத்தின் கீழ் அமைதி ஏற்பட்டது.

அவன் நெஞ்சில் அமைதி ஏற்படவில்லை.

விரக்தி!

ஊர்வலம் கல்யாண வீட்டை அடைந்துவிட்டது.

மத்தாப்பின் ஒளி மழைத்தூறல்... பச்சையும் – நீலமும்– மஞ்சளும் – சிவப்பும் – அப்புறம் கத்தரிச்சிதர்கள் சதிராடி மறைகின்றன.

நண்பன் சிவகுருவைப்பார்த்து ஒருவார்த்தை பேசி... மகன் குமாரசாமியை ஒரு தடவை பார்த்து நோனாவின் அன்புப் பரிசை அவன் மனைவியிடம் ஒப்படைத்து...

நீலமும் சிவப்பும் கலந்து பிணைந்த கத்தரிச் சிதர்கள் ஒளியூட்டிய வானம் மாரியின் உள்ளமாகக் கறுக்க... அந்த நிறம் மட்டும் அவனுள்ளத்திலே சுழல்கிறது.

சிவப்பும் நீலமும் கலந்து கத்தரி நிறமாவது போல...

அலிஸ் நோனாவும், மாரிமுத்துவும் தம்பதிகளாக வாழ்ந்தது போல...

தமிழும்.... சிங்களமும்...

முல்லைப்பற்றின் மாவடிப் பள்ளிக்கூடத்தில் இரண்டாம் வகுப்புடன் தன் படிப்பை மூட்டைகட்டி வைத்து விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுவண்டியின் ஆசனத்தில் குந்த ஆரம்பித்தவன் மாரி. அவனால் அவிழ்க்கக்கூடிய ஒரு முடிச்சை அவிழ்க்க இயலாது அரசியற் தலைவர்கள் தவிக்கிறார்களே...

மாரியும் அவிழ்க்க இயலாத முடிச்சு ஒன்றுடன் நெஞ்சு குமைகிறான்.

அந்தச் சிங்களத்திக்குக் கொடுத்த சத்தியத்தின் பெயரால் முல்லைப்பற்றுக்கு வந்துவிட்டான். அவள் தந்த சங்கிலியை?

கோவிலில் கூட்டம் மெலிந்து, அமைதி குடிகொள்ளுகிறது, வானத்தில் பவனி வந்த மத்தாப்பில் ஒளிஜாலங்கள் இனிய கனவாக....

மனம் என்ற கொட்டிலிலிருந்து வெடித்துக் கிளம்பும் சிந்தனை மத்தாப்பு.

தப்பிப் பிறந்த தெய்வம் அலிஸ், அடுப்பின் வெக்கையில் கிடந்து, உடலைக் கசக்கிப் பிழிந்து வியர்வைத் துளியிலே விளைந்தது இந்தப் பொன். நான் ஒருநாள் முந்தி வரவில்லை; ஒருநாள் பிந்தி வரவில்லை. சரியான வேளை. எல்லாம் பிள்ளையார் செயல். அவள் - என் மருமகளாக வந்துள்ள மகராசி--ஏற்றுக் கொள்வாளா? ஊரைக் கலக்கி, இவ்வளவு ஆடம்பரங்களையும், வாண வேடிக்கைகளையும் செய்து காசைக் கரியாக்கிக் களிப்புக்கொள்ளும் அந்தப் பணக்கார வீட்டுப் பெண், கேவலம் நடைப்பிணமாக வந்திருக்கும் என்னை மாமா என்று ஏற்றுக் கொள்வாளா? அல்லது பரிசைத்தான் பெற்றுக் கொள்வாளா? விலை மதிக்க முடியாத இதை வெறும் அற்பமாக நினைத்து....

மகன் குமாரசாமி?

வெலிக்கடைச் சிறையில் இரண்டு வயதில் என்னைப் பார்த்திருக்கும் அவனால், இந்த உருவத்தில் கற்பனைகூடச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துபார்க்க இயலாது. அவனைப் பொறுத்த வரையில் நான் என்றோ காலமாகிவிட்டவன். கனவிலும் கனவாகிவிட்ட ஒரு பிறவி. இவ்வளவு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் உனக்கு என் ஞாபகம் வந்ததா? நான் நல்லாக வாழ்வது உனக்குப் பிடிக்க வில்லையா? நீ துரதிர்ஷ்டக்காரன், வாழக்கொடுத்து வைக்காதவன். என் தாய் வள்ளியம்மையை அணு அணுவாகச் சாகடித்தாய். 'கொலைக்காரன் மகன்' என்ற அவச்சொல்தான் நீ எனக்குத் தந்துசென்ற ஆஸ்தி... இப்பொழுது உன்னைப் பீடித்த சனி என்னையும் பீடித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவா என்னைப் பார்க்க வந்திருக்கிறாய்? கல்யாணப் பந்தலில் உன் மகனை அவமானப்படுத்த வேண்டுமென்று எத்தனை காலமாய்த் திட்டம் போட்டிருந்தாய் என்று அவன் என்னைக் கேட்டால்...? வேண்டாம். அவனுடைய இன்பத்தை நான் பாழாக்க வேண்டாம். இந்த வைபவத்தில் முல்லைப்பற்று எப்படி என்னை மறந்து விட்டதோ, அப்படியே மிகுதிக் காலத்திற்கும் என்னை மறக்கட்டும்... நோனாவின் ஆசை நிராசையாக வேண்டுமா? மனதில் அரும்பும் எத்தனை ஆசைகள் மொட்டில் கருகி விடுகின்றன?...

தனக்கும் தன் மகன் குமாரசாமிக்கும் இடையில் ஒரு சுவர் எழுப்பப்பட்டிருப்பதை அவனால் உணரமுடிகிறது. அந்தச்சுவர்-காற்றில் ஊஞ்சலாடும் ஆலம்விழுது காலப்போக்கில் வைரித்த மரமாக மாறிவிடுவதைப் போல - உறுதி பெற்றுவிட்டதாகத் தோன்றுகிறது. கல்யாணப் பத்திரிகையில் 'வம்புப் பிள்ளை யல்ல' என்று சொல்லும் வகையில் மாவன்னா என்ற தன் முதலெழுத்தை அச்சடிக்க வழங்கியதுடன் தன் தந்தைக் கடன் முடிந்துவிட்டதாக அவனுக்குப் படுகிறது.

அனுமார்வாலாக நீளும் சிந்தனையை ஆலமரத்திற்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபமாகக் கேட்கும் பேச்சுக்குரல் வெட்டித் தறிக்கிறது. இரண்டு உருவங்கள் கோயிலிலிருந்து ஆலமர ஓரமாக நடந்து வருகின்றன. பன்னீர்த் தெளிப்பு - சந்தனப்பூச்சு, இவற்றிலிருந்து கிளம்பும் வாசனை ஆலமரத்தைச் சுற்றியும் பரவுகிறது. அந்தக் குரல்கள் பழக்கமான குரல்களாகப் படவே, உன்னிப்பாகக் கேட்கிறான்.

"சின்னதுகள், புள்ளையாரிடை புண்ணியத்தில் நல்லா இருக்கட்டும். ஆனால் நேக்குப் பந்திக்குப் போகப் புடிக்க வில்லை. பொம்புளைப் பகுதியார் செட்டுப்பிடிச்சவ ளெண்டு நோக்கும் தெரியுந்தானேணை. இந்த நேரம் மாரிமுத்து வல்லோ இருக்கவேணும்."

"உன்னாணை நீங்களும் ஒரு மனிசன். மாரியண்ணர் எப்படியும் கலியாணத்துக்கு வந்துடுவாரெண்டு வாய் புசத்திக் கொண்டிருந்தியளே?"

"அடிசக்கை! நீ ஒரு விசரி, நீயும் அவன் செத்துட்டானெண்டு நினைக்கிறீயா? அவன் எப்படியாவது எண்ட மேள் சிவகாமி யின்ரை கலியாணத்துக்காவது வந்து குதிப்பான்."

"உன்னாணை உந்தப் பேய்க்கதையை விடப்பா. மாரி யண்ணை வந்து உன்ரை மேளைத் தன்மேனுக்குக் கட்டிக் குடுத்துத் தன்ரை மருமகளாக்கிக் கொள்ளுவாரெண்டு வாயுளையப் புசத்தினீங்க. பேந்து என்ன நடந்திருக்கு? உன்னாணை உப்பிடிக் கதை கதைக்காதையப்பா."

"அடிசக்கை! இந்தப் பெண்டுகளுடைய கதை உப்பிடித்தான். மாரியைப்போல ஒரு மனுசன் - ஒரு சிநேகிதன் - ஒரு தங்கக் கம்பி இனித்தான் முல்லைப்பத்தில புறக்கவேணும்."

அவர்கள் ஆலமரத்தையும், அதன் மறைவில் நிற்கும் மாரிமுத்துவையும் தாண்டிச் செல்கிறார்கள். அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடிசக்கை' சிவகுருவும், அவனுக்கு எதற்கும் சளைக்காத மனையாளாக வாழும் 'உன்னாணை' நாகம்மாவுந்தான்.

'தங்கக்கம்பியென்று இன்றும் என்னைக் கருதும் சிவகுரு தன்மகள் சிவகாமியுடன் என் மகன் குமாரசாமியை இணைத்து எத்தனை இன்பக் கனவுகள் கண்டிருப்பானோ? நட்பின் பெயரால் அவன் அவர்களுக்குப் போட்டிருந்த முடிச்சு... அதனால் மானசீகமாக என் மருமகளாகிவிட்ட சிவகாமி... அவளிடம் இந்தச் சங்கிலியைப் பரிசாகக் கொடுத்து...'

மறுகணம்...

'சிவகுரு என்னைக் கண்டால் சும்மா விடமாட்டான். என்ன இருந்தாலும் உன்ரை மகண்ட கலியாணந்தானே? என்று சொல்லுவான். சிவகுருவின் இஷ்டத்திற்கு விரோதமாகப் போக இயலாது. பின்பு?' சாண் ஏற முழம் சறுக்கும் சிந்தனைகள்.

மடியிலிருந்த சங்கிலியைக் கையிலெடுத்தான் மாரிமுத்து. அதற்கிடையில் சிவகுரு தம்பதிகள் வெகுதூரம் சென்று விட்டார்கள். உள்ளத்தில் எழுந்த ஒரு ஆசை – சிவகாமிக்கு அந்தச் சங்கிலியை பரிசு கொடுப்போம் என்ற ஆசை – உள்ளத்தில் கருகிவிடுகிறது.

நடுநிசி கடந்த மயான இருள்....

கொண்டல்சேர் கோபுரங்கொண்ட முல்லைப்பற்றுப் பிள்ளையார் கோவில் மௌனத்தில் அமுங்குகிறது...

கண்ணுக் கெட்டும் தூரம் வரையில் மனித நடமாட்டமே கிடையாது....

கோவிலின் கதவுகள் சாத்தப்படப்போகின்றன.

உள்ளம் உந்தும் வேகத்தில் மாரிமுத்து கோவிலை அடைகிறான்.

கோவிலின் கதவைப் பாதி சாத்தியபடியே, முன்னால் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் மாரிமுத்துவைப் பார்க்கிறார் ஐயர். ஐயரை மாரியும் பார்க்கிறான். அவனுக்குப் பழக்கமான குடுமிக்காரக் கூன்முதுகு ஐயரல்ல. ஒருவேளை அவரின் புத்திரபாக்கியமாக இருக்கலாம், இந்தச் 'சிலுப்பாக்கார' ஐயர்.

"ஐயா!"

"என்ன வேணும்? பத்துமணிக்குத் தாலிகட்டு என்று சொல்லி இவ்வளவு நேரமும் வைத்து அந்தக் கலியாண வீட்டுக்காரர்கள் உயிரை வாங்கிவிட்டார்கள். எனக்கும் விழிப்பு; பிள்ளை யாருக்கும் விழிப்பு! உனக்கு இப்ப என்ன வேணும்? பிரசாதமா?"

"இல்லை, பிள்ளையாருக்கு ஒரு நேர்த்திக்கடன், கொண்டந்தனான்." என்று சொல்லி, மாரிமுத்து ஐயரிடம் அலிஸ்நோனாவின் சங்கிலியை ஒப்படைத்து "இதைப் புள்ளையாருக்குச் சாத்துங்கோ. கூட, இப்ப இங்கு கலியாணம் செய்துபோகும் மாப்பிள்ளைக்கும், பொம்பிள்ளைக்கும் என் பெயரால் ஒரு அரிச்சனை போடுங்கோ..."

அந்த வார்த்தைகளில் உருக்கமும் பாசமும் மண்டிக் கிடப்பதை ஐயரால் உணரமுடிகிறது.

"பேஷாய்ப் போடுறன். அந்தப் புதுத் தம்பதிகள் மேலே உனக்கு இவ்வளவு கரிசனையென்றால், கல்யாணத்திற்குப் போகலாமே, ஏன் உன்னைப் பந்தியில் சேர்க்க மாட்டாங்களோ?...."

'நான் தீண்டத்தகாதவனல்லன்; நினைக்கப்படாதவன்!'

மௌனம். மாரிமுத்துவின் உள்ளத்தின் அழுகுரலாக, இலேசான விம்மல் சத்தம். பிள்ளையாரும் அர்ச்சகரும் அலிஸின் தங்கச் சங்கிலியால் பிணைக்கப்படுகிறார்கள். கோவிலின் கதவுகள் சாத்தப்படுகின்றன...

மாரிமுத்துவின் மடிப்பாரம் இலேசாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பாரம்?

வெளியில் இருள்; மனதில் சூனியம்; நடக்கிறான்.

எங்கே?

முல்லைப்பற்றுப் பிள்ளையாருக்குத்தான் வெளிச்சம்.

செல்லும் வேகத்தில் அவன் கால்களை ஏதோ இடறுகிறது. அது மத்தாப்பின் கொட்டு. வான வெளியில் பச்சை - சிவப்பு - நீலம் - மஞ்சள் - கத்தரி ஆகிய வர்ண ஒளிப் பந்துகளைக் கக்கித் தள்ளிக் கருகிக் கிடக்கும் கொட்டு.

அதைத்தாண்டி மாரிமுத்து என்ற கருகிய மனிதக் கொட்டு நடக்கிறது...

கருகிய கொட்டுகள் இனி யாருக்குத் தேவை?

இவையின்றி, மா.குமாரசாமி தம்பதிகளின் நான்காம் சடங்கு விமரிசையாக நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தாப்பு

## பிறந்த வரலாறு

கனக. செந்திநாதன்

ஒருகாலில் ஐந்து இலைப் பந்தலாகிய இக்குறுநாவல் (மத்தாப்பு) தோன்றிய வரலாறு சுவாரசியமானது.

மட்டக்களப்பிலிருந்து எஸ்.பொன்னுத்துரையவர்கள் யாழ்ப் பாணம் வந்த போது இ.நாகராஜனைச் சந்தித்தார். இருவருமாக குரும்ப சிட்டிக்கு வந்து என்னைக் கண்டனர். மூவரும் 'இலக்கிய அரட்டை'யில் ஈடுபட்டிருக்கும்போது தமிழ் நாட்டு வானொலியொன்றில் வாசிக்கப் பட்டு, சுதேசமித்திரனில் வாராவாரம் வெளிவந்த 'சதுரங்கம்' என்ற கதையையும், அதில் பி.எஸ். இராமையா அவர்கள் முதலாம் அத்தியா யத்தைத் தொடங்கி வைத்து, கதையை வளர்த்தப் பலகோணங் களைக் காட்டிய மாதிரியையும், மற்றைய எழுத்தாளர்கள் அதை வெற்றிகரமாக முடித்த விதத்தையும் நான் கூறி, கிழித்துப் புத்தகமாகக் கட்டி வைத்திருந்த நூலையும் கொடுத்தேன். அதே சந்தர்ப்பத்தில் 'உமா' என்னும் பத்திரிகையில் 'ஆடும் தீபம்' என்ற குறுநாவலும் வெளிவந்து கொண்டிருந்தது. இவற்றை மாதிரியாகக் கொண்டு ஈழத்துப் பின்னணியிலே ஒரு குறுநாவலை ஐந்து எழுத்தாளர்கள் எழுதினால் என்ன? என்ற பிரச்சினையை அலசி ஆராய்ந்தோம். "யோசிக்க வேண்டியதில்லை, நாமே எழுதிவிடுவோம்' என்று எஸ். பொன்னுத்துரை அழுத்திப் பேசினார். புதிய புதிய உத்தி களில், முறைகளில் பரீட்சைகள் செய்து பார்க்கவேண்டும் என்ற அவா உள்ளவர் அவர், அவாவோடு தன்னம்பிக்கையும் கொண்டவர். எனவே என்னைப் பார்த்து ஏதாவது ஒரு 'தலைப்பு' நல்லதாகச் சொல்லுங்கள் என்று கேட்டார். "சுமைதாங்கி, மத்தாப்பு" என்ற தலைப்பு இரண்டையும் நான் கூறினேன். மத்தாப்பு என்ற தலைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மத்தாப்பு என்ற தலைப்பில் ஐந்துபேர் ஒரு குறுநாவலை எழுதுவது என்று தீர்மானித்தோமேயொழிய அதில்வரும் கதை பற்றி ஒருவரும் பேசவேயில்லை. உண்மையில் அது எப்படி வளருமென்று ஒருவருக்கும் யோசிக்கும் போதும் - ஏன் - எழுதும் போதும் தெரிந்திருக்க முடியாது; வீட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மூவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது, சுன்னாகத்தில் தற்செயலாக சு.வேலுப்பிள்ளை, குறமகள் (இ.வள்ளிநாயகி) என்போரைச் சந்தித்தோம். எங்களது இந்தக் குறுநாவல் முயற்சிக்கு அவர்களும் ஒத்துழைப்பதாக ஒப்புக் கொண்டார்கள்.

வீரகேசரிப் பத்திரிகையின் யாழ்ப்பாணக் கிளைக் கந்தோர்தான், இப்போது சில வருடமாக எழுத்தாளனின் சந்திப்பு இடமாகவும், 'சங்கப் பலகை'யாகவும் விளங்குகிற தென்பது பத்திரிகைகளில் வராத உண்மை. அங்கே மூவரும் போய் எமது திட்டத்தை நிருபர் எஸ். செல்லத்துரை அவர்களிடம் கூறினோம். நிருபர் என்ற அளவோடு செல்லத்துரையை யாரும் மதிப்பதில்லை. அவர் நல்ல இலக்கிய இரசிகர். 'அவரவர் அபிப்பிராயம்' என்ற தலைப்பில் இலக்கிய - சமய - பொதுநல சேவையாளர்களை அருமையாக அறிமுகப்படுத்திக் கருத்துகளை நன்கு வெளியிட்டவர். ஈழத்து எழுத்தாளர்கள் இருபதுபேரை 'இளவரசு' என்ற புனைபெயரில் அறிமுகப்படுத்தியவர். அவர் உடனேயே திட்டத்திற்கு வேண்டிய முதற்காரியத்தைத் தொடங்கி, இ.நாகராஜனை முதலாம் அத்தியாயத்தை எழுதும்படி சொன்னார். பிறகு வேலை சுலபமாயிற்று.

செல்லத்துரை அவர்களே இந்நாவலுக்கு ஊடுபாவாக இருந்து மற்றைய எழுத்தாளர்க்கு, முதல் எழுதியோரது அத்தியாயங்களை அனுப்புவதிலும், வீரகேசரி வாரப்பதிப்பில் வாராவாரம் எழுதியவற்றை வெளிவரச் செய்வதில் வேண்டிய முயற்சி எடுத்துக் கொண்டார்கள். இதுவே இக்குறுநாவல் பிறந்த கதையும் வெளிவந்த கதையுமாகும். புத்தகங்களுக்கு முகவுரையோ - அணிந்துரையோ தேவையில்லை என்ற எண்ணமுடையவன் நான். அப்படியிருந்தும் நாவல் பிறந்த விதத்தைச் சொல்லாமலிருந்தால் கதையில் இடையிடை ஏற்பட்டிருக் கும் சிறிய முரண்பாடுகளுக்குக் காரணம் வாசகர்களுக்கு விளங்காமற் போய்விடும்; நன்றியறிதல் குணம் இல்லையே என்ற வருத்தமும் எனக்கு ஏற்பட்டுவிடும்.

ஞாயிறு வீரகேசரியில் வந்த இந்தக் குறுநாவலுக்குச் சிறப்புரை தந்துதவுமாறு ஞாயிறு வீரகேசரியின் பொறுப்பாசிரியர் திரு. லோக நாதன் அவர்களைக் கேட்டேன். அவர் மனமுவந்து அளித்த சிறப்புரை உண்மையாகவே சிறப்புரையாக அமைந்துவிட்டது.

குரும்பசிட்டி,
1.1.62



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐவர் தீட்டிய மத்தாப்பு வர்ணங்கள்

**வீ. லோகநாதன்**

சிறப்புரையை எந்த வர்ணத்தில் தொடங்கி, எந்த வர்ணத்தில் முடிப்பது?

மீண்டும் 'மத்தாப்பின்' பக்கங்களைப் புரட்டினேன்.

என் கண்ணெதிரே முல்லைப்பற்றுக் கிராமம். 'டுமீல்' என்னும் ஓசை. பல மத்தாப்புகள், மனிதனின் வாழ்க்கையும்... மத்தாப்புத்தானா? எத்தனை வர்ணங்கள்... மாரிமுத்துவின் இதயமும் ஒரு மத்தாப்பு.

ஆமாம். இந்த மாரிமுத்து யார்?

தன் மகன் கல்யாணத்தன்று ஊருக்கு வந்தும், தன் கண்ணெதிரே அது நடைபெறுவதைக் கண்டும் அதிற் கலந்துகொள்ள முடியாத வேதனையுடன் நிற்கும் ஒரு ஜீவன். அவன் மனம் மத்தாப்பாக மாறி விட்டது. அந்த மன "மத்தாப்பில் நினைவு தீ வைத்துவிட்டது" அப்புறம் கேட்பானேன் நடந்து போன இன்ப துன்பநிகழ்ச்சிகளை, மத்தாப்பு களைப் போலப் பல வர்ணங்களில் அவன் மனம் 'உமிழ்ந்தது'. காதல், வீரம், கல்யாணம், எதிர்ப்பு, கொலை, நிரபராதிக்குச் சிறைத் தண்டனை, விடுதலை, 'வழித்துணை பெறும் பிரயத்தன'த்தில் மலர்ந்த காதல், வகுப்புக் கலவரம்... இவையெல்லாம் 'மனக்கால்'களைப் பெற்று மீண்டும் அவன்முன் நடைபோட்டன.

அதன் பலன்?

மகன் திருமணத்துக்குப் போகாமல் மடிப்பாரத்தைக் குறைக்க எண்ணி முல்லைப்பற்றுப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று தான் கொண்டு வந்திருந்த அலிஸ் நோனாவின் ஆபரணத்தை அப்பிள்ளை யாருக்கு அர்ப்பணித்துவிட்டு மாரிமுத்து நடக்கிறான். வெறும் மத்தாப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டாகிவிட்டவன் போல, அவன் போகுமிடம் பிள்ளை யாருக்குத்தான் வெளிச்சம், இந்த வெளிச்சமுடன் "மத்தாப்பு" முடிகிறது.

இக்கதைக்கு "மனக்கால்"களை அளித்து ஜீவனுடன் நடமாட விட்டவர்கள் ஈழத்தின் சிறந்த ஐந்து எழுத்தாளர்கள். ஆகவே "மத்தாப்பை" **ஒரு காலில் நிற்கும் ஐந்து இலைப் பந்தல்** என்றும் கூறலாம். கதை ஒன்று; அதில் துளிர்த்து தளதளப்புடன் நிற்கும் வர்ண ஜால இலைகள். (அத்தியாயங்கள்) ஐந்து. இலைக்கொரு எழுத்தாளர் வீதம் ஐவர் இக்கதையை வர்ணப்படுத்தியிருக்கிறார்கள்.

முதலாவது வர்ணத்தில் **இ.நாகராஜன்** கதையின் கட்டுக் கோப்புக்குரிய வெளிரேகையை நன்கு எடுப்பாக வரைந்திருக்கிறார். இக்கதைக்கு 'முகூர்த்தக்கால்' நட்டு, பந்தலையும் போட்டு, ஊர்வலத்தையும் தொடங்கி, முக்கிய பாத்திரங்களையும் நடமாட விட்டிருக்கிறார். இவரது நடையிலே வர்ணக்கனவும், கனிவும், கனமும் படர்ந்திருக்கின்றன. எடுப்பும் தொடுப்பும் ஒத்துப் போகின்றன. இயற்கைக் காட்சியின் வர்ணனைகளில் கருத்தைக் கிளறக் கனத்தைக் கூட்டுகிறார்.

**கனகசெந்திநாதன்** இரண்டாவது வர்ணத்தை எழுதியுள்ளார். இ. நாகராஜன் விட்ட இடத்திலிருந்து 'ஊர்வலம் முன்னேறியது' போல கனக. செந்திநாதன் விறுவிறுப்பை ஊட்டி இக்கதை வேகமாக முன்னேற உதவுகிறார். சவாரி வண்டிப் பந்தயம் தத்ருபம், அத்துடன் - "அடிசக்கை" சிவகுருவைத் தங்கமான நண்பன் என்று பெயர்வாங்கு வதற்குரியவனாகப் படைத்து இலேசான சிரிப்புச் சுவைக்கும் இடந் தந்திருக்கிறார். இவரது எழுத்துக்கள் அழகும் இனிமையும் கலந்த வார்ப்புகள். நடையிலே ஜதிகெடாத ஒரு வேகம். இது கதையின் ஓட்டத்திற்கு உதவுகின்றது. பொதுவில் இவரது சரளமான நடை படிப்பவர் கவனத்தை எழுத்து ஜாலத்தில் நிறுத்தாமல் கதையின் சலனத்திற்கேற்றபடி சுருதி சுத்தமாய் இசைக்கிறது.

**சு.வே.** யின் மூன்றாவது வர்ணம் "ஊர்வலம் மூலைதிரும்பிய துடன்" தொடங்கி, மாரிமுத்து சிறைக்குப் போகும் வரையில் சுவாரஸ்யம் கதிகெடாமல் செல்லுகிறது. 'சு.வே'யின் பாத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணனையும், சொல்லழகும், சொல்லும் அழகும், நடையிலே ஊறியெழும் உணர்ச்சிகளும் கதைப் போக்கை நன்கு போஷிக்கின்றன. திருவிழாக் காட்சி மனத்தை விட்டகலாதபடி எழுதப்பட்டிருக்கிறது.

நாலாவது வர்ணத்தில் கதையைத் தொடர்ந்து முல்லைப் பற்றுக் கிராமத்தைக் கடந்து வெளிக்கடைச் சிறைச்சாலைக்கு நகர்த்துகிறார் **குறமகள்.** துயரமும், வேதனையும், விரக்தியும் கொப்புளிக்கின்றன. விரக்தியுடன் சிறையிலிருந்த மாரிமுத்து விடுதலையடைந்து கதிர் காமம் செல்கிறான். அங்கு தான் நிரபராதியாய் இருந்தும் சிறை செல்லக் காரணமாயிருந்த வனைச் சந்தித்து அவன் செயலை மன்னிக்கிறான். அக்காட்சி உருக்கமானது. பாத்திரப் பண்பும் உயர்கிறது. இவை யாவற்றையும் இப்பெண் எழுத்தாளர் முழுக் கதையின் வளர்ச்சிக்குப் பாதகமேற்படாத வகையில் சித்திரித் திருக்கிறார். வாய்ப்புக் கிடைத்த இடத்தில் "சமூகமே, ஒரு பொதுநல வாதியைச் சமூக விரோதியாக்கிவிடும்." என்னும் உண்மையை எடுத்துச் சொல்லத் தயங்கவில்லை. இவரது எழுத்தில் - நடையில் அழகும், உணர்ச்சிப் பிடிப்பும், தனித்து நின்று பேசும் தன்மையும் பின்னிச் செல்லுகின்றன.

இ.நாகராஜன் கிழித்த கதைக் கோட்டிற்குப் பொருத்தமாக இந்தக் குறுநாவலை மூளியாக்காமல் முடித்து வெளிச்ச பொறுப்பைப் பிள்ளையார் தலையிற் சுமத்தி விட்டிருக்கிறார். ஐந்தாவது வர்ணத்தை எழுதியவர் **எஸ். பொன்னுத்துரை.** அவர் தமது வர்ணத்திற்கென்றே ஓர் உபகதாநாயகியைச் சிருஷ்டித் திருக்கிறார். 1958ம் ஆண்டின் வகுப்புக் கலவரமே அப்பாத்திரப் படைப்புகளுக்குக் காரணமாயிருக்கிறது. அவரது படைப்பான 'அலிஸ்நேனா' மத்தாப்பில் நாம் மறக்க முடியாத பாத்திரமாக விளங்குகிறாள். "அலிஸ்நேனா" மாரிமுத்துவுடன் சேர்ந்து வாழ்ந்து உண்மையான **மனுஷியாக** நடந்து வகுப்புக் கலவரத் தீக்குப் பலியானது நமது உள்ளத்தைத் தொடுகின்றது. மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்னும் தத்துவம் இந்த வர்ணத்தில் வெளிப்பட வீறுகொண்டெழுகிறது. மனித உள்ளத்தின் சிறப்பை அலிஸ்நோனாவின் மூலம் காட்டி அவளது அன்புக் காணிக்கை யான ஆபரணத்தை முடிவில் பிள்ளையாருக்கு அர்ப்பணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிமுத்துவின் மூலம் கொடுக்க வைத்திருப்பது நல்லதொரு முத்தாய்ப்பாகும்.

எஸ். பொன்னுத்துரையின் எழுத்தில் சிந்தனையின் 'சிற்பச் செதுக்கல், வேலையும், எழுத்திலேயே கவனத்தை இழுக்கும் ஆழமும், கற்பனையின் சித்து விளையாட்டும், பொதுவில் நடையிலே வர்ண ஜாலமும், சொல்ல வேண்டியதை வெளிப்பட அடித்துச் சொல்லும் அழுத்தமும் காணப்படுகின்றன. இப்படித் தனித்து அடித்துப் பேசுவது இலக்கியப் படைப்பின் அழகைப் பாதிக்காதா என்பது சர்ச்சைக்குரியது.

நாவல் இலக்கியத் துறையிலே குறுநவீனம் ஒரு புதிய கிளையாக இப்பொழுது தமிழில் வளர்ந்து வருகிறது. இத்துறையில் கவனஞ் செலுத்தி, புதிய 'சோதனைகளை மேற் கொள்ளுவதில் ஈழநாடும் தூங்கி விடவில்லை என்பதற்கு 'மத்தாப்பு' ஓர் எடுத்துக்காட்டு.


மொத்தத்தில் 'மத்தாப்பு' ஈழத்தைப் பிரதிபலிக்கும் ஒரு சுவாரஸ்ய மான படைப்பு. சிறந்த ஐந்து எழுத்தாளர்கள் ஒரே கதையைத் தொடங்கி முடித்திருந்த போதிலும் அவரவர்களின் தனித்தன்மை இதிலுள்ள ஐந்து வர்ணங்களில் முத்திரையிட்டிருப்பதையும் காண்கிறோம். உரையாடல்களில் மண்வளச் சொற்களையும் பாத்திரங்களுக்கேற்றபடி பெய்திருப்பது படிப்பதற்குச் சுவையாக இருக்கிறது.

ஞாயிறு வீரகேசரியில் வெளிவந்தபோது பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் மனதை 'மத்தாப்பு' கவர்ந்த தென்பது குறிப்பிடத்தக்கது. கதை இலக்கியம் தமிழிலே மேலும் மேலும் வளர்ந்து வளம் பெற 'மத்தாப்பு' போன்ற புதுவழிக் கதைகள் மிகவும் அவசியம். இக் கதையை ஒத்துழைத்து எழுதிய எழுத்தாளர்க்கும் என் அன்புகனிந்த பாராட்டுதல்கள்.

வீரகேசரி
3.12.61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளுறை

அரசு • 91
ராஜ். மித்ரா

காலாள் • 96
இ. பாலகிருஷ்ணன்

குதிரை • 107
வ. அ. இராசரத்தினம்

தேர் • 115
எஸ். பொ

அமைச்சு • 145
சாலை இளந்திரையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ். மித்ரா





## அரசு

கூத்தாடியாம் ஏகனின் கூத்தும்; ஜீவராசிகளின் படைப்பும்! கூத்தின் கூத்தாகக் குதிக்கும் கூத்தே வாழ்க்கையாகவும் அதன் பயனாகவும் நம்பிக்கைத் திரையிலே பொம்மலாட்ட நிழலிட, அந்த ஆட்டச் சிதறலிற் குதிரும் வாழ்க்கையே நிசமென்ற ஊமை எண்ணங் கருக்கூட்ட, மனிதன் தன் கூத்திற் கனியும் வினைகளைப் போலியானவையென இயல்பாகவே கற்பித்துக் கொள்ளுகிறான். இதனால், விளையாட்டு என்று கற்பிக்கப்படும் விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்டில் அவனுக்குச் சுவராஸ்யம் சுரக்கிறது. சதுரங்கம் விளையாட்டு, அதன் சுவை அதற்கு உண்டு. நாமே சர்வேசுவர சூத்திரதாரியாகக் குந்தி,யானை - குதிரை - தேர் - காலாள் ஆகிய நாற் சேனைகளையும் நகர்த்தி, மாற்றுப் படையான பிறிதொரு சதுரங்க சேனையை வெற்றி கொண்டு, நம் வல்லபத்தை நிலைநாட்டுவதிலுள்ள களிப்புக் கிள்ளல் ஒரு புறம் இருக்கட்டும். நிதர்சன வாழ்க்கையிற் பராரியாகவுந் தரித்திரராகவும் இருப்பினும், சதுரங்க சேனையை வைத்து விளையாடும் அந்த வேளையில் – அந்த வேளையில் மட்டுமே என்று ஒப்புக் கொண்டாலும் - நம் மனோகற்பிதத்தில் விரியும் சக்கரவர்த்தியின் மாட்சிமை உணர்விலே பூத்துச் சொரியும் மகிழ்ச்சி மயக்கம் ஒரு புறம் இருக்கட்டும். இந்த ஒளி மயமான, ஒரு புறமேயான இந்தப் புறங்களுக்கு இப்பக்கமுள்ள உட்புறத்தின் விசாரணைகூட – அது தத்துவச் சிக்கலின் முடிச்சு களுடன் பின்னிப் பிணைந்து இருண்டு கிடந்தாலுங் கூட – சுவராஸ்யமானதுதான்! ஒளியின் முழுத்துவ அழகு அஃதே சமைக்கும் நிழலிலே வேருன்றுவது போன்ற ஜாலம். கூத்தின் ஜாலமும்; ஜாலத்தின் கூத்தும்!

உலகத்தை நாடக மேடையாகவும், மானிடரைக் கூத்தாடிகளாகவும் உவமித்தலும் தத்துவ நோக்கஞ் சார்ந்ததே. குயிலின் இன்குரலின் புலத்தே மண்டிக் கிடக்குஞ் சோகம் நிகர்த்த, சற்றுப் பச்சையாக, இளந்தசை உடலங்களின் பாலின்பப் பசைச் சுரப்பு உலர்ந்த, 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்ற பொருமல் இந்தப் பார்வையிலே சங்கமிக்கிறது. இல்லறத்திலே துய்த்து, அத்துய்த்தல் படைத்த பயங்கரப் பாசவலையிற் சிக்கிச் சுழன்று கொண்டே, வானப்பிரஸ்த விசாரணையிற் குதித்தெழும், 'உலகமே நாடக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடை சொச்சம்...' நோக்கில் எங்கேயோ ஓட்டை விழுந்திருக்கிறது. அந்த ஓட்டை வாலிபத்திற்கும் விருத்தாப் பியத்திற்குமிடையேயுள்ள தூரமாகக் கூட இருக்கலாம். வாலிபத்தின் பார்வை முதிர்ச்சி பெறாததாக இருந்தாலும் அது தசையின் சதைத் தேவை சார்ந்ததாக அமைகிறது. தேவை களின் இச்சா பலிதம் நிதர்சன மயக்கங் காட்டுவதினால், அந்தப் பார்வை வாழ்க்கையின் ஒரு ஸ்திதியிற் சரியானதே.

வாழ்க்கையைச் சதுரங்கமாகக் கற்பித்தல் வாலிபம் மருவியது. 'இலட்சிய இலக்கு' என்ற வைதீக ஒட்டடைப் படலத்தைத் துடைத்துப் பார்த்தால், அதன் தளம் வாழ்க்கை யிலுள்ள நம்பிக்கையே என்னும் உண்மையின் உள்முடிச்சுத் தெரியும். 'வெற்றி பெறுவேன்' என்கிற உணர்வும் நம்பிக்கையே. தோல்வி ஏற்பட்டு, வரிக்கப்பட்ட நம்பிக்கை சோரம் போய், அதுவே அவநம்பிக்கையாக மாறும் பொழுதுகூட, அந்த அவ நம்பிக்கை, மறு ஆட்டத்தில் முன்னைய ஆட்டத்தில் விட்ட பிழை களைக் களைந்து விளையாட்டில் வெற்றியீட்டலாம் என்ற பிறிதொரு நம்பிக்கையின் தளமாக அமைகின்றது.

'தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரம் உண்டு. அதன் பயன்களில் எப்பொழுதும் உனக்கு அதிகாரம் இல்லை... யோகத்தில் நின்று பற்றை நீக்கி வெற்றி தோல்விகளை நிகரெனக் கொண்டு தொழில் செய்க! நடுநிலையே யோகம்' - குருஷேத்திர வழிபாட்டில் இயற்றப்பட்ட கீதாவாசகம் மின்னல் சொடுக்கி மறைய, இன்னுமொரு தத்துவ முகையை மனம் மோப்ப மிடுகிறது. வெற்றி வெற்றியுமல்ல; தோல்வி தோல்வியுமல்ல. இரண்டும் ஒரே நாணயத்தின் இரு முகங்கள். நாணயத்தின் எந்த முகம் தேய்ந்திருந்தாலும் அந்த நாணயத்திற்கு மதிப்பில்லை வெற்றியில் தோல்வியும், தோல்வியில் வெற்றியும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிற்கான, ஒன்றேயான, ஆனாலும், ஒன்றேயல்லாத பல விளக்கங்கள் எய்தவனின் நோக்கு - தேர்ச்சி - தொடுப்பின் நேர்த்தி ஆகியனவற்றிற்கு ஏற்ப வீழ்த்துங் குறிகள் ...

அரசு எந்தப் பக்கமும் எதிர்ப்பில்லாத பட்சத்தில் ஒரே ஒரு சதுரம் நகர, காலாள் ஒரு கட்ட முன்னேற்றம் குறுக்கு வெட்டும் இயற்ற, குதிரை செங்கோணப் பாய்ச்சலிலும், தேர் குறுக் கோட்டத்திலும், யானை நேரோட்டத்திலும், தேராகவும் யானையாகவும் இணைந்த அமைச்சரின் இயக்கத்திலும், - எல்லாமே சட்ட வரம்பு குடைந்த கர்மங்கள் இயற்றுகின்றன. இந்தக் கிரியைகளினாற் சதுரங்க விளையாட்டிற் சுரக்கும் 'சுவாரஸ்யம்', கால நீழலில் இற்றுவிடுகின்றது. இலேசாக, ஆனால் நிச்சயமாக, விளையாட்டில் ஏற்படும் அலுப்பிற்கு வெற்றி எவ்வளவு காரணியோ, தோல்வியும் அவ்வளவு காரணியே! சலிப்பு ஏற்பட்டதும், கஜ - ரத - துரத - பதாதிகளெனக் கற்பிக்கப் பட்டு, நம் சிந்தனை ஊற்றிலே சமர் நடத்த உதவி யவை எல்லாம் வெறும் மரக்கட்டைகள் - தச்சனின் உளி செதுக்கிய மாயம் என்ற நிசம் உறைக்கின்றது. மரக்கட்டைகள் மரக் கட்டைகளே யாகி விடுகின்றன. அவை, அந்தஸ்து வேறுபாடு எதுவுமின்றி ஒரே பெட்டியிற் சயன சுகம் அனுபவிக்கத் தொடங்கிவிடும்.

சதுரங்கம்; விளையாட்டின் பகைப்புலத்திலே -

சதுரங்கம்; இலக்கிய முயற்சி பற்றிய குறிப்பும்!

'நாடகமே உலகம், நாளை நடப்பதை யார் அறிவார்?' என்ற பார்வைக்கும், வாழ்க்கை முன்னேற்றத்தைச் சதுரங்கமாகத் தரிசிக்கும் நோக்கிற்குமிடையேயுள்ள ஓட்டை விருத்தாப்பியத் திற்கும் வாலிபத்திற்குமிடையேயுள்ள தூரமெனக் குறித்தோம். கால ஓட்டத்தில் விளையும் வயது நிலைகள்! இந்தக் கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டமே சதுரங்கத்தின் நான்கு அங்கங்களிலும் இடம்பெறும் நான்கு கதைகளினதும் தொனிப் பொருளாக அமைகின்றது. வாழ்க்கையின் ஒரு நிலையிலே தன்னை நாற்படை ஒன்றின் முன்னணி வீரனெனக் கற்பித்து, அந்தக் கற்பிதஞ் சமைத்த குபேர சுவையைச் சுகித்த நான்கு வேறுபட்ட பாத்திரங்கள் நான்கு கதைகளிலும் வருகின்றன. ஒவ்வொன்றும் அவ்வக் கதையினது நாயக பாத்திரம், உடற் பலத்திற்கும் மனப் பலவீனத்திற்கும் ஏற்ப, அல்லது மனப் பலத்திற்கும் உடற் பலவீனத்திற்கும் ஏற்ப மட்டுமல்லாது (எதன் பலமும் எதன் பலவீனமும் உண்மையான பலமாக அமைகிறது?), வாழ்ந்த வாழ்க்கை முறையாலும், வரித்த இலட்சியங்களாலும் வேறுபடும் நான்கு பாத்திரங்களின்மீது, ஒரே தொனிப் பொருளை ஏற்றி, ஈழத்தின் நான்கு கதாசிரியர்கள் எழுதும் நான்கு சிறுகதைகள் சதுரங்க இலக்கிய முயற்சியில் இடம் பெறுகின்றன. கதாசிரியர் நால்வரும் நான்கு வகையினர். கதைகள் நான்கும் நான்கு வகைத்தே! ஒவ்வொன்றும் தனித் தனியே ஒவ்வொரு சிறுகதை. அவற்றை ஒரு சேரத் தொகுக்கும் பொழுது, புதிய கோலத்திற் புதியதோர் இலக்கிய முயற்சியாக முழுமை பெறும் என்பது நம்பிக்கை. இந்த நம்பிக்கை நான்கு கதாசிரியர்களினதும் சிருஷ்டி இலக்கிய ஆற்றல் பற்றிக் கனிந்தது. வாழ்க்கையை நாடகமாக நோக்கினாலென்ன, சதுரங்கமாக நோக்கினாலென்ன, ஈற்றில் பெருக்கி - வகுத்து - கூட்டி - கழித்துப் பார்த்தால் மிச்சிலாகக் கிடைக்கும் விடை நம்பிக்கையேதான்.

அரசு காப்பே. அதன் காப்பிற்குச் சதுரங்க சேனைகள் விளையாடத் தொடங்குகின்றன...

UNIVERSITY OF PERADENIYA 2003-10-18 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர். பாலகிருஷ்ணன்





# காலாள்

கொழும்பு நோக்கிப் புகைவண்டி மேற்கொள்ளும் பயணம். அசைந்து அதன் ஆரம்ப நிலை. கூட்டத்தின் நெரிசல். அதன் பலவித ஸ்வரமூச்சு. அதனுடன் ஒட்டியும், ஒட்டாமலும் சிற்றுண்டிச்சாலை அமைந்திருக்கும் பெட்டியில் ஒரு பெரியவர். அப்பதத் திற்குப் பொருத்தமானவர். வாழ்க் கையின் மதியத்தைத் தாண்டிய வயதினர். தனிமையின் சுகம் அவருக்குக் கிட்டியிருக்கிறது. அந்தத் தனிமையின் தனிமைக்குக் கூட ஒரு துணை அவருக்கு முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிளாஸ் - அரைவாசி நிரப்பப்பட்ட அல்லது அரைவாசி வெறுமையாக்கப்பட்ட கிளாஸ் - இருக்கிறது. கிளாஸிலுள்ள திரவத்தில் பல விம்பங்களை - மனித விம்பங்களை - பார்ப்பவரைப் போன்று, அதனையே உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இல்லை; தன்னுடைய காயை நகர்த்து வதற்கு முன்னர், சதுரங்கப் பலகையை நன்றாக அவதானிக்குங் கோலம். அவர் விளையாட்டிலும் சரி, அரசிய லிலும் சரி 'புலி' என்று பெயர் பெற்றவர். இந்தக் காலப் 'புதிசு'கள் அதனைத் சரித்திரம் என்பர். அது ஒரு காலம் அந்தக் காலத்தின் பாளத்திலே ஒரு மின்னற் பிழப்பு...

> *காலாளாற் காலாளை வெட்டினாலும், நான் வெகு கவன மாக இருக்கவேண்டும். நான் மந்திரிக்கு மந்திரி கொடுக்கத் தயார். எதிரியின் பலத்தை ஒரேயடியாகச் சீர்குலைத்தாற்றான் அமைதியாக விளையாட முடியும். என் காலாள் முன்னேறி மந்திரியாகுமென்ற நம்பிக்கை இருக்கிறது. அந்தக் காலாளைக் காப்பது தான் என் கடமை. அதுவே வெற்றியின் திறவுகோல்.*

அவருடைய முகத்தில் விரக்தியின் சித்திரம் தீட்டப் பட்டிருக்கின்றது. வேறு எவரும் சிற்றுண்டிச் சாலைக்குள் வருவதற்கு முன்னர், அங்கு வந்து மது கிளாஸின் முன்னால் தவம் இயற்றுவதனால், அவர் குடியையே தமது முழு நேர வேலையாக வரித்துக் கொண்டார் என்று எவரும் நினைக்கலாம். கணப்பொழுதில் கையும் வாயும் இணங்கி இயங்க, கிளாஸ் வெறுமையாகுகின்றது. மூலையில் ஒரு மரப் பெட்டியில் இருந்து கொண்டு, வெளியே 'ஓடும்' தந்திக் கம்பங்களை எண்ணிக் கொண்டிருக்கும் பணியாள் சாதாரணமாகத் திரும்பிப் பார்க்கின்றான். பெரியவர் மூன்று விரல்களை மடக்கி, பெரு விரலை அழுத்தி, ஆள்காட்டி விரலை நிலைக்குத்தாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்த்திப் பிடித்துச் சைகை காட்டுகின்றார். பணியாள் வாய்க்குள் ஒரு புன்னகையை விழுங்கிக் கொண்டு, மேஜையிலுள்ள வெற்று கிளாஸை எடுத்துச் செல்கின்றான்.

> ***சதுரங்கப் பிணக்குகள்... காய்கள் திருட்டாந்த உதவி. ஆனால், கற்பனையிலே மூன்று நகர்த்தல்களைப் 'படம்' போட்டு, 'சுழிப்பதி' லேயுள்ள இன்பம். என்றாலும், ஆட்டம் முடிந்ததும், சதுரங்கக் காய்களுக்கும் ஆட்டக் காரனுக்கும் எவ்வித பந்தமும் இல்லை.***

பணியாள் அவருடைய 'ஓடர்'ரைக் கவனித்துப் புதிய கிளாஸுடன் வந்து நிற்க, புகைவண்டி ஏதோ ஒரு நிலையத்திற் தரிக்கின்றது. சிற்றுண்டிச் சாலையின் மூன்றாம் வகுப்புப் பிரிவிற்குள் கூட்டம் 'சரி' யத் தொடங்கிற்று. வியாபாரத்திற் சூடு பிடிக்கின்றது. பெரியவர் இப்பொழுதும் கிளாஸுக்கு முன்னாற் தவமியற்றுகின்றார்.

அப்பெரியவர் அமர்ந்திருந்த மேஜைக்கு மூலைவிட்ட எதிராக இருக்கும் மேஜையில் வாலிபன் ஒருவன் வந்து அமருகின்றான். பணியாளை அழைத்து ஒரு விரலைக் காட்டி, அவன் வாயாற் சொன்ன 'ஓடர்' புகைவண்டியின் இரைச்சலில் விழுங்குண்டாலும், பணியாளின் செவிகள் கிரகித்துக் கொள்ளுகின்றன. உள்ளே சென்று திரும்பிய பணியாள் அவன் கேட்ட மதுவை மேஜையில் வைக்கின்றான். பிரயாண அலுப்புக்காகப் பாவிக்கின்றான் என்ற சாயலும் தோன்றுகின்றது. வெகு அமரிக்கையாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக் கின்றான். குடியைப் பார்க்கிலும் புகைத்தலின் நாடலே மிகுதி. வாயிலிருந்து சுருள் வளையங்களாக எழும் சிகரெட் புகை சுருண்டு, நெளிந்து, நெகிழ்ந்து செல்வதை அநாயாசமாகப் பார்த்துக் கொண்டு, மேஜையிற் கையினால் மனோகற்பிதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் ஒன்றிற்குத் தாளம் போட்டுக் கொள்ளுகின்றான்.

> ***ஆசையின் புகை வளையங்கள் விதியென்னும் காற்றில் அலைபடும் விந்தைதான் என்ன? சிகரெட் கருகித் தீர்ந்ததும், அது உருவாக்கிய புகையின் அளவை மனதில் வைத்திருப்பவன் யார்?***

அனுபவம் பூத்த கண்கள் அந்த வாலிபனை எடை போடுகின்றன. சுருள் மயிரை கிறீமின் உதவியுடன் பளபளக்கும் படிகளாக வாரியும், ஒரு கற்றை மயிரை நெற்றியிலே தவழச் செய்வதற்குக் கலைத்துவம் தேவையில்லையாயினும், பொறுமையும் நேரவிரயமுந் தேவை. சிகரெட்டை ஏந்தியிருக்கும் கையில் தங்கச் செயினிலே பொருத்திய தங்க நிறக் கடிகாரம்; மேஜையிலே தாளம் போடும் கையின் இரு விரல்களில் மோதிரங்கள்; உடலிலே அப்பிக் கிடக்கும் 'பனியன்' வெளியே துல்லியமாகத் தெரியும் படியான 'நைலோன் ஷேட்'; விலை அதிகமுள்ள இறக்குமதித் துணியாலான நீட்டுக் காற்சட்டை; அது அகலம் குறைந்த 'பெல்' டின் துணையில் அவன் இடுப்பிற் தொங்கிற்று! கால்கள் சப்பாத்துகளின் கூரான நுனிகளிலே முட்டுக் கொடுக்கப்பட்டு, துரித கதியில் ஆடிக் கொண்டிருக் கின்றன. ஒருவனது தோற்றத்திலிருந்து அவனுடைய குணாதி சயங்களைக் கூறிவிடலாம் எனச் சாதிக்கக் கூடிய உள இயல் ஆசிரியர், இவனைப் பற்றி 'ஊதாரி; எந்த விஷயத்திலும் ஊன்றிச் செல்லாத மேற்பரப்பு லயிப்பு உள்ளவன்; வெளியே பெரிதும் டாம்பீகமாகக் காட்டிக்கொள்ள விரும்புபவன்', என்று சொல்லக் கூடும் என்பதைப் பெரியவர் நிதானிக்கின்றார்.

"தம்பி, கொழும்பிற்கா?..." அப்பொழுதுதான் சிற்றுண்டிச் சாலைக்குள் வந்த ஒருவர் அந்த வாலிபனை விசாரிக்கின்றார்.

"ஓம்... இருங்கோ நீங்கள்?" எதிரே நிற்பவரைச் சட்டென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளந் தெரியாததாகக் காட்டிக் கொள்ளுகின்றான். வாலிபனின் இந்த அலட்சியம், நடிப்பு என்பது பெரியவரின் அபிப்பிராயம்.

"நான் பசுபதியின்ர மச்சான். உங்கள அடிக்கடி வந்து பாத்துமிருக்கன்..."

"எந்தப் பசுபதி"

"அவர்தான் ஜி. பி. எஸ். பசுபதி..."

"அட, நம்மட பசுபதி... நீங்க... வி... வி..."

"ஓ... வினாயக..."

"வினாயகமூர்த்தி மாஷ்டர்!"

"ஓம்..."

"அந்த 'இன்குயறி' என்ன வாச்சாம்...? நான் கொமிஷனருக்கு ஒரு கடிதம் குடுத்த"

"எல்லாம் சரியாப் போன மாதிரித்தான்... ஆனா, ஒரு சின்ன கனகாட்டு... மறுகா வந்து பாக்க வேணுமெண்டு பசுபதி சொன்ன..."

வாக்கியத்தை முடிக்காமலே, வந்தவர் வாலிபனுக்குஞ் சேர்த்து 'ஓடர்' கொடுக்கிறார். அவனுடைய முகம் புன்னகை ஒன்றைக் கக்கியது. 'அந்த ஓடர் என் கணக்கு'என்ற ஒப்புதலையோ, உங்கள் உபயத்திற்கு நன்றி என்ற அங்கீகாரத்தையோ அந்தப் புன்னகை உகுத்தது என்பதைப் பெரியவரால் நிதானிக்க இயலவில்லை.

வாலிபன் தலையை வெளியே நீட்டிப் பிரயாணத்தின் வளர்ச்சியை மதிப்பீடு செய்பவன் போல வண்டியின் தலைப் பக்கமும் வாற் பக்கமும் பார்த்த பின்னர் தலையை உள்ளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துக் கொள்கிறான். இழுக்கும் பொழுது அவனது பார்வை பெரியவர் மீது சற்றே விழுந்து தரிக்கின்றது. ஓடும் வண்டியிலே உடலை வைத்து, பறக்கும் ஓர் ஊர்தியில் இருப்பதான கோலத்திற் காணப்படுகின்றார். கிளாஸுக்குள் சிக்கிக் கிடந்த அவர் பார்வை வாலிபனின் கண்களைச் சந்தித்தது. 'ஆளுக்கு நல்ல பருவம்' என்ற அபிப்பிராயம் மின்னலிட்ட கண்களைத் தன்முன்னே உள்ள 'கிளாஸி'லும், படைக்கப்பட்டிருக்கும் சிற்றுண்டி வகையிலும் படிய வைக்கும் முகமாகக் குனிகின்றான்.

வாலிபனது பார்வை, இப்படியாக, இருட்டிலே சென்று, தன்னிடம் திரும்பி, மேஜையிலே படைக்கப்பட்டிருப்பவற்றிற்கு வருவதற்குள் வண்டி தன் பயணத்தின் ஒரு பின்னத்தை முடித்து முன்னேறிவிட்ட சாகஸத்தில் பெரியவரின் சிந்தனை நிலை குத்தியது.

...சென்ற தூரம் வளர, செல்ல வேண்டிய தூரந் தேயத் தேயப் பிரயாணம் நிகழ்கின்றது...

நிகழ்வனவும் நிகழ்ந்தனவும்!

***பழுத்த மரத்தை நாடிவரும் வெளவாற் கூட்டம். மனிதரும் அப்படித்தான். வெளவால் பறவையா? விலங்கா? மனிதர்கள் அரசியலில் கோஷ்டி சேர்வதும் வெளவால் விவகாரம் கோஷ்டி சேர்ந்ததினால் கிடைக்கும் பயனின் பழங்களை நாடலும் வெளவால் விவகாரம்; இதோ, இந்த வாலிபனின் மிடுக்கு! தேர்தல் என்ற குதிரைப் பந்தய ஓட்டத்தில், எதிர்பாராத 'வின்' அடித்த "சோப்பளாங்கி"க் குதிரை. எந்த அரசியற் கட்சியும் அந்தக் குதிரைமீது பணம் கட்டத் தயாராக இருந்ததுமில்லை. ஆனால், இன்று.***

***சட்டசபைக் காலந் தொடக்கம், 'வின்' அடித்த குதிரை நான்! இல்லை ஒவ்வொரு கட்டமாக நகர்ந்து சென்று,***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மந்திரியாகிய காலாள்! அப்பொழுது, என்னிடம் பேட்டிக்குத் தவமிருந்தோர் எண்ணிக்கை? தொல்லைகளைத் தவிர்த்துக் கொள்ளுவதற்காக பயணங்களை மிக இரகசியமாக வைத்துக் கொள்ள எடுக்கப்பட்ட எத்தனம்... இவற்றிற்கும் மேலாக, நான் காலாளே என்ற உண்மையை மறக்காமல், 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனச் செய்த சேவைகள்... என்னால் உதவி பெற்று நிமிர்ந்த வாழ்க்கை நடத்தும் அதே மக்கள், இன்று என் கண்களிற் சந்தித்தால் 'சறவை' என்ற எண்ணத்தில் றோட்டு மாறிச் செல்கிறார்கள்... அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் போக்குச் சரி. பழத்தில் சாறு இருக்கும் வரை அதனைச் சூப்புவதும், பின்னர் சக்கையைத் துப்புவதும் மனித இயற்கை. கரும்பின் சாறெடுத்து, அதன் சக்கையையே எரிபொருளாக்கும் விவேகி மனிதன்.***

***இந்த வாலிபன் ஒரு ஜி. பி. எஸ். மனேஜர் மீது வந்த விசாரணையின் சிக்குகளை அறுக்கத் தெரியாது, ஊதித் தள்ளும் புகை வட்டங்களுக்குள் மார்க்கம் கிட்டுமா என்று அண்ணாந்து பார்க்கின்றான். எத்தனை சங்கங்களையும், அவற்றின் மனேஜர்களையும் உருவாக்கினேன்? பிறர் சிக்கல்களை நேர்த்தியாக அவிழ்க்கத் தெரிந்த எனக்கு, என் சிக்கல்கள்...***

உண்மையின் தரிசனம், வந்தவரின் உபயத்தில் வாலிபன் மதுவைச் சுவைக்கின்றான். அவர்களுக்கு இன்னுமொரு 'றவுண்ட்' வருகின்றது. பெரியவரின் சைகைக்கும் பணியாள் பரிமாறுகிறான்.

"தம்பியைக் கொழும்பில் காணுற எண்டா எங்க காணலாம்...?"

"சிறாவ்ஸ்தியில நான் தங்குறேல்ல... எப்பவும் அஞ்சு பத்துப் பேர் வந்து கரைச்சல் தாற..." என்ற வாலிபன், முகத்தில் வலிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவித்த முக்கியத்துவத்தை அப்பிக்கொண்டு, ஒரு 'டயரி' யின் பக்கங்களைப் புரட்டியவாறு...

"நாளைக்குச் சரியான வேலையிருக்கு. மந்திரியையும் ஒரு முறை பாக்கவேணும். நாளையன்றைக்கும் மூச்சுவிட நேரமில்லை..." என்கிறான்.

"இல்லைத் தம்பி 'எடியுகேஷன்' கந்தோரில ஒரு சின்னப் பணிவிட... என்ர மனைவிக்கு ஒரு மாற்றம் வந்திருக்கு. அந்த 'றான்ஸ்பரை' ஒரு இரண்டு மாதத்துக்கு 'டிபர்' பண்ணித் தந்தாக் காணும். மறுகா நான் பாத்துக் கொள்ளுறன். எங்கட தம்பி தங்க ராசா ஊரில இல்லை. ஜப்பானுக்குப் போயிட்டாராம். தம்பி வந்தோடன இந்த 'றான்ஸ்பர்' 'ஓடர்' போட்ட கிளாக்கனை 'றான்ஸ்பர்' செய்து போட்டுத்தான் மறு பணிவிட பாப்பன்."

"ஓ, அந்தப் புதுப் பள்ளியைப் பதியிறதுக்கு அலைஞ்சது நாயலைச்சலாப் போயிற்று. நாளைக்கு மந்திரியைக் கண்டு பேசினால்தான் ஏதும் முடியும்... அதோட இந்த 'றான்ஸ்பர்' 'ஓட' ரையும் மந்திரியிட்ட சொல்லிக் 'கென்சல்' பண்ணுறன்"

வந்தவர் பணியாளிடம் புதிய 'ஓடர்' ஒன்று கொடுத்து முடித்து, "அப்ப விபரங்கள்..." என இழுத்தார்.

"ஒரு பேப்பரில இப்பவே குறிச்சுத் தாருங்கோ," என்ற வாலிபன் மதுக் கிளாஸைக் கையில் எடுக்கிறான்.

***ஒரு சின்னப் பள்ளிக்கூடத்தைப் பதிய மந்திரியைப் புடிக்கப் போறானாம். நான் பள்ளிக்கூடம் பதிய யாருக்கும் காவடி எடுத்தது கிடையாது. நான் கேட்டுக் கொண்டதற்காக இந்த மாகாணத்தில் மூன்று பெரும் கலாசாலைகள் கட்டப்பட்டன. என் வாதத்திறமையை முன் வைத்து, நான் காய்களை நகர்த்திப் பெற்ற வெற்றிகள். என்றும் Stale - mate என்பதற்கே இடமில்லை. அரசு எப்பொழுதும்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முற்றுகையிற் சிக்கி, அசைய முடியாத தோல்வி!... ஒரு சின்ன 'றான்ஸ்ப' ருக்கு மந்திரி தேவையா! பெரிய பெரிய விசாரணைகளை எல்லாம் கந்தோர் மட்டத்தில் வைத்தே தவிடு பொடியாக்கினேன். ஒரு கந்தோருக்குள் புகுந்து, தனிப்பட்ட 'பை'யிலை எடுத்து, குற்றச்சாட்டு சம்பந்தமான தஸ்தாவேஜுகளைக் கிழித்தெறியத் தெரியாதா?... சில விளையாட்டுக்காரர்கள் காலாட்களின் முக்கியத்துவத்தை அறிவது கிடையாது. பெரிய ஆபிஸராற் செய்ய முடியாத ஒன்றை, ஒரு கிளாஸ் – திரீ – கிளறிக்கல் சேவன்ரினால் சாதிக்க முடியும்... இன்று காலாட் காயாக அசைகின்றேன். அழிந்து போகாது, முன்னேறி எதிரியின் அடித்தளத்தை அடைந்தால் மீண்டும் மந்திரியின் அந்தஸ்தைப் பெறலாமென்பது சதுரங்கப் பலகையில் மட்டுந்தானா?*

வண்டியும் ஓடுகின்றது; நேரமும் ஓடுகின்றது. பார்வை மது கிளாஸிற்குள் ஆழும் ஆழமாக விழுந்து புதைகின்றது.

வாலிபனுக்கு முன்னால் இப்பொழுது வேறு இருவர் இருக்கின்றனர். அவர்களும் ஏதோ சுய கருமங்கள் இயற்றிக் கொள்ள அவனை வளைய வருகின்றார்கள். அவர்களுக்குத் திருப்தி தரக் கூடிய பதில்களை அவன் தன் சாதுரியச் சக்கரத்திலே வனைந்து கொடுக்கின்றான்.

*இவர்களுடைய அரசியல் ஒரு வகை. தனி நாலு பேருக்கு உதவி செய்கிறார்கள் நாலுபேர், கிளைக் கொடியுடன் நானூறு பேராக மாறி உதவி செய்கிறார்கள்! ஆள்தொகை என்ற புள்ளி விபரம் மட்டுமே அரசியலை நிர்ணயிக்கின்றது என்று நிலை மாறியுள்ள இந்தக் காலத்தில், இது ஆதாயமான முறையாக இருக்கலாம். ஆதாயமும் சரியும் ஒரு பொருட் கிளவிகளல்ல... நானூறு பேருக்கு வேலை கொடுத்து, அதன் மூலம் நாலாயிரம் வயிறுகளுக்கு உணவளிக்கத் தக்க ஆலையொன்றினைக் கட்டிக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கொடுப்பதென்பது எவ்வளவு பெரிய காரியம்? அதற்காக எத்தனை பெரும் சக்திகளை எதிர்க்கவேண்டியிருக்கிறது?***

வண்டி ஏதோ நிலையத்திற் தரித்து, மீண்டும் கொழும்புப் பயணத்தை மேற்கொள்ளுகின்றது. மின்சாரம் கக்கிய ஒளிக் காட்டில், பெரிய ஆலையொன்று தெரிகின்றது. நெடு நாள் பிரிந்த காதலியைச் சந்திக்கும் உணர்ச்சி அந்த நிலையிலே கூட அவர் முகத்தில் மலர்ந்து மந்தகாசப் பொலிவு ஏற்றுகின்றது. யன்னலுக்கு வெளியே விழி எறிந்து அதனையே பார்த்தபடி இருக்கின்றார். அந்தக் காட்சி மறைய, காட்டின் இருள் எல்லையற்று விரிந்து கிடந்தது. அந்த கிளாஸைக் காலியாக்கினார். இரவுச் சாப்பாடு தேவையில்லையென்ற நினைப்பு.

சயனப் பெட்டிச் சிப்பந்தி அவர் பக்கத்தில் நின்றான். அவர் சிரித்தார். பதிலுக்கு அவனும் சிரித்தான். சிரிப்பையே ஊடக மொழியாக உபயோகித்த அவர்கள் சயனப் பெட்டியை நோக்கி நடக்கிறார்கள். முதலாம் வகுப்புச் சயன அறை ஒன்றின் கீழ்ப் படுக்கையிற் சயனப் பெட்டிச் சிப்பந்தி தன் கைப்படவே சொகுஸு மஞ்சம் அமைத்துக் கொடுக்கின்றான். பெரியவர் படுக்கின்றார்.

"ராகமவில் எழுப்பி விடு..." என்று பெரியவர் கூறச் சயனப் பெட்டிச் சிப்பந்தி நகருகின்றான். பெரியவரின் சிந்தனையும் அரசியற் சதுரங்கத்தில் நகருகின்றது.

***இன்று அரசியல் என்பது தனி நபர்ப் பிரபல்யமாக அமைந்து விட்டது. சமுதாய முன்னேற்றம் என்பவை எல்லாம் இன்று அர்த்தமற்ற வெறும் மேடைக் கோஷங்கள். நல்ல ஒரு திட்டத்தை அமுல்படுத்த நாலுபேர், சுயத்தில் வேரூன்றிய வறட்டுக் கௌரவத்தை விடுத்து ஒன்று சேர்வது கஷ்ட மாகி விட்டது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***புகழ்! அதையே உரமாகக் கொண்டு மேலும் புகழ்!... எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிப்பதிலே தன்னைத்தானே அழித்துக் கொள்வது கர்மயோகியின் கொள்கை. அல்லது, கர்ம யோகி என்பவன் இந்தக் காலத்தில் Misfit ரா?***

தூக்கம் பெரியவரின் இமைகளைச் சுருகு தடத்திற்குள் சிக்க வைக்க எத்தனம் செய்கின்றது.

வெளியே வாலிபன் சயனப் பெட்டிச் சிப்பந்தியுடன் பேசிக் கொண்டிருக்கிறான்.

"லோவர் பேத்தில் யார்?"

"அந்தப் பெரியவர்..."

"அவர் என்ன அவ்வளவு பெரியவரா? நீ குழைந்து குழைந்து பேசுகிறாய்" மது உதறித் தெளித்த நாக்குத் தளர்ச்சி.

"அது தாங் மாத்தயா நேத்து வந்த கொம்பு ஆதியாக இருந்த செவியை மறைக்கக் கூடாது. நீங்கள் இதில் அஞ்சு மாசம் போய் வாறதுதானே! இந்த துரை எவ்வளவு காலமாக... அவர் மந்திரி யாகக்கூட இருந்தவர்...."

"அவரா இவர்?" மலைப்புடன் வாலிபன் கேட்கின்றான்.

***அன்றைக்கு மந்திரி இன்று காலாள்; சதுரங்கத்தில் காலாள் மந்திரியாகலாம்; ஆனால், மந்திரியாற் காலாளாக முடியுமா?***

இந்த நினைவுடன் பெரியவர் நித்திரையை அணைத்துக் கொள்கின்றார். வண்டியின் பயணம் நீள்கின்றது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ. அ. இராசரத்தினம்



## குதிரை



இராமகிருஷ்ண மிஷன் பாட சாலை மண்டபத்தில் ஆசிரியர்களின் விடுமுறைக் கழகம் நடந்து கொண்டு இருந்தது.

திட்டவட்டமான குறிக்கோளும் கொள்கையும் அற்று, நினைத்தவர் நினைத்த போதெல்லாம் கல்விக் கொள்கையிற் தலையிட்டுத் தாம் முடைந்த தொப்பிக்குத் தக்கதாகத் தலையையே வெட்டிக் கொள்ளும் முயற்சியில், ஆசிரியர்களை வற் புறுத்துவதற்காக நடைபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி இது, என்று பல ஆசிரியர்கள் உள்ளூர நினைத்துக் கொண்டாலும், மண்டபம் என்னவோ நிரம்பி வழிந்தது. ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், வாலிபர்கள், தலை நரைத்தவர்கள், பட்டாம் பூச்சியின் வாக்கிற் சுழன்று திரியும் வாலைக் குமரிகள், அவர்களில் மொய்க்கும் இளைஞர்கள்....

எத்தனையோ பேருக்குத் திருகோணமலைப் பட்டினத்தில் என்னென்னவோ அலுவல்கள், விடுமுறைக் கழக வகுப்புக்காக கடனே என்று ஐந்து ரூபாவை அழுது தொலைத்துவிட்டு அந்தச் சாக்கோடு பட்டினத்திற் பல அலுவல்களையும் கவனிக்க வந்த கிராமத்து ஆசிரியர்கள் பலரும், விடுமுறைக் கழகத்தை ஒரு பொழுதுபோக்காகக் கருதித் தம்மை மறந்த களிமயக்கிற் சுகித்திருந்த இளைஞர்கள் சிலரும் சித்திரப் பாவையின் அத்தக அடங்கி, விரிவுரையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மேடையிலே பேராசிரியர், கீழ் வகுப்புகளிற் கணிதம் பயிற்றும் முறை பற்றிப் போதனை செய்து கொண்டிருக்கிறார். இங்கிலாந்திலும் படித்து இளவயதிலேயே பேராசிரியராகி விட்டவர். அவர் பக்கத்திலிலே தமிழ்ப் பாஷை படிப்பிக்கும் முறை பற்றி அடுத்ததாகப் பேச இருந்த பண்டிதர் நல்லதம்பியும் வீற்றிருந்தார். ஆம்; ஓய்வுச் சம்பளம் பெற்றுத் தன் வயதில் முதுமை காரணமாக ஓய்ந்திருந்த நல்லதம்பிப் பண்டிதர், தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கழுத்தைச் சுற்றிய விசிறி மடிப்புச் சால்வை சங்கரா பரணச் சர்ப்பமாக நெளிய, தம் தடித்த மூக்குக் கண்ணாடியினூடாகச் சபையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே, ஆரோகணித்துக் கொண்டு எதிரி படைக்குள் புகத் தயாராக நிற்கும் போர்ப் புரவி போன்று கம்பீரமாகக் காட்சியளித்தார்.

நல்லதம்பிப் பண்டிதரைத் தெரியாதவர்கள் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டாரத்தில் இருக்கவே முடியாது. தனித் தமிழைத் துறை போகக் கற்றவர் என்ற இறுமாப்பை, நிமிர்த்தி நிற்கும் தன் தடமார்பில் பெருமையாக ஏற்றுக்கொண்டு, எந்நேரமும் போர்க் குதிரை போலப் பின்வாங்குதலின்றியே ஊரை; - குறிப்பாக ஆசிரிய வட்டாரத்தை – ஒரு கலக்குக் கலக்கினார் அவர். காற் சட்டை யணிந்த பல்வேறு உத்தியோகத்தர்களும், சிறப்பாக வித்தியா கந்தோரின் அத்தனை மேலதிகாரிகளும், ஏன் அந்த வட்டாரத்தின் முக்காலே மூன்று வீசம் ஆசிரியர்களும், வடக்கே யிருந்து வந்தவர்கள் என்ற எண்ணத்தை முள்ளின் உறுத்தலாக ஏற்றுக்கொண்டு, அந்த உறுத்தலிற் போர்க்கோலங்கொண்டு, ஆசிரிய கூட்டங்களில் எல்லாம் கதாநாயகனாக விளங்கிய நல்லதம்பிப் பண்டிதர் காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்தாத அபூர்வ பிறவி என்று சிலர் சொல்லிக்கொண்டாலும், கூட்டம் குழப்புவராகவே பெயரெடுத்து அந்தப் பகுதியிற் தம்பெயரை நிலை நாட்டியிருந்தார். அந்தப் போர்க் குணந்தான், ஓய்வுச் சம்பளம் பெற்ற பின்னரும் அவரை மேடை ஏற்றியிருக்கிறது. இல்லாவிட்டால், விடுமுறைக் கழகத்தை நடத்தும் வித்தியா தரிசி அவர் பாய்ச்சலின் கீழ் விழுந்திருக்க மாட்டாரா?

மேடையில் விற்றிருந்து தன் தடித்த மூக்குக் கண்ணாடியின் வழியாகச் சபையினரைப் பார்க்கையில் நல்லதம்பிப் பண்டிதருக்குப் பெருமையாகவே இருந்தது.

> ***முன்பெல்லாம் இதைப் போன்ற ஆசிரியர் கூட்டங்களிற் பெரும்பாலோர் 'அன்னியராகவே' இருப்பார்கள். என்னைப் போல ஓரிருவர்தான் இந்நாட்டவர்களாக இருப்பர். ஆனால், இப்போது பிரபையோடு உதயமாகும் அறிவுச் சூரியனுக்கு இச்சபை யிலிருக்கும் இத்தனை 'எழுவான் கரை' ஆசிரியர்களும் நாற்றங் காலாக அமைந்து விட்டார்கள், எல்லாமே என் இடைவிடாத போராட்டத்தின் வெற்றி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலிருந்து சிறப்புச் பேச்சாளராக வந்த கணிதப் பேராசிரியர், தன் பேச்சைத் தொடர்ந்து நடத்திக் கொண்டேயிருந்தார்:

"இளம் பிள்ளைகளைக் கிளிப்பிள்ளைப் பாடமாகப் பதினாறாம் வாய்ப்பாடுமட்டும், பதினாறு அலகுகள் வரை மனனம் பண்ணும்படி வற்புறுத்துகிறோம். புதிய கல்வி முறையின்படி இது தேவையற்றது; பிழையான முறை. பெருக்கல் வாய்ப்பாடுகளின் நோக்கமே – ஏன் கல்வியின் நோக்கமே - கற்றதைப் பிரயோகம் பண்ணுவதுதான். வாய்ப்பாட்டைப் பிரயோகித்துப் பெருக்கற் கணக்குகளைச் செய்வதற்குப் பதினாறாம் வாய்ப்பாடுவரையும் மனனம் பண்ணத் தேவையில்லை. மேலும், பதினாறு அலகுகள் வரை வாய்ப்பாட்டை மனனம் பண்ணவும் வேண்டாம். பத்தாம் வாய்ப்பாட்டு மட்டும், பத்து அலகுகள் வரை தெரிந்தாலே போது மானது. அதுவும் மனனம் பண்ண வேண்டும் என்ற தேவையு மில்லை. 'லொக்கார்தம்' கணித மட்டைகளை வைத்துக் கொண்டு கணக்குகளைச் செய்வது போல, வாய்ப்பாடு மட்டை களை வைத்துக் கொண்டே கணக்குகளைச் செய்கையிற் கால கதியில் அவை மனதிற் பதிந்து விடும்."

கூட்டத்திலே இருந்த வயதான 'பழைய' ஆசிரியர்கட்குப் பேராசிரியர் சொன்னது சம்மதமில்லாமலிருப்பதாகவே தோன்றியது. ஆயினும், எதிர்த்து ஒரு வார்த்தையுமே சொல்ல வில்லை.

'அவரை அழைத்த குற்றத்திற்கு அவரும் தன் கடமைக்கு எதையாவது சொல்லிவிட்டு போகட்டும். போனதும் ஈரிரண்டு நாலு என்று தொடங்குவதுதானே?' என்று எண்ணினார்களோ, என்னவோ பேராசிரியரின் 'தொண தொணப்பு' எப்போது முடியும் என எதிர்பார்த்தவர்களாய், மேடையின் பின்புறச் சுவரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்கிய கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இளைஞர்கட்கோ எதுவும் சம்மதம் என்றே தோன்றிற்று போலும்! மொத்தத்தில் இந்தப் பேச்சு என்ற யமவாதனை விரைவாக முடிவடையட்டும் என்று எண்ணியவர்களாகச் சபையினர் அமர்ந்திருந்தனர்.

ஆனால், மேடையில் இருந்த நல்லதம்பிப் பண்டிதருக்கு இருப்புக் கொள்ளவில்லை. இந்தச் சபையிலே எல்லாருமே வாய் மூடி மௌனியாக இருக்கிறார்களே என்று அவருக்கு ஆத்திரமாக இருந்தது.

*இன்றைய ஆசிரியர் சமுதாயம் எத்தனை தூரத்திற்கு எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கிறது? எதற்கும் எல்லாவற்றிற்குமே தலையாட்டி மாடுபோல இருக்கிறார்களே! அதுவும் எல்லாப் பாடசாலைகளையும் அரசாங்கம் சுவீகரித்துக் கொண்ட பின், ஆசிரியர்கள் எவருக்குமே சுதந்திரம் இல்லை. இதைப் போன்று விவாதத்திற்கிடமான கருத்தை அந்த நாளையிற் சொல்லியிருந்தால் மிஷன் வாத்திமாராயிருந்த நாங்கள் ஆளைத் தொலைத்திருக்கமாட்டோமா? ஆயினும், இவர்கள் எல்லாராலும் எப்படி வாய் பேசா மௌனியாக இருக்க முடிகிறது?*

இப்படி எண்ணிக்கொண்ட பண்டிதரின் மன ஓட்டத்திலே, அந்த நாளையச் சம்பவம் ஒன்று பளிச்சிட்டது.

*அன்றும் இப்படித்தான் ஒரு விடுமுறைக் கழகம் நடந்து கொண்டிருந்தது. காலையில் ஒரு சொற்பொழிவு முடிந்ததும், அடுத்த பத்து நிமிடங்கட்கு ஓய்வு நேரம். ஆனால், விடுமுறைக் கழகத்தை நடாத்திய வட்டார வித்தியாதரிசி நிகழ்ச்சி நிரலில் அந்தப் பத்து நிமிடத்தை 'இளைப்பாற்றி' என்று அச்சிட்டிருந்தார். அந்த 'இளைப்பாற்றி' என்ற சொல் எச்சமா, முற்றா என்று விவாதத்தை கிளப்பி வட்டார வித்தியாதரிசியின் தமிழ் ஞானத்தைத் தலைகுனிய வைக்க, அவர் தமது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உத்தியோக அதிகாரத்தைப் பிரயோகிக்க முனைந்த போது, நான் குறுக்கிட்டு மேலே விடுமுறைக் கழகத்தையே நடத்த முடியாத படி குழப்பி, வட்டார வித்தியாதரிசி அடுத்த மாதமே மாற்றம் எடுத்துக் கொண்டு போய்விட்டார்! எல்லாம், அந்தக் காலத்தில் இந்த நல்ல தம்பியின் வல்லமை... ஆனால், இன்று?***

***பண்டிதராற் பொறுக்கவே முடியவில்லை!***

"நீர் சொல்வதெல்லாம் சுத்த அபத்தம்" என்றார் கணிதப் பேராசிரியரைப் பார்த்து.

அவர் அப்படிச் சொன்னது முன் வரிசையில் இருந்தவர்களுக்குத் தெளிவாகக் கேட்டது.

கூட்டத்திற் சிறிது சலசலப்பு. ஆயினும், சற்று நேரத்தில் அடங்கிவிட்டது!

கணிதப் பேராசிரியரும் தன் பேச்சை முடித்துக் கொண்டு அமர்ந்தார்.

பண்டிதர் நல்லதம்பி அவர்கள் பேச எழுந்தார். தான் பேச எடுத்துக் கொண்ட 'கீழ் வகுப்புகளிற் தமிழ்ப் பாஷை கற்பித்தல்' என்ற பொருளை அவர் ஆயத்தம் செய்து வந்திருப்பினும், கணிதப் பேராசிரியர் தெரிவித்திருந்த கருத்துக்கள் அவர் சிந்தனையைக் குழப்பி அவரின் இயல்பான போர் முனைப்பைத் தூண்டிவிட்டிருந்தன. அந்த முனைப்போடு ஒலிபெருக்கியின் முன்னால் வந்து நின்றவர், விஷயத்தை மறந்து, கணிதப் பேராசிரியருக்கு ஒரு 'சூடு' கொடுக்கவேண்டும் என்ற ஒரே ஆத்திரத்தோடு, கழுத்தைச் சுற்றிச் சங்கராபரண சர்ப்பமாய்ப் புரளும் தன் விசிறி மடிப்புச் சால்வையைச் சற்று இறக்கித் தம் நிமிர்த்திய தடமார்பிற் புரள விட்டு, தமது தடித்த மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்தி ஒரு கனைப்புக் கனைத்துச் சபை வணக்கம் தெரிவித்துத் தன் பேச்சைத் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது கெழுதகை நண்பர் உயர் திரு. சண்முகலிங்கம் பேராசிரியர் அவர்கள், இவண் சிறார்க்கு எண்கணிதம் பயிற்றும் முறை பற்றிமுறைகேடாகச் சில செப்பினார். யாமும் ஓர் தமிழாசிரியன் ஆனமையின், நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று நக்கீர நெஞ்சோடு, அவர் கூற்றிலுள்ள பொருந்தாமையை இவண் விளக்கக் கடமைப் பட்டுள்ளோம். அஃதென்னை யெனில், எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பது ஆன்றோர் வாக்கு. இரண்டுள்ளும் எண்ணை முதலில் நுவலிய தென்னை யெனின், அதன் முதன்மை கருதி யென்பது வெள்ளிடைமலை. ஆயின், நமது எழுவான்கரையில் அறிவுச் சூரியன் உதயமாவதைக் கண்டு காழ்ப்புறும் பேராசிரியர் போன்றோர் எண்ணைக் கற்பிக்கும் முறைபற்றிப் பிழையான எண்ணங்களைக் கொடுத்து நம்முடையதும், நம் எதிர்காலச் சந்ததியினரதும் எண் என்ற கண்ணைக் கெடுக்கும் நாச வேலையிற் தற்போது ஈடுபட்டிருக்கிறார்கள்! பேராசிரியர் போன்றோருக்கு நமது அருட்டிரு விபுலானந்த அடிகளார் கணிதப் பட்டதாரியாகவும் அதே நேரத்தில் இலக்கிய விற்பன்னராகவும் இருந்தமைகூடப் பெரிய ஆற்றாமையாக இருக்கிறது; அடிகளாரைப் போன்ற பலர் நம்மிடையே தோன்றுவதைத் தடைசெய்யும் முகத்தான்..."

பேச்சுத் தொடர்ந்தது.

கூட்டத்திற் கசமுசப்பு ஏற்பட்டது. 'இந்தக் கூட்டங் குழப்பிப் பண்டிதருக்கு இன்னமும், குதிரைப் புத்தி போகவில்லையே, என்றார் ஒருவர். இளைஞர்கள் சிரிக்கிறார்கள்!

மேடையிலே பண்டிதர் செந்தமிழிற் பொழிந்து பொழிந்து தள்ளிக்கொண்டேயிருக்கிறார்.

'அரபிக் குதிரையாக இருப்பினும் பிறவிச் சந்தம் போகாதே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அலுத்துக் கொண்ட வழுக்கைத்தலை ஆசிரியர் ஒருவர், ஒரு வாய் வெற்றிலையாவது போடலாம் என்றெண்ணிக் கொண்டே வெளியேறுகிறார்.

*'சதுரங்கத்திலே குதிரை மட்டும் விசித்திரமான காய். ஏனைய காய்களைப் போன்றல்லாது, அது பாய்ந்து வெட்டும். அத்துடன் மூன்று கட்டங்கள் பாய்வதானாலும், எத்திசையிலும் நேராக முன்னேறாமல், ஒரு கட்டமோ, இரண்டு கட்டமோ பாய்ந்து செங்கோணத்தில் திரும்பும். அந்தப் புத்திதான் இந்தப் பண்டிதரும். கீழ்வகுப்புகளிற் தமிழ்ப்பாஷைக்கு கற்பித்தல் என்ற பொருளை விட்டு, என்னைத் தாக்க எழுந்த குதிரை, செங்கோணத்திற் திரும்பி எனது நாட்டவர் எல்லோரையும் தாக்குகிறதே...'*

*எனப் பேராசிரியர் சண்முகலிங்கம் நினைத்திருக்கக் கூடும்.*

மேடையிலே பண்டிதர் முழங்கிக் கொண்டேயிருக்கிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ரியா

## சேள்



‘**வா**ங்க, வாங்க...’ – வழக்கம் போல என் பற்கள் பற்பசை விளம்பரம் செய்கின்றன.

‘முதலாளியைப் பார்க்கலாமா?’

‘கொழும்பு சென்றுள்ளார். திரும்ப ரண்டு மூணு நாளாகும்.’

‘சாய்... அப்படியா?’

‘ஏன்? என்ன விசேஷம்?’

‘இல்லை... நமது தமிழறிஞர் தம்பையா உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிலிருந்து மீண்டுள்ளார். நம்ம மட்டக்களப்பிலே தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது தமிழன் தோ்ன்றியிருக்க வேண்டுமென்று உலகறியச் செய்த அவரைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக நாளைக்கு இங்கு ஒரு டின்னர் ஏற்பாடு செய்யலாமென்று யோசனை...'

'இதற்கு ஏன் யோசனை? தாராளமாகச் செய்யலாம் இன்றைக்குக் கூட மேலே ஒரு பார்டி தான் நடைபெறுகிறது...'

'எதற்குப் பார்டியோ?'

'அதிலுமுள்ள பொருத்தத்தைப் பாருங்கோ... முதல் தோன்றிய குரங்கு தமிழ்க் குரங்கு என்று சொல்லாவிட்டால் தமிழனுக்குத் திருப்தியில்லை என்றானாம் புதுமைப்பித்தன். அவன் வழிவந்த எழுத்தாளனுக்கு இன்று டின்னர். அந்தத் தமிழ்க் குரங்கே நம்ம ஆலையடிச்சோலைச் சுடலையிலேதான் பிறந்தது என்று கூறியவரைப் பாராட்டும் முகமாக நாளைக்கு டின்னர்!'

அவர் முகம் சுருங்கியது. என் பேச்சு அவருக்குச் சுவைக்க வில்லை.

'நான் ஒன்றுந் தப்பாகச் சொல்லவில்லை. இன்று எழுத்தாளர் கூட்டம்; நாளைக்குத் தமிழறிஞர் கூட்டம். தமிழை யார் வளர்த்தால் என்ன? அது 'கிசு கிசு' என வளர்வது நல்லதுதான்?' சமாதானஞ் செய்யும் தொனியிற் கூறினேன். என் யுக்தி எடுபட வில்லை; அவர் முனிவு வேறு தடத்திற் சரிந்தது!

'இந்தப் பயலுகள் எழுதுகிற சிறுகதைகளை நல்ல தமிழ் படித்த எவனாவது இலக்கியம் என்று ஒப்புக் கொள்ளுகிறானா?'

'நீங்களாச்சு அவர்களாச்சு! சொற்கள் இருக்கு, கற்கள் இருக்கு. போதாவிட்டால், கூழ் முட்டைகளும் இருக்கு. அது வேறு விவகாரம்!... சரி, எத்தனை பேருக்கு டின்னர்?'

'முதலாளி எனக்குப் பழக்கமானவர். அவர் எனக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேட்டைக் கொஞ்சம் குறைத்துப் போடுவார். அதுதான்...'

'ஆளைப் பார்த்து றேட் சொல்லும் பழக்கம் இந்த ஹோட்டலில் கிடையவே கிடையாது. முதலாளி போட்டுத் தந்துள்ள றேட்டைத்தான் நாங்கள் சொல்லுகிறோம். அதிலும் பாருங்கோ, எல்லோரும் நமக்கு வேண்டியவர்களும், வாடிக்கைக் காரர்களுமே... நாங்கள் எப்படி றேட்டைக் கூட்டியும் குறைத்தும் சொல்ல முடியும்?'

'தலைக்கு என்ன வரும்?'

'ஆளுக்கு மூன்று ரூபா வரும். புரியாணி; ஒரு டிஸ் கோழி குறுமா எக்ஸ்ரா; புறுட் சலட், ஒரு கப் காப்பி... வேண்டுமானால், காப்பிக்குப் பதிலாக ஓவல் சப்ளை செய்கிறோம்...'

'மூன்று சற்று அதிகம் என்றுதான்...'

'அதிகமோ? புறியாணிக்கும் கறிக்கும் மட்டும் ரண்டு எழுபத்தைந்து சார்ஜ் பண்ணுகிறோம். சிகரெட்டும் பீடாவும் ஷோட்டல் கணக்கில் கொடுப்பது எங்கள் வழக்கம். இதைப் பார்க்கிலும் வேறு ஏதாவது ஷோட்டலில் சீப்பாக புக் பண்ண முடியுமானால், டின்னரை ஷோட்டல் கணக்கில் இலவசமாக சப்ளை பண்ணத் தயார்...'

'விருந்தை இங்குதான் நடத்துவதெனத் தீர்மானித்து விட்டோம்... பார்த்துச் செய்யுங்கோ. முப்பது பேருக்கு ஒழுங்கு செய்ய வேணும். மறந்து போனன். மூன்று சைவம்...'

'முட்டைச் சைவமோ?'

'இரண்டு முட்டைச் சைவம்; ஒன்று அசல் சைவம்...'

'சைவத்திற்கு ரண்டைம்பதுதான் வரும். அந்தக் கழிவு போட்டுத்தரலாம்.'

'ஒழுங்கு செய்யிற பொறுப்பை எனக்குத் தந்திருக்கிறார்கள். எல்லாம் சீராக நடைபெற வேண்டும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எதற்கும் நாங்கள் இருக்கிறோம். குவாலிற்றிக்கு உத்தர வாதம். எங்களுக்குத் தெரியாதா யாருக்கு குவாலிற்றி பார்க்க வேண்டுமென்பது?... ஏழரை மணி தொடக்கம் ஒன்பதரை மணி வரை மேலேயுள்ள பெரிய ஹோலை உங்களுக்கு புக் பண்ணுகிறேன். சரிதானே?' -- நான் ஓடர் புத்தகத்தைத் தேடுகிறேன்.

'முற்பணம் ஏதேனும் தேவைப்படுமோ?'

'இப்பொழுது அட்வான்ஸ் இல்லாவிட்டாலும் பாதகமில்லை. நாளைக்குப் பத்து மணிக்கு முன்னர் முழுப் பணத்தையும் செலுத்தி ஓடரை உறுதி செய்து கொண்டால் போதும்.'

தென்னிந்திய எழுத்தாளர், 'யாருக்காகச் சிரித்தான்?' நாவல்புகழ் சக்ரதாரிக்கு டின்னர் நடைபெறுகின்றது. நாளைக்கு நடக்கப்போகும் டின்னருக்கான ஓடரை விரிவாக எழுதிக் கொள்ளுகின்றேன்.

வந்தவர் விடை பெற்றுச் செல்லுகின்றார்.

வெறுமையென்று தோன்றும், வெறுமையே யல்லாத ஏதோ ஒன்றின் மடிப்பு விரிகின்றது. அந்த விரிவு வித்திய ஜீவ அணு சென்ற காலமென்னும் யோனியிலே செம்மையாகச் சென்றடைய...

என்னிலிருந்து நானேயான, ஆனால், இன்று நானேயல்லாத, அவனுடைய கதையை வனையும் பணியின் நிறைவு. அப் படைப்பிலே உருவம் விளையும் அவன் கதை.

***அந்த அவனின் கதை.***

***கணக்கப்பிள்ளையாக அமர்ந்து, எண்களை வைத்துக் கூட்டியும் கழித்தும், அதிலும் கடனெடுத்துக் கழித்தும் பெருக்கியும் வகுத்தும்... பக்கம் பக்கமாகத் தண்டவாள நீளத்தில் ஓடும் பற்று -- வரவு ரேகைகளுக்கிடையில்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அகப்பட்ட தானங்களைச் சமன்படுத்தியும்... பேனாவிலிருந்து ஊரும் மசி தானங்களுக்கிடையேயுள்ள உறவு முறைகளை இணைத்துப் பார்ப்பதற்கு அப்பாலும், மனிதருடைய ஆரோகண - அவரோகண கதிகளை, மாம்ஸத்திலும் மனத்திலும் பற்றிச் சடைக்கும் எழுச்சிகளை, இவை தொற்றிய வினைகளிலேற்படும் இச்சா பலிதங்களையும், ஆலாபங்கங்களையும் கலைத்துவக் கோலஞ்சேர் எழுத்துக்களிலே வடித்துத் தரல் வேண்டுமென்ற குதுகுதுப்பு நெஞ்சைக் கசக்க, அந்தக் கசக்கலுக்கு ஒத்தடமிடும் வகையில் இரவின் மையத்தைப் பிளந்து, உறங்கா நோன்பியற்றி, எவை பற்றியோ வெல்லாம் ஏதேதோ எழுதி - அவை சிறுகதை இலக்கியத்திற்கு அதன் சனாதனர் கற்பித்து ஓம்பும் யாப்பு முறைகளுக்குள் அடக்கிவிடலாம் என்ற பிரக்ஞை கூட இல்லாமல் எழுதி - எழுதியவற்றை ஆவணக் கோவையிலே ஊறுகாய் போட்டு வைத்து, தன் நெஞ்சப் பாரங்களை இறக்கி விட்டதான உணர்வே சன்மானமாகவும் திருப்தியாகவும் அமைந்த காலத்தில் எழுதியவை... பத்திரிகைகளின் பக்கங்களைக் கரியாக்கி, ஏதோ ஆயிரக் கணக்கான வாசகர்களைத் திருப்தி செய்வதாக வெளி வந்து கொண்டிருக்கும் கதைகளிலும் பார்க்க, தான் எழுதி ஊறுகாயிட்டிருக்கும் கதைகள் தரத்திலுயர்ந்தவை என்று முளைகாட்டிய எண்ணம் ஒன்று முற்ற முற்ற, அதுவே தைரியமாகக் கனியக் கனிய, பத்திரிகைகளின் பிரசுரத்திற்காக எழுதியவையும், அதன் மூலம் எழுத்தாளனென நிலைநாட்டிக் கொண்ட பெருமையும்!*

மன ஓட்டம், புற நிகழ்ச்சிக் காற்றிலே வேர் பாய்ச்சிச் சாய்கின்றது.

'என்ன...?'

'நான்தான் கவிஞர் கபிலதாசன். கல்முனையிலிருந்து வருகின்றேன். பஸ் லேட். விருந்து...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மேலே போங்கள். இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது...'

மாடியிலே ஏறிக் கொண்டிருப்பவரை எனக்குத் தெரியும். 'தேவி'யையும் பாரதியையும் நகல் எடுத்து மூன்று நான்கு கவிதைகளை 'இளைஞர் பகுதி'களிற் பிரசுரித்திருக்கிறார். இந்தப் பவிசில் கவிஞரெனத் தன்னைத்தானே அறிமுகம்!

எழுத்தாளர்களைப் பற்றிய நினைவுகளினால், என்னுள்ளேயே மறைந்து வாழும் அவன் விழித்துக் கொள்ளுகின்றான். அந்த விழிப்பில் அவன் நடாத்தும் விசாரணைகள் என்னுடையன வாகவும் ஆகிவிடுகின்றன.

நானை நானாக்கும் முயற்சியில் வெற்றியின் முகந் தெரிய...

இன்றைய வரவு செலவுக் கணக்குகளை எழுதிவிட்டால், இன்றைய கடமையிற் பெரும் பகுதி முற்றும். கணக்குப் புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டித் தானங்களை மேய்ந்து, என் பேனா உழ ஆரம்பிக்கின்றது.

இன்றைய ரொக்க வியாபாரம் ஐந்நூறை நெருங்கியுள்ளது... மாதக் கணக்குக்காரனின் கடன் வகையில் நூற்றைந்து ரூபா இருபத்... வாடகை அறைகளின் மூலம்...

சிந்தனையின் குறுக்கு ஓட்டம். சதுரங்க விளையாட்டில் தேர் குறுக்குக் கட்டங்களிலேதான் ஓடும்.

என் கற்பனைத் தேர் குறுக்குக் கட்டங்களிலே ஓட, என்னுள் மறைந்து வாழும் அவன் சாரத்தியஞ் செலுத்துகின்றான்.

***துறவறத்தின் பற்று இல்லறத்தின் பற்றினை இற்றுவிடச் செய்கின்றது. அன்றேல், இல்லறத்தின் மீதுள்ள பற்றின்மை துறவறப் பற்றினைப் பிரசவிக்கின்றது. ஒன்றின் பற்று இன்னொன்றின் பற்றின்மைக்கும், ஒனறின் பற்றின்மை இன்னொன்றின் பற்றிற்கும் விளைகளங்களாக அமைகி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்றன. மனம் கறுப்புக் கட்டங்களில் ஓடும் கற்பனைத் தேரிலும், வெள்ளைக் கட்டங்களில் ஓடும் சிந்தனைத் தேரிலும் ஓட ஓட என்றும் சொல்ல முடியாது. ஓட்டமின்மையையும் சேர்த்ததுதான் அதன் ஓட்டம்! ஏனையவற்றின் குறுக்கீட்டினைப் பொறுத்த ஓட்டங்கள். இத்தேர்களின் ஓட்டங்கள்ளைப் பொறுத்து மற்றவை இயங்குவதைப் போலவே... இதுவும் அதுவும், அதுவும் இதுவும் எனச் சொல்லி, எதுவும் எதுவும் என்பதை அவரவர் மனோ தர்மத்திற்கும் – ஏன், மனோவிகாரங் களுக்குக் கூட – விட்டுவிடும் விவகாரந்தான். அதுவின் பற்று என ஏதோ குறுக்கிட, எது எதுவென்றபிரக்ஞை கூட இன்றி, ஏதோ ஒன்றை ஏதோ ஒன்றாக விளங்கிக் கொண்டதாக ஏமாற்ற, ஏதோ ஒன்றிலே – அது மட்டும் எதுவென்று நிச்சயமாகத் தெரிகிறது; அது வாழ்க்கை – அபஸ்வரம் ஒலிக்கின்றது.

'கணக்கை ஒழுங்காக எழுதத் தெரியாதவன் பத்திரிகை களுக்கு எழுதிக் கிழிக்கிறானாம்' என்ற முதலாளியின் நச்சரிப்பு, ஒவ்வொரு தடவையும் முற்றிய, மேலும் முற்றிய தொனியில் ஒலிக்க, அந்த ஒலி, பழுக்கக் காய்ச்சிய நாராசமாக செவிப் பறைகளைப் பொசுக்க, மனத்திலே வலி தாங்கமுடியாத, ஆனாலும், ஊமைக் காயங்களின் உபரி. காயங்களின் உபவாதையும் அதனைக் குணப்படுத்தும் நாடலும். அந்த நாடலே பயணம். அது நீளுகிறது... பயணத்தின் திசையை நோக்கி மட்டுமல்லாது, மனத் தெம்புக்கும் உடற் பலத்திற்கு ஏற்பவும் நீள்கின்றது... இல்லை, மனச் சலனத்திற்கு உடற் பலவீனத்திற்கு ஏற்பவும் நீளும் சாலம்! மனிதன் எப்படித்தான் கற்பித்துக் கொண்டாலும், எல்லோருடைய பயணமும் ஒரே சங்கமத் தரையை – அந்தத் தரையிலும், மதங்கள் கற்பிக்கும் ஆசாரங்களும், அந்த ஆசாரங்களும் மதத்துக்கு மதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி, இடத்திற்கு இடமும் மாறுபட்டுப்- புகுந்த ஆசாரங்களுடன் கலக்க – அடைகின்றன என்பதை மறந்து, தங்கு மிடங்களே பயணத்தின் சேரிடங்கள் என்ற மருள் மடிப்பு விரிக்க...

புதிய தங்குமிடமும், புதிய உத்தியோகமும்!

தானங்களின் உறவுகளை உழுவதிலும் பார்க்க, 'தினசரி' ஒன்றின் உதவி ஆசிரியர் வேலை தன் போக்கிற்கு இசைவானது என வரித்த எண்ணத்தில், எங்கேயோ ஒரு கோடியிற் கரிப்புச் சுவை கலக்கின்றது. அடிவானத்தின் ரம்மியத்தில் சிந்தை இழந்த கலைஞன், அதன் அருகிற் சென்று அதன் கொள்ளை அழகை அள்ளிப் பருகும் வேட்கையுடன் நடக்கின்றான்...

காங்கையிலும் அசதியிலும் வறுத்தெடுக்கப்பட்ட பாலை வனப் பயணி கானல்நீரைப் பார்த்து, தாகந் தீர்க்க வழி சமைந்தது என்ற நம்பிக்கையுடன் அதனை நோக்கி நடக்கின்றான்...

கலைஞனும், பயணியும் ஒருவனேயான அவனுக்கு ஏமாற்றம்! சொற்களின் துல்லிய பொருளையும், உயிர்ப்பையுந் தெளிந்து கையாளுதலே எழுத்துக் கலை: யென நம்பி, அந்நன்னம்பிக்கை விதைகளை வித்தி, அதன் முதிர் அறுவடையைத் துய்க்கத் துடித்த அவனுக்குக் கிடைத்த ஏமாற்றம்!

நாவிதர்களை அபிநயித்து, கத்திரியின் உதவிநாடி, வெட்டு ஒட்டு வேலைகள் செய்தும், கும்பம் கும்பமாக வந்து குவியும் ஆங்கில 'மேட்ட'ரை மொழி பெயர்ப்பு என்ற பிரமையிற் சிதைத்தும், கவர்ச்சிப் பெண்களின் ஆடைகுறைப்புப் படங்களைத் தருவித்தும் பக்கங்களை 'ரொப்பு'வது ஆகியனவே 'ஜேர்னலிஸம்' என்று துர்த்தை வாசகனைக் 'கூட்டிக் கொடுப்'பதில் அனுபவசாலிகளான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திராதிபர்கள் தீர்மானிக்கும் பொழுது அவனுள் வாழ்ந்த கலைஞன் அவனைப் பார்த்து நகைத்தான்! அகத்தின் அகமொன்று அதனகத்தையே நோக்கி உகுத்த நகைப்பு! 'கலையாவது கத்தரிக்காயாவது? நீ எழுதும் இவற்றை யாரய்யா வாசிக்கப் போறாங்க? ஆயிரக்கணக்கான வாசகர்களுக்காகத்தான் நாங்கள் பத்திரிகை நடத்துகிறோம். அவங்களுக்குப் பக்கத்திலே அகராதியை வைத்துக் கொண்டு வாசிக்க பொறுமை ஏது? நாட்டைக் கலக்கிய படுகொலைகளைப் பற்றி எழுதத் தெரியுமா? கற்பழிப்பு – திடீர் கொலைகள் ஆகிய நிரம்பி வழியும் மர்ம நாவல் எழுதத் தெரியுமா? – At least – சினிமா நட்சத்திரங்களின் புராணம் பாடத் தெரியுமா? எழுதித் தாய்யா நான் அவற்றால் பத்திரிகையை 'ரொப்பி' விற்பனையை அதிகரிக்கச் செய்து காட்டுகிறேன்' – பத்திராதிபரின் இக்கூற்று, அவன் சிரசிலே முள்முடியாகக் குந்தி உறுத்துகிறது...

'ஆயிரமாயிரம் வாசகர்கள் விரும்புவதை எழுதுவதுதான் எழுத்தாற்றலாம்! அவர்களுடைய ரஸனையை அதுவற்றது என்று சொல்லக் கூடாதாம். அந்த அது, சினிமா நட்சத்திரம் ஒன்றின் நாயினுடைய வரலாற்றை அறிவதுதானென்றால், அந்த அதைப் பூர்த்தி செய்வது தான் எழுத்தாளனின் புனித பணியாம். இந்த அதுவான ரஸனைத் தளத்தை உருவாக்கியது யார்? ரிஷி மூலம் பற்றிய விசாரணை தப்பு, எவ்வளவு பெரிய தப்பு! ஈற்றிலே சிந்தித்தால் நாம் எத்தனையோ விடயங்களில் முட்டைகள். ஆம்; முட்டைக்குள்ளிருக்கும் கோழி முதலில் வந்ததா? அல்லது, கோழிக்குள்ளிருக்கும் முட்டை முதலில் வந்ததா? முட்டைகளைப் பற்றி அறியாத முட்டைகள்! எழுத்தாளனால் உருவாக்கப்படும் வாசகர் கூட்டமா? அன்றேல் வாசகரினால் உருவாக்கப்படும் எழுத்தாளர் கூட்டமா? இரண்டில் எது சரி யென்ற மயலிற் குதிருஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர். தன் நெஞ்சையே குருநிலமாக்கி, இலட்சியம் என்ற பாண்டவ சேனையையும், சிவனோபாயம் என்ற கௌரவ சேனையையும், பொருதவிட்டான். தூலமாகவும், அதே சமயம் சூக்குமமாகவுந் தோன்றும் கலா வெறியின் பலம் பாண்டவ சேனையுடன் சேர்ந்து கொள்ளவே, இலட்சியம் ஜெயித்தது!

தன்னை – தன் ஆற்றலை – பூரணமாகத் தரிசிக்கக் கூடிய ஒரேயொரு வாசகனுக்காக எழுதும் ஆவேசம் பத்திரிகை ஊழியத்தை விட்டு, புதிய தரிப்பிடம் நாடிப் பயணம். நிறை வின் தோற்றம் வனைந்த தரிப்பிடம்.

அவனுடைய போக்கிலே விந்தையும், எழுத்திலே வித்தையும், இலட்சியப் பார்வையிலே வீரமும் இருப்பதாக ஒருத்தி கற்பித்துக் கொண்டாள். ஆயிரத்துடன் இன்னு மொன்றாகத் தோன்றிய அவள், ஆயிரத்தில் ஒருத்தியாக மாறி, ஈற்றில் தனி ஒருத்தியேயாக நிலைத்தனள். அவள் நெஞ்சத்திலே ஏதோ உணர்ச்சிகளெல்லாம் குமைந்தன. குமைந்தன மடிந்தன; மடிந்தன குமைந்தன! அந்த உணர்ச்சிகளை இனங் கண்டுபிடிக்க அவள் எடுத்த எத்தனத்தில், அந்த உணர்ச்சிகள் இலக்கியத்திற்கும் இலட்சியத்திற்கும் அப்பாற்பட்ட, உள்ளத்தின் பருவக் கிளர்ச்சிகள் என்ற ஹோமாக்கினி எனத் தெளிந்து, அந்த ஹோமாக்கினியைத் தணிக்கும் வேட்கை முற்ற முற்ற, தெளிவே மாயையாக, சதையின் தசைத் தேவைகளின் ரம்மிய மனத் தோற்றங்களே இவையென்ற உண்மை உறைக்க முக்கோண ஓமகுண்டத்திலே காமத்தீயை வளர்க்கும் ஆகுதி நியப்படி சேர, லிங்க பூஜையின் சித்திப்பு எனக் குதிரும் இல்லற வாழ்க்கையும், அதன் சுவைப்பும்! ஒவ்வொன்றிற்கும் அதனதன் சுவை. இதற்கு இதன் சுவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடியில் நடைபெற்ற விருந்து முடிந்தது. சக்ரதாரி இறங்கி வருகின்றார். நம் உள்ளூர் எழுத்தாளர் பலர் குடிமக்களுக்குரிய அவையடக்கத்துடன் ஆலவட்டம் தாங்குகிறார்கள்.

'என்னுடைய 'கொய்யாக் கனிகள்' என்ற கதைத் தொகுதியை வாசித்திருக்கிறீர்களா?

'என் கைக்குக்கிட்டவில்லை. ஈழத்து எழுத்தாளருடைய ஐந்தாறு தொகுதிகளைத்தான் வாசித்திருக்கிறேன். அலட்சியம் என்பதல்ல. வாசிக்க ஆவலாக இருக்கிறது. சேயக எழுத்தாளருடைய ஆற்றலை அறிந்து கொள்ளும் ஆற்றலும் இருக்கின்றது. இந்நாட்டுப் பிரசுரங்கள் அங்கு கிடைப்பது அரிது. 'அரசு வெளியீடுகள்' மட்டும் நண்பர்கள் மூலம் கிரமமாகக் கிடைக்கின்றன. 'சித்தன்' என்ற எழுத்தாளர் ஒருவர். கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் விசாரித்ததில், இந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்றார்கள். அவரை இன்றைய கலந்துரையாடலிலும், விருந்திலும் சந்திக்க முடியவில்லை...'

'சித்தனா? கேள்விப்பட்ட பெயராக இல்லையே...' ஒருவர் முந்திரிக்கொட்டையாக முந்துகிறார்.

'இல்லை. சித்தன் இந்தப் பகுதியைச் சேத்ந்தவர்தானாம். பெயர் கூட... சட்டென்று நினைவுக்கு வரவில்லை. நல்ல முஸ்லிம் பெயரொன்று... இப்பொழுது எங்கே இருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாது...'

'சித்தனின் 'தேர்' என்னுஞ் சிறுகதைத் தொகுதியை என் தில்லி நண்பர் ஒருவர் தந்தார். நல்ல கதைத் தொகுதி. முகப்புக் கதையாக 'தேர்' நினைவில் நின்று நீங்காத கதை...'

'நீங்கள் தேடும் சித்தன் நான்தான். கண்டி ஹோட்டல் ஒன்றில் கணக்கப்பிள்ளை வேலை பார்த்த நான், சென்ற மாதந் தொடக்கந்தான் இந்த ஹோட்டலுக்கு மாறுதலாகி வந்தேன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கத்தவேண்டுமென்ற உணர்ச்சி என்னுள் மின்னல் சொடுக்கியது. அந்த மின் ஒளியில் மீண்டும் அவனையே தரிசிக்கின்றேன். தரிசனத்தின் தரிப்புச் சுவட்டில் அலையும் மனம்.

*ரிஷியின் சக்தியால் கங்கையின் நடுவே தீவு தோன்ற, அதே மகிமையால் மச்சகந்தச் சிறுமி, பரிமள கந்தத்துடன் பூப்பெய்த, இத்தனை அற்புதங்களை நிகழ்த்திய ரிஷியின் இந்திரிய வீச்சினை அவளுடைய யோனியின் புத்தம் புதுப் பூரிப்புத் தாங்கிக் கொள்ள, க்ஷணத்தில் சூல் நிறை முதிர்வு எய்தி, வேத வியாசரைப் பிரசவித்த சுப வேளையென்று புராணிகர்கள் கூறுவார்களே. அவர்கள் ஆபாசம் செய்யாதவர்கள்; மச்சம் பேசாதவர்கள். அஃது என்ன வேளையோ? அத்தகைய ஒரு வேளையிலே, அத்தனை சாமுத்திரிகா லட்சணங்களும் பொருந்தப் பிரசவித்த கதை தான் 'தேர்!'*

*அப்புதிய படைப்பை முழுமையாக மீள் பார்வையிடுகையில், இத்தனை காலமும் எழுதியவை யெல்லாம், இந்த ஒரேயொரு கதையைக் கலைத்துவ முழுமையுடன் படைப்பதற்குப் பெற்ற பயிற்சியே என்ற நம்பிக்கையின் நிறைவே நீக்கமற நிரவியது. அந்த நம்பிக்கையிலேயும் ஒரு கீறல். கீறல் என்றாலும், நம்பிக்கையைக் கெட்டியாக்க உதவியதும் அந்தக் கீறலேதான். 'நமது வாசகர் ரஸிக்க மாட்டார்கள்,' 'கதை மிக நீளமாக இருக்கிறது' என்ற நொண்டிப் புரவிகளேறிய பத்திராதிபர்கள் அதனைப் பிரசுரிக்கத் தயங்கினார்கள். தன்னுடைய அற்புத சிருஷ்டி எனத் தானே கணித்த தன் கதையை அச்சிலே பாதுகாத்தல் வேண்டுமென்று அவன் உள்ளத்திலே புளியம் வைரம் பாய்ச்சிய எண்ணம் ஒன்றைக் காரிய சாதனையாக்க வேண்டுமென்று அவன் எடுத்த*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முயற்சிகளின் விளைப் பலிதந்தான் 'தேர்' என்னுஞ் சிறு கதைத் தொகுதி.*

எழுத்தாளர் மொய் ஹோட்டல் வாயிலில் நிற்கின்றது.

ஒன்றைத் தொற்றிப் பிறிதொன்று, அதிலே தொற்றி இதிலே, இதிலே தொற்றி அதிலே என்ற தொடரில், வினாவும் – விடையு மாக சம்பாஷணை உருட்டப்படுகிறது.

சதுரங்கப் பலகையில் பல்வேறு காய்களை நகர்த்துவது போல, சக்ரதாரி அபிப்பிராயங்களை மிக நிதானமாக வெளியிடுகிறார்.

சதுரங்கம் பற்றிய உவமைக்குள் நான் அவனை நுழைக்கின்றேன்.

*தனக்கேயான ஒரு தனித்துவ 'தனித்துவங் கூட மற்றவர்களின் தொடர்பிலேதான் தனித்துவமாகின்றது' நடையையும், இலக்கியப் பார்வையையும், கலைத்துவ முழுமையுடன் வனைந்தெடுத்தல் வேண்டுமென்ற இலட்சிய சமரிலே, ஊதியம் நல்கும் உத்தியோகம் என்ற மந்திரியை இழந்தாலும், சுயத்தின் செழுஞ் சிந்தனையை இழக்காமல், எதிரியின் அடித்தளத்தில் ஒரு கட்டம் மட்டும் நகர்ந்தால் மந்திரியாக உயர்ந்து விடவல்ல காலாளின் முன்னேற்றம் என்ற அணியிலே தன் கவனப் பலம் முழுவதையும் குவித்து வைத்திருக்க, ஊழ் எதிர்த்தானையை வைத்து நுட்பமாக விளையாடுகின்றது. பத்திரிகையின் பிரசுர களம் என்ற நீள் கோட்டிலும், விமர்சன விளம்பரம் என்ற குறுக்கு கோட்டிலும் ஓடும் இலக்கிய அணியை எதிர்ப்படை மந்திரி யாக நியமித்திருக்கின்றது. அதனை நிறுத்தி 'அரசு' கேட்கிறது ஊழ். யோசித்து, நிதானித்துத் தன் தெளிவான இலக்கியப் பார்வை என்ற துரகத்தை எடுத்து அரசுக்கு மறைப்புக் கொடுக்கின்றான். ஊழ் 'கடன் தொல்லை' என்ற கஜத்தைப் பிறிதொரு தடத்தில் இறக்கி,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'அரசு' கேட்கிறது. 'எதிர்காலம் உண்டு' என்ற நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு, தன் தூரகத்திற்குப் பக்கத்திலுள்ள கட்டத்திற்குள் அரசனை நகர்த்தி விடையிருக்கின்றான். மந்திரியாகத் தயாராக இருக்கும் காலாள் மீது அவனுடைய பார்வை மேய்ந்து பெருமூச்சு விடுகின்றது. அப்பொழுது சற்றும் எதிர்பாராத ஒரு நகர்த்தல். 'என் தாலி கூட வட்டிக் கடையிலே... எங்கள் குழந்தைகளின் வருங்காலத்தைப் பற்றியாவது யோசிக்கிறீர் களா? நீங்கள் கடைப்பிடிக்கும் முரட்டு இலக்கியப் போக்கு நமக்குச் சோறு போடமாட்டாது... உங்களை நம்பி, என்னை உங்களுடைய பாதங்களிலே வேள்வியாக அர்ப்பணித்தேன்...' என்று அவனுடைய துணைவி அழுகுரலில், இல்லத் தேரை நகர்த்தி ஊழ் 'அரசு' கேட்கிறது. வேறு வழியில்லை; தோல்வி!*

*ஒரு முழுச் சுழற்சி!*

*இல்லத் தேரைச் செவ்வையாகச் சாரத்தியஞ் செய்ய வேண்டு மென்ற நோன்பு.*

*தானங்களுக்கிடையில் உள்ள உறவுகளை இணைப்பதில், இலக்கியம் இயற்றும் நேரம் பாழடிக்கப்படுகின்றது எனப் பல்லாண்டுகளுக்கு முன்னர் அவன் நிறுவிய பிரமேயத்திலிருந்து, பிறிதோர் உண்மை கிளைவிடுகின்றது. புருஷ இலட்சணமாய் அமைந்த உத்தியோகம் என்ற ராஜபாட்டையிலேதான் இல்லத் தேர் செப்பமாக ஓடுகிறது. மீண்டும் பயணமும்; புதிய தங்குமிடமும்! புதிய இடத்தில், பழைய கணக்கப்பிள்ளை வேலை.*

சக்ரதாரி போய்விட்டார். அவரைச் சூழ நின்ற அடியார் கூட்டமும் கரைந்தது.

செலவினக் கணக்குகளுக்குள் என் புலனை நுழைக் கின்றேன்... பிள்ளையாரடி இறைச்சிக் கடைக்காரனுக்கு முட்டைக்கார ஏறாவூர் உம்மாவுக்கு... இரண்டு கரத்தை விறகு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விருந்து முடிந்து விட்டதா?' - இந்தக் குரல், வெண்கலக் கடையில் வாசஞ் செய்திருக்க வேண்டும்.

தலையை நிமிர்த்தாமல். 'முடிந்து எல்லோரும் போய் விட்டார்கள்' எனப் பதில் கூறுகின்றேன்.

'நம்ம எழுத்தாளர்க் குஞ்சுகளிடம் ஒரு கேள்வி கேட்கலாம் என்று வந்தனான். பயலுகள் ஓடீட்டாங்களா?'

கேள்வி ஒன்று கேட்கச் சிரத்தையுடன் வந்தவரைப் பார்க்கும் அவா என்னுள் துளிர்க்கின்றது. வந்தவர் திரும்பி விட்டார். பின் புறமே தெரிகிறது.

'நீங்கள்?'

என்னிடமிருந்து அந்தக் கேள்வியை எதிர் பார்க்காதவரைப் போல திரும்பினார். செவ்வரி படர்ந்து சிறுத்திருந்த கண்களைச் சிரமத்துடன் பெரிது பண்ணிப் பார்க்கின்றார்.

'நான்? நான் ஒரு வாசகன்!'

வார்த்தைகளில் போதையின் குதலை புரையோடினாலும், பதிலில் இறுக்கம் என்னைக் கவர்ந்தது.

'எழுத்தாளர்களிடம் வாசகனாகிய நீங்கள் கேட்க விரும்பியது என்ன?'

'ஓகோ, நீரும் எழுத்தாளரைப் போல பேசுகிறீர்கள். அப்படி யானால், இதோ! பதில் சொல்லும். சித்தனைப் போல எழுதவல்ல எழுத்தாளன் யாராவது இன்று இருக்கிறானா? இவங்கள் எழுதிக் கிழிக்கிறார்களாம்...'

'அந்தச் சித்தனை உங்களுக்குத் தெரியுமா?'

'எழுத்தாளனுடைய மூஞ்சியை பாத்துத்தான் அவன் எழுத்தை வாசிக்க வேணுமா?... ஆனால், அந்த சித்தன் செத்துப் போனான். மர்மக் கதைகாரரும் சினிமா லோலர்களும், முதுகு சொறி விமர்சன ஏஜென்டுகளும் ஒன்றாகச் சேர்ந்து அவனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்று போட்டாங்கள்!'

ஓரிரவிலேயே அவரைவிதை வான முகட்டைத் தொட்டு வளர்வதை ஏதோ ஒரு கதையில் வாசித்ததாக ஞாபகம். அதிலும் பார்க்க அசுர வேகத்தில் வளர்ந்த உணர்ச்சியொன்று என்னை அவருடன் பிணைக்கின்றது.

உரையாட வேண்டுமென்ற துடிப்பு.

'அமருங்கள். தேநீர் அருந்தலாம்...'

'நன்றி. இந்த நேரத்தில் தேநீர் அருந்தும் வழக்கம் எனக்கில்லை அத்துடன் வேறு அவசர அலுவல்களும் இருக்கின்றன.'

அவர் திரும்பி நடக்கின்றார்.

வினோதமான உணர்ச்சிகளின் சங்கமம்.

அவருடைய உரையாடலை முறித்துக் கொண்டுபோனது ஏமாற்றமாகவும் இருக்கிறது.

அதே சமயம், இத்தனை காலத்திற்குப் பின்னராவது அந்த ஒரேயொரு வாசகனை இனங் கண்டாகிவிட்டது என்ற நிறைவும்.

இந்த ஊர் பேர் தெரியாத ரஸிகனுக்காக வேனும், என்னுள் மறைந்து வாழும் அந்த 'சித்தன்' மீண்டும் எழுதத்தான் வேண்டும் என்ற எண்ணம் புதிய் ஊற்றுக் கண் திறந்து சுரக்கின்றது.

***சதுரங்க ஆட்டத்தில் ஒரு திருப்பம்! காலாள் அமைச்சராகி விட்டால் ஆட்டத்தில் சூடு பிடிக்குமே! அதைப் போல, அதைப் போன்ற ஒரு வகை நிறைவு.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அந்த அது, எதுவின் எது என்ற விசாரணையில் அது அதுவாகவும் இருக்கலாம், இதுவாகவும் இருக்கலாம் என்ற குழப்பம் பலருக்கும் ஏற்படலாம். அந்த அது அவனுக்குப் பலித்து விட்டதான பூரண திருப்தி அவனுக்கு. அவன் திருப்தி அவனுடையதே!***

வாசகனுக்கு ஒரு குறிப்பு :

**உன்னைப் பற்றியும் இந்தக் கதையிலே நான் குறிப்பிடு வதினால், இந்த அந்நியோன்யமான குறிப்பு அவசியம் என்றே தோன்றுகின்றது. எதைப் பற்றியோ, எப்படி யெப்படியோ எழுதி 'யாவும் கற்பனை' என்று தமது கற்பனைச் செழுமைக்கு சுய 'ஷாட்' கொடுக்கும் திருகு தாளப் பழக்கத்தை நான் வெறுப்பவன். இக் கதையில் வரும் சம்பவங்கள் அத்தனையும் உண்மை. உண்மை யென்றாலும், உண்மையுமல்ல. நான் பத்திரிகை நிருபனல்லன் கதைஞன் என்பதை இம்மியும் மறக்காது எழுதினேன். கதையின் இறுதிப் பகுதியில் 'வாசகன்' என்று தன்னை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறாரே, அவர் யார் தெரியுமா? எஸ். பொன்னுத்துரையேதான். அவர் அன்று தப்பித்துக் கொண்டாலும், பின்னர் சித்தனிடம் வகையாக மாட்டிக் கொண்டார். இப்பொழுது அவர் களிருவரும் நண்பர்கள். நண்பனின் நிலையிலே தன்னை அமர்த்திக் 'கூடு விட்டுக் கூடு' பாய்ந்து எஸ். பொ. செய்த கற்பனைக் குறளி, கதையின் உருவ அமைப்பை மட்டுமே பாதித்தது. மட்டக்களப்பிற்கு நீ வந்தால், கதைக்களமான ஹோட்டலைப் பார்க்கலாம். வேண்டுமானால் அங்கேயே தங்கலாம். ஆனால், என் கதையிலே புகுந்த காரணத்தினால் அதனைப் புனித யாத்திரை ஸ்தலமாக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாற்றத் தேவையில்லை.*

*இன்னுமொன்று, என்னுடைய 'வீ' என்னும் சிறுகதைத் தொகுதியின் முகப்புக் கதையான 'தேர்' வேறு. 'சித்த'னின் சிறுகதைத் தொகுதியில் இடம் பெறும் 'தேர்' வேறு. இந்தக் கதையின் மகுடமும் 'தேர்' என இருப்பினும், இது முற்றிலும் வேறுபட்ட கதை என்பதை நீ அறிவாய். தமது கதைகளை மட்டுமே வாசித்து இன்புறும் ஈழத்தமிழ் எழுத்தாளர் பலருக்கு இது விளங்கமாட்டாது என்பதற்காகவே இதனையுங் குறித்தேன்.*

- எஸ். பொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஏ. ரஹ்மான்





## யானை

செருக்களத்திலே...

கஜ ரத துரக பதாதிகள்
அணி வகுத்து நிற்கின்றன.
யானையின் பலம், குதிரையின்
காம்பீரியம், தேரின் வேகம்...

இவற்றை மறைப்பது
போலக் காலாட்களின் உபரி.

இரு பக்கமும் சமபலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலிலே பெரியவர் சுருண்டு கிடக்கிறார். எதையோ நினைத்துக் கொண்டவராகப் படுக்கை நிலையிலேயே புரண்டு டயறியைப் புரட்டுகிறார். பென்சிலை வாயிலே கவ்விக் கொண்டு மனக் கணக்கிலே லயிக்கிறார். வருமான வரிக்கான கணக்குகளுக்கு மட்டுமே எழுத்துக் கணக்குத் தேவை. தேவையும் மறுமுனை உந்துதலின் விளைச்சல். மற்றும்படி எந்தப் பெரிய கொடுக்கல் வாங்கலையும் மனத்திலே பதித்து வைத்துச் சீராக நடத்தக் கூடிய ஆற்றல் அவருக்கு உண்டு.

படுக்கையிலே கிடந்து பழங் கணக்குப் பார்க்கும் பெரியவர்.

> ***செருக்களமோ? படுக்கையோ?***
>
> ***இது சதுரங்கப் பலகை!***
>
> ***அதன் இரு புறமும் மோகனும், அவனது நண்பனும் அமர்ந்திருக்கிறார்கள்.***
>
> ***ஆரம்ப கட்டத்திலே அநாயாசமான நகர்த்துதல்கள்.***
>
> ***மோகன் நாலாவது 'மூவ்' ஆக 'காஸிலிங்' செய்கின்றான். யானை தன் இருப்பிடம் பெயர்ந்து அரசனுக்குப் பக்கத்தில் வந்து நிற்கின்றது. கோட்டை கட்டிக் காவல் செய்த பின்னரே, தன் படையின் பலத்தை எதிரி சங்காரத்திற்கு முன்னனுப்பும் யுக்தி.***

'தம்பீ!....' உள்ளேயிருந்து தகப்பனது குரல் வலிக்கின்றது.

> ***'வன் மினிற்... நௌ இட் இஸ் யுவர் மூவ்' எனக்கூறி எழுந்து, ஆட்டப் பலகையை ஒரு முறை 'பருந்துப் பார்வை'யால் மனத்திலிருத்திய பின்னர் உள்ளே செல்லுகின்றான்.***

"தம்பி... அவர் ராமச்சந்திரனைப் போய்ப் பாத்தியா? வரேக்கை புத்தகக் கடைக்கும் போயிட்டு வரச் சொன்னனான்..."

அவர் ஆடமுடியாவிட்டாலும், மோகனை ஆட்டி வைக்க எவ்வளவோ பிரயத்தனம் எடுத்துக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் 'போன்' பண்ணினன்... அவர் அங்கையில்லையாம்... புத்தகக் கடைக்கு 'டெலிபோன்' பண்ணினனான்... இன்னமும் அந்த 'செக்' 'ரியலைஸ்' ஆகி வரேல்லையாம்.

மோகன் தான் இருந்தவிடத்திலிருந்தே செய்து முடித்த வற்றை எல்லாம் ஒப்புவிக்கின்றான்.

"சரி... தம்பி, நீ ஒண்டும் இன்னமும் விளங்கிக் கொள்ளேல்லை. நேரில்லை போய்ப் பாத்தால்தான் எங்கடை அவசரம் அவங்களுக்கு விளங்கும். டெலிபோன் எண்டால் தெரியாதே? ஆறுதலாக்கும் எண்டு நினைச்சுக் கொள்ளுவாங்கள். எதுக்கும் ஏழரை மணிபோலை ஒருக்காப் போய் பாத்திட்டு வா... ஏழு மணிக்கெல்லாம் அவர் வீட்டை வந்திடுவார்."

"ஓ... அதுக்கென்ன போய்ப் பாத்திட்டு வாறன்... நேரம் கிடக்குது தானே"

பெரியவர் பெருமூச்சு ஒன்றை அவஸ்தையுடன் வெளியேற்றுகின்றார்.

***விறாந்தைக்கு மீண்ட மோகன் தன் நணபன் செய்த 'மூவ்'வை அலசுகின்றான்.***

***இவன் என்ன செய்யப் போகிறான்? டெலிபோனிலை எல்லாவற்றையும் முடித்துக் கொள்ளலாமெண்டு நினைக்கிறானே. ஒரு முறைக்கு ஆயிரம் முறைபோய் நச்சரித்தாலும் குடுத்ததை வாங்கிக் கொள்ளுறது பெரும் பொறுப்பாக இருக்கிற இந்தக் காலத்திலை என்ரை கண்ணுக்கு முன்னாலையே இவனுக்கு இந்த அலுவல்களிலே கரிசனை உண்டாக்கி விட வேணும் எண்டுதான் நானும் பாடுபடுறன்.... ஒண்டுக்கும் 'மசிய மாட்டன்' என்கிறான்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அவள் தாய்தான் செல்லம் குடுத்து எல்லாத்தையும் பழுதாக்கினது.***

***அவளை ஏன் குறை சொல்லுவான்? எட்டு வருஷம் பிள்ளையே இல்லையோ எண்டு ஏங்கிக் கிடந்தவள். இவனுக்காகத் தவம் கிடந்தவள்.***

***நான் மட்டும் என்ன? அந்த நேரத்திலை கண்டிச்சு வைச்சிருந்தால் இப்பிடியா வளர்ந்திருப்பான்.***

விளையாட்டு நெருக்கடிக் கட்டத்தை அடைந்து, க்ளை கட்டுகின்றது. தகப்பன் வெளியே வரமாட்டார் என்னும் உணர்வும் தெம்பு தர, கைகள் தாமாகவே 'பக்கெற்றை' ப் பிரித்து சிகரெட் ஒன்றை உதட்டிற் பொருத்துகின்றன. இவன் நீட்டிய பக்கெற்றி லிருந்து நண்பனும் ஒரு சிகரட்டை எடுத்துக் கொள்ளுகிறான். அவன் தட்டிய நெருப்புக் குச்சியிலேயே இவனும் பற்றவைத்துக் கொள்ளுகிறான்.

தகப்பனுக்கு முன்னால் மோகன் புகைப்பதில்லை. அந்த அளவுக்கு மரியாதை உண்டு. ஆனால், தாய் நெருப்புப் பெட்டி எடுத்துக் கொடுப்பதுண்டு என்பது பிரஸ்தாபம்.

***இருவரது உதடுகளும் சிகரெட்டுகளைக் கவ்விய படியிருக்க, கண்கள் ஆட்டப் பலகையை நோட்டமிடுகின்றன. சாம்பல் உதிராது அப்படியே இருக்க, சிகரெட்டுகளி லிருந்து நீலப்புகை நிலை குத்தாக மேல் நோக்கி எழுகின்றது. நண்பன் இடக்கை ஆள்காட்டி விரலுக்கும் நடுவிரலுக்குமிடையே சிகரெட்டை இடுக்கிச் சாம்பலைத் தட்டுகிறான். அவன் ஓர் 'இழுவை' புகையை நெஞ்சக்குட் புகுத்தி, இரண்டு புகை வளையங்களை வெளித் தள்ளியபடி குதிரையொன்றினால் 'செக்' கேட்கிறான்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அரசனைக் காப்பாற்றிய மோகன் குதிரையின் பின்னங் காலடியினால் யானையை இழக்கின்றான். கோட்டை கட்டி அதற்குக் காவலாக வைக்கப்பட்ட யானை முன்யோசனை இல்லாது அசைந்ததால் இப்படிக் குதிரைப் பாய்ச்சலுக்குள் சிக்கிவிட்டது.***

***கையிலே கன்னத்தைச் சாய்த்து, கழுத்தை ஒரு கோணத்திலே திருப்பி, காகப் பார்வையினால் ஆட்டப் பலகையை அலசுகிறான் மோகன்.***

உள்ளே பெரியவர் உடல் குலுங்க ஒரு பாட்டம் இருமுகிறார். உழைத்து உழைத்து நைந்துபோன உடல் நோயின் உபாதையைத் தாங்க இயலாது குலுங்குகின்றது.

பம்பரம் சுழன்று கொண்டிருக்கும் வரை தன் அச்சை நிமிர்த்தி, அசைவிலேயே உறுதிச் சமநிலை போன்ற ஒரு தோற்றந் தருகின்றது. சுழற்சி மந்த கதியடைய, தள்ளாட்டம் ஏற்படுகின்றது. தள்ளாடி விழப்போகும் நிலை...

வைத்தியரின் கட்டாயத்தின் பேரில் அவர் கட்டிலிலே சுருண்டு படுத்துக் கிடக்கிறார்.

மிஷன் பாடசாலையில் உதவி ஆசிரியராக மட்டும் வாழ்ந்திருந்தால், இன்று அவர் ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியராகவே மதிக்கப் பட்டிருப்பார். ஆனால், இன்று அவர் நிலை வேறு. 'பென்ஷன்' பணத்தை எடுத்து, எண்ணி எண்ணிச் செலவுசெய்ய வேண்டிய அவல நிலையுமில்லை.

சிலர் அவரை 'மாஸ்ரர்' என அழைத்தாலும் அது பெயருக் கமைந்த ஒரு தொடர் மொழியாக உள்ளது. அவர் ஒரு லட்சாதிபதி என்பதை யாவரும் அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கேயிருந்து வயிற்றுப் பிழைப்புக்கென்றே வரும் உத்தியோகத்தர் பலர், ஒரு காலைக் கந்தோரிலும், மறு காலைப் புகை வண்டியிலுமாக வைத்து, 'வீக்கென்ட்' பயணத்திலேயே காலத்தை விரயஞ் செய்து, இங்குமில்லாத அங்குமில்லாத திரிசங்கு நிலையிலே தொங்கி, ஊருக்கு நல்ல பிள்ளையாக, போன இடத்தில் 'பாயோடு ஒட்டி' விடாது தப்பித்துக் கொள்ள விழையும் முயற்சியில் எதையுமே சாதித்து விடாது அல்லற்படும் காலத்தில், ஸ்திரமாக இரண்டு கால்களையும் வந்த இடத்திலேயே ஊன்றி, தன்னம்பிக் கையையும் விடா முயற்சியையும் உரமாகப் பெய்ய, ஆணிவேர் ஆழமாகச் சென்று நிலைபெற்று, மரம் தலைநிமிர, பக்க வேர்களும் சல்லிவேர்களும் பரவிப் பெருக, தனி மரமே குளிர் தரும் தோப்பாக மாறிவிட்ட பெருமை!

அந்த நிழலையும் தண்மையையும் அநுபவிப்போர் பலர்... நாணயஸ்தர் என்னும் பெயரை நிலை நாட்டியதும், அந்தப் பெயரே முதலாக நின்று திருமகளை அழைக்கின்றது. அந்தப் பெயரை உருவாக்குவதற்குத்தான் எவ்வளவு காலம், எவ்வளவு பிரயத்தனம்.

தேடுவதை விட, தேடியதை நாலு தலைமுறைக்கு நிலைக்கப் பண்ணுவதிலேயே பெருமை அதிகம். இருந்தும் ஆயிரம் பொன், இறந்தும் ஆயிரம் பொன் என்றிருக்க வேண்டுமே, யானைபோல!

**சதுரங்க விளையாட்டில் நண்பனின் யானை ஒன்றை வெட்டி, அதற்காகத் தன் தேரினைப் பறிகொடுக் கின்றான் மோகன்.**

***யானைக்கும் அடி சறுக்கும்... உண்மை தான்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான எவ்வளவு நிதானமாக, மதங் கொள்ளாத யானையாக வாழ்ந்து விட்டேன். ஆனால்....

மோகனை இப்படிப் பொறுப்பில்லாதவனாக வளர்த்து விட்ட குறை என்னையுஞ் சாரும்.

அன்றொரு நாள், பள்ளிக்கூட 'இன்டர்வேல்' நேரத்திலை, முற்றவெளியில் கூட்டாளிகளோடு சேர்ந்து சிகரெட் புகைப்பதைப் பார்த்து, அவ்விடத்தில் வைத்தே ஓர் அறை அறைந்தேன். ஆத்திரத்தில் அது பலமாகத் தான் விழுந்து விட்டது. வீட்டுக்கு வந்தவன், 'நச்சுக்காய் தின்று செத்துப் போவேன்' எனத் தாய்க்காரியுடன் தர்க்கம் பண்ணி கடைசியிலை நான் சமாதானஞ் செய்து பத்து ரூபாக் காசும் குடுத்து படம் பாக்க அனுப்பி வைச்சன்.

ஒரு அலுவலிலும் அக்கறை இல்லை. அதுதான் பெரிய யோசனை. 'கிரிக்கெற்' எண்டு எவ்வளவு தொந்தரவு பண்ணி விட்டான். வீட்டிலை 'பிரக்டீஸ்' பண்ணுவதற்கு ஒரு 'பாற்' வாங்கி விளையாடினான். அதிலை ஒண்டுமில்லை. எழுபத்தைந்து ரூபா தானே? போனால் போகுது... ஒரு 'மாட்'சிலே நல்லா விளையாடினானாம். எனக்கென்ன தெரியும்?

அவங்கள் வாத்தியாரும் சேர்ந்துதான் பழுதாக்கினது.

வீட்டிலை படிப்பும் இல்லை ஒண்டுமில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'கிரிக்கெற்' தான்! பின்னர் சாம்பியன் மட்சிலே தோற்றுப் போனாங்களாம். தோற்கிறதிலை ஒண்டு மில்லை. வெற்றி தோல்வி இருக்கிறதுதானே? விளையாட்டை விடுவம்.*

*படிக்கிறதுக்கு எத்தனை 'டியூசன்'? ஒவ்வொரு பாடத்திற்கும் திறம் திறம் வாத்திமாரை வைத்து 'டியூசன்' சொல்லிக் குடுத்தன். நான் படிக்கிற காலத்திலை இப்படி வசதியிருந்திருந்தால் இப்ப நான் இருக்க வேண்டிய நிலை என்ன?*

*அது சரி.... இப்பத்தான் என்ன குறைவோ?*

பெரியவர் மீண்டும் இருமித் தள்ளுகிறார்.

*சதுரங்க விளையாட்டு, இறுதிக் கட்டத்தினை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.*

*ஆட்டப் பலகையிலே, காய்கள் பாலைவனத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக உயிர்ப்புப் பெற முயலும் புல் பூண்டைப் போலிருந்தன.*

*அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் வீடுகளையும் வளவுகளையும் பெரியவர் வாங்கினார். எல்லாமே இப்பொழுது உயிர்ப்புக் கொண்டுவிட்டன. கைராசிக்காரர். தொட்டதெல்லாம் பொன்னாகின.*

*மோகனது காய்கள் ஒவ்வொன்றாகக் குறைந்து வருகின்றன. அரசனுக்குத் துணையாக மூன்று காலாள்களே எஞ்சியிருக் கின்றன. எதிரியின் நிலை ஏதோ படைப் பலம் பொருந்தியதல்ல. இருந்தாலும், யானையொன்று மேலாதிக்கமாக நின்று அரசனுக்குத் துணை செய்கின்றது.*

*"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகு-அவாம்*
*பேரறிவாளன் திரு"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையிலே கிடக்கும் பெரியவரின் நினைவுகள் வேறொரு தடத்தில் கிளை பிரிகின்றன.

ஆசிரியர் தொழிலிலிருந்து 'பிறி மட்சூராக' ஓய்வுபெற்ற பொழுது பிரியாவிடை ஒன்று நடைபெற்றது. அதிலே பலர் எழுந்து பேசினார்கள். அவர்களுட் பலர் கடமைப்பட்டவர் சிலர் கடன் பட்டவர். கடன் பட்டவர்தாம் பேரறிவாளன் திருவையும் ஊருணியையும் பிணைத்துப் பேசினர்.

*ஊருணிக்கு நீர் கிடைத்த வரலாறு... அது யாருக்குத் தெரியும்? யுத்த காலத்தில் ஏறாவூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அரிசி 'ஏற்றுமதி'.... பொலீஸ், கட்டுக் காவல் எல்லாவற்றிலும் மண்தூவி 'மற்றது' இறக்குமதி... சட்டென்று விளைந்த மூலதனம்... பண வருவாய்க்கு பதில் சொல்லச் சின்னச் சின்னக் 'கொந்தராத்துகள்'... அதுவே பெரிய 'பிஸினஸ்' ஆக மாற, பல்கிப் பெருகிய பெரிய கொந்தராத்துகள்!*

*கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிக் கொண்டுதான் போட்ட முதலைத் திருப்பி யெடுக்க வேணும். ஊருணியிலிருந்த வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டு போகாமற் தடுக்கப் பாடுபட்டதெல்லாம் யாருக்குத் தெரியும்? எத்தனை சந்தர்ப்பங்களில் அவன்ரை இவன்ரை காலிலை கையிலை விழுந்து ஒவ்வொரு 'ஸ்ரே'ஜாகப் 'பாஸ்' பண்ண வைத்திருக்கிறன். ஒண்டென்று விட்டிட்டு இருக்க முடிந்ததா...? பலதையும் பத்தையும் ஒரு நேரத்தில் பாத்தாத்தான் ஊருணிக்கு நீர் வரும். வாற வெள்ளம் கொஞ்சம் தங்கும்...*

*யானை பலமும் ஞாபகமும் வேண்டுமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிலத்தில் விழுந்த ஊசியையும் பொறுக்கி எடுக்கத்தான் வேண்டும்...*

*ஊசி போக இடம் விட்டால், உலக்கையும் போய்விடும்...*

நினைவுக் கிளையின் பிறிதொரு கிளை.

அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் துயில் எழுந்திருத்தல் அவரது வழக்கம். எல்லோரும் விடியற்காலை குளிரிலே குதிரும் உறக்க இன்பத்தில் மூழ்கிக் கிடப்பார்கள். 'பிளாஸ்' கிலிருக்கும் கோப்பியைத் தானே ஊற்றிக் குடிப்பார். இருபது மைல்களுக்கு மேல் கார்களிலும், லொறிகளிலும், வசதிபோல பஸ்ஸுகளிலும் தொற்றி 'சேர்கிட்'டை முடிப்பார். ஆங்காங்கு 'கொந்தராத்து'த் தளங்களைப் பார்த்து, அதததற்குத் தேவையான மணல், சீமேந்து, ஷீற் ஒழுங்குகளைக் கவனித்துத் திரும்புகையில் மணி எட்டை நெருங்கும். வந்ததும் வராததுமாக நாலு வாளியைத் தலையில் ஊற்றிக் கொண்டு எதையாவது கொறித்துவிட்டுப் பள்ளிக் கூடத்தை நோக்கிச் சைக்கிளைத் தள்ளுவார். பள்ளிக்கூட வேலையோடு அலுத்துப் போகிறவரல்லர். இரவு எத்தனை மணிக்கு அலுவல்கள் ஓயுமென்பது அவருக்கே தெரியாது.

*ஒரு யானையை மட்டும் அதிகமாக வைத்துக்கொண்டு மோகனை மடக்கிவிட முடியவில்லை. யானையின் நேர்ப் போக்கு மூலைக்குள் மடக்கியடிக்கும் தன்மையற்றதே. மோகனின் அரசனுக்கு அங்குமிங்கும் ஒரு குறிக்கோளற்று அலைய வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது. நாலு, ஐந்து 'மூவ்'கள் மூச்சுவிட அவகாசங் கிடைத்தால் காலாளை ஏற்றிவிடலாம். ஆட்டத்தின் போக்கும் மாறும். ஆனால், மூச்சுக்கு மூச்சு 'செக்'காகவே இருக்கின்றதே... அரச னில் வைத்த கையை எடுக்காமலேயே, ஒவ்வொரு 'செக்' கிற்கும் ஒவ்வோர் இடமாகத் தள்ளிக் கொண்டிருக் கின்றான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதாரித்தனமாகக் காய்களை இழந்ததால் ஏற்பட்ட தவிப்பு.

எத்தினை பேருக்கு எத்தினை இடத்திலை 'அப்போயின்ட்மெண்ட்' எடுத்துக் குடுத்திருக்கிறன். அந்தப் பொடியளும் என்னவோ கவனமாக வாழ்ந்து, கச்சிதமாக மூன்று நாலு சேர்த்திருக் கிறாங்கள்.

இவனுக்கு, என்ன வந்தாலும், தாங்குவதற்குத் தாராளமாக இருக்கிறது என்ற எண்ணம்.

'இங்கை இந்த அலுவல்களைப் பாக்க விருப்பமில்லாட்டில் கொழும்பிலை போய்ப் படியன்' என்று அனுப்பினன். அங்கே வெட்டிப் பிளந்தது எதுவுமேயில்லை.

நாகரீகப் பழக்கங்களுடன் வந்து சேர்ந்தி ருக்கிறான்!

உழைத்துச் சேர்க்க வேண்டாம்; சேமித்து வைத்துள்ளதை அதம் போகாது பேணவாவது தெரியுமா? செட்டாகச் செலவழித்து, உடலை வருத்தினாத்தான் செல்வம் எங்களோடை தங்கும். றெயிலடியிலை இருந்து வீட்டுக்கு வாடகைக் காரி லை வந்திறங்கத் தெரியாதே? வீணாக ஏன் இரண்டு ருபா குடுப்பான். சைக்கிளை றெயிலடியில் கொண்டு வந்து மோகன் வைச்சிட்டுப் போனால் சிலவு மிச்சம்.

ஆனால் அவன்...?

UNIVERSITY OF PERADENIYA
2003-10-8
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சைக்கிளை றெயிலடியிலை எனக்காக வைத்து விட்டு, வாடகைக் காரிலை அவன் வீட்டுக்கு வந்து விடுவானாம். இதைப் பார்க்கத் தாய்க்காரிக்குப் பகிடியாகவும் இருக்கிறதாம்.*

*மோகனது அரசன் தனியனாகிவிட்டான். காலாள்கள் வெட்டப்பட்டு விட்டன.*

பெரியவர் தனியனாகக் கிடந்து மீண்டும் பழங் கணக்குப் பார்க்கின்றார்.

*புதுக் கணக்கு ஆரம்பிக்க வேண்டியவன் தனி அரசனைக் காப்பாற்றும் பிரயத்தனத்திலே தவிக்கின்றான். ஆரம்ப கட்டங்களில் இழைத்த தவறுகளின் கூட்டு மொத்தம் போக்கிட மில்லாத அவதியை உண்டாக்கியிருக்கிறது.*

*நண்பனுடைய சிந்தனையற்ற ஒரு 'மூவ்' 'செக்' அல்ல ஆனாலும், மோகனின் அரசனால் எங்கும் செல்ல முடியாத நிலை.*

*'ஸ்ரேல் மேற்'!*

*'ஒபீஸ்' அறையில் 'டெலிபோன்' மணி கிணு கிணுக்கின்றது.*

"தம்பி, என்னெண்டு போய்க்கேள்..."

பெரியவர் கட்டிலிற் கிடந்து குரல் கொடுக்கின்றார்.

*"ஓம்..." என்று உரத்துக் கூறியபடி மோகன் டெலிபோனை நோக்கிச் செல்கின்றான்.*

*நண்பன் ஆட்டப் பலகையை வெறித்துப் பார்த்தபடி இருக்கின்றான்.*

"என்னவாம்?"

கட்டிலிலே சுருண்டு கிடக்கும் பெரியவர் கேட்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாலை இளந்திரையன்



தெரிந்ததைக் கொண்டு தெரியாததை விளக்குவது ஓர் உத்தி. தங்களுக்குப் பழக்கமான ஒன்றின் சாயலில் புதிய ஒன்றைக் காண்பதும் மக்களின் வழக்கம். புதிதாக மனைவியின் கைச் சமையலில் சுவை காணும் இளங்கணவன், "என் அம்மாவின் சமையல் போல இருக்கிறது" என்று சொல்லி உவகை கொள்ளுகிறான் அல்லவா?

சதுரங்கம் ஒரு விளையாட்டு. பொழுதைப் போக்குவதற்கு மட்டுமே அது பயன்படுகிறது என்பது

பொதுவான கருத்தானாலும், அந்த விளையாட்டால் புத்தி கூர்மை உண்டாகிறது என்று சொல்லுவோரும் உண்டு. இங்கே, நான்கு இலக்கியவாணர்கள், அந்த விளையாட்டின் சாயலில் – அந்த விளையாட்டுப் பாத்திரங்களின் இயக்கத்தில் – நமது இன்றையச் சமுதாயத்தையும் அதன் சில பாத்திரங்களையும் வாசகனுக்கு அறிமுகப்படுத்துள்கிறார்கள். ஆனாலும் – நான்கு கதைகளின் நாயகப் பாத்திரங்களும், சதுரங்கத்தின் காலாள், குதிரை, தேர், யானை என்னும் பேர் கொண்ட காய்களின் இயல்புச் சாயலில் சிறிதே தோய்கின்றன என்பது தவிர, – சதுரங்கத்துக்கும் இந்தப் பாத்திரங்களுக்கும் வேறு தொடர்பு இல்லை. இப்பாத்திரங்களின் மூலம் அரசியல், கல்வி, இலக்கியம், தனிமனித வாழ்வு என்னும் நான்கு அம்சங்களாக விரியும் இன்றைய ஈழத்துத் தமிழ் வாழ்வைப் பெருமளவு முழுமையுடன் சித்திரிக்கின்றார்கள் இந்த இலக்கியவாணர்கள்.

சதுரங்க ஆட்டத்தின் வெற்றி – தோல்வி, அதிலே ஈடு பட்டவர்களை எந்த அளவு பாதிக்கும் என்பது ஆட்டத்திற்குப் பின்பலமாக அமையும் ஓட்டத்தின் (பந்தயத் தொகையின்) தன்மையைப் பொறுத்தது; அதை ஆட்டத்தில் ஈடுபடுத்தும் ஆளின் வலிமையையும் பொறுத்தது. வாழ்க்கைச் சதுரங்க மேடையில் நான்கு காய்களை நகர்த்தி, நாலுபேர் விளையாடி இருக்கிறார்கள்; ஆட்டத்தில் அமர இடம் கிடைக்காத போது, ஆட்டக்காரர் ஒவ்வொருவர் பின்னாலும் நின்று 'ஆட்ட ஆலோசகர்' பதவியை வகிப்பவர்கள் போல, வாசகர்களாகிய நாம் இந்த நால்வரின் பின்னாலேயே நின்றிருக்கிறோம். எனவே, ஆட்டத்தின் பாதிப்பு நமக்கும் ஏற்பட்டே இருக்கிறது. அப்படி ஏற்பட்டிராவிட்டால் இந்தச் சதுரங்கத்துக்கும் நமக்கும் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு?

இலக்கியத்தை அளப்பதற்கு ஒவ்வொருவரும் ஓர் அளவு கோல் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் என்ன, - ஒவ்வொரு கூட்டம் ஒவ்வோர் அளவுகோலை வைத்திருக்கிறது. தன் திருப்திக்கு அளந்து கொள்ளுகிறது; வியாபாரத்தையும் நடத்திக் கொள்ளுகிறது. ஆனாலும், அரிசியையும் உளுந்தையும் எண்ணெயையும் (கிலோ கணக்கில்) .எடுத்தல் அளவையால் கணக்கிட்டு விற்கும் தில்லிக்காரன், அவைகளை (லிட்டர் கணக்கில்) முகத்தல் அளவையால் கணக்கிட்டு விற்கும் தமிழ்நாட்டுக்காரனைப் பார்த்து (அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை என்று) சிரிக்கிறான். இலக்கியத் திறனாய்வு உலகிலும் இந்தச் சிரிப்பர்கள் இருக்கிறார்கள்.

மாமியார் திட்டினால் என்ன? மருமகள் திட்டினால் என்ன? - அரிசி வெளுக்க வேண்டும். எடுத்தல் அளவையானால் என்ன? முகத்தல் அளவையானால் என்ன? - நல்ல பொருள் கிடைக்க வேண்டும். இந்த இசம் ஆனால் என்ன, அந்த இசம் ஆனால் என்ன? எந்த இசமும் இல்லாமல் பெயரின்றியே பிறந்ததானாலும் தான் என்ன? - நம் நோக்கு இலக்கியத்தின் சுவையையும் பயனையும் காண உதவ வேண்டும். அது போதாதா?

1

நாம் ரெயில் நிலையத்திற்கு வெளியிலேயே நிற்கிறோம் வாருங்கள்; உள்ளே போய் நாமும் புகைவண்டியில் ஏறிக் கொள்வோம். அங்கே...

ஒன்று காயோலை; மற்றது குருத்தோலை. குருத்தாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்ந்து, பசிய ஓலையாக விரிந்து, - இன்று காயோலையாகச் சரிந்து அரசியற் காற்றில் அசைந்து கொண்டிருக்கும் முதுமை, பழம்நாளின் நினைவுகளை அசைபோடுகிறது; அய்ந்து மாத மாகவே நிமிர்குருத்தாகக் கோலங்காட்டும் இளமை, தன் மிடுக்கை நினைத்துப் பெருமிதம் கொள்ளுகிறது. அந்த இரண்டின் இடையிலே, - இலங்கை அரசியலை மட்டுமல்ல, - இன்றைய இந்தியத் தமிழக அரசியலும் அப்பட்டமாகத் தோகை விரித்து ஆடுவது காணுகிறோம். சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி நிலையில் நிகழும் நிகழ்ச்சிகளும் அவற்றில் பங்கு பற்றும் பாத்திரங்களும் இடவேறுபாட்டால் சிறிதும் பாதிக்கப் பட்டு மாற்றம் அடைவதே இல்லையோ? அப்படித்தான் தோன்றுகிறது.

காலாளாக இருந்து மந்திரியாக உயர்ந்து, இன்று மீண்டும் காலாளாகியுள்ள காயைக் கவனியாமலே, - கவனிக்கக் கூடத் தனக்குப் பொழுது இல்லை என்ற அகம்பாவ உணர்வுடனே, - தனது ஏறுபடிகளின் நினைவிலே நீந்துகிறது இன்றையக் காலாட் காய். அதோ 'லோவர் பேத்' தில் கண்ணயரும் காய் ஒரு காலத்தில் மந்திரியாக உயர்ந்திருந்தது என்று தெரிந்ததும், "அவரா இவர்?" என்று மலைப்புடன் கேட்கிறது இளைய காலாள்.

இந்த மலைப்புக் கேள்விதான் அந்தப் பயணத்திலேயே முக்கியமான கட்டம். இரண்டு சொற்களும் ஒரு வினாக்குறியும் சேர்ந்த இந்தச் சிறிய தொடருக்குள் அந்த வாலிபனின் நெஞ்சக் கிளைப்பு முழுமையும் அடங்கிவிடுகிறது. தனது நேற்றையும் இன்றையும் பற்றி அவன் அனாயாசமாகப் போட்டுவந்த கணக்கு களுக்கெல்லாம், 'எதிர்கால நாளை என்னும் விடை என்ன?" என்னும் பெரிய கேள்வி அவன் உள்ளத்தில் எழுந்து நிற்பது, "அவரா இவர்?" என்னும் சொற்கட்டின் வெளிச்சத்தில் பளிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று தெரிகிறது.

அரசியற் சதுரங்கத்தில் காலாட்களின் கதியே இதுதானா? என்றால், இல்லை; சில காலாட்கள் அமைச்சாகவே சாகிறார்கள். ஆனால், சில நல்ல காலாட்களின் நிலை இன்றைய அரசியற் சதுரங்கத்தில் இப்படி ஆகிவிடுவதைக் காலம் நமக்கு உணர்த்தியிருக்கிறது. அதனால்தானே, "கர்மயோகி என்பவன் இந்தக் காலத்தில் Misfit ரா?" என்ற கேள்வி எழுகிறது?

எதிலும் ஒரு மேலோட்டம், - அதை அதை அப்படியப்படியே 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கொண்டு போவது - இவைகளே இந்தக் காலத்து வாழ்க்கை முறைகளாகிவிட்டது போன்ற ஒரு தோற்றம் காட்டுகிறது இன்றையச் சமுதாயம். தன் வயிற்றிலே இதைச் சுமந்து பெற்று விட்டிருக்கிற மூத்த சமுதாயம் இதைக் கண்டு கழிவிரக்கம் கொள்ளுகிறது.

இந்த முரண்பாடு ஏன்? பல தலைமுறைகளுக்கு நிலைக்க வேண்டுமென்று, மண் சாந்தில் முட்டையையும் கருப்புக்கட்டிப் பாலையும் சேர்த்து வீடுகட்டிய தலைமுறை, - "பதினைந்து ஆண்டுகளுக்கு இந்த வீடு, - அதன் பிறகு இடித்துவிட்டுப் புதிய பாணியில் புதிய வீடு கட்டலாம்" என்ற தடத்தில் செல்லுகிற இளைய தலைமுறையைக் கண்டு கண்கலங்குகிறது. தத்துவங்கள் மாறுகின்றனவோ? வாழ்வின் அடிப்படையே மாற வேண்டிய கட்டமோ?

## 2

**இராம**கிருஷ்ண மிஷன் பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர்களின் விடுமுறைக் கழகம் நடந்து கொண்டிருக்கிறது... அங்கே சென்று அமர்ந்து, சிறிது நேரம் அதன் நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கவனிப்போம்.

நிகழ்ச்சி என்னவோ, புதிய கல்வித் திட்டம் பற்றிப் பேசுவதற்குத்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அங்கு வந்திருந்தவர்களோ?..." எத்தனையோ பேருக்குத் திருக்கோண மலைப் பட்டினத்தில் என்னென்னவோ அலுவல்கள். விடுமுறைக் கழக வகுப்புக்காக கடனே என்று ஐந்து ரூபாவை அழுது தொலைத்துவிட்டு, அந்தச் சாக்கோடு பட்டினத்திற் பல அலுவல் களையும் கவனிக்க வந்த கிராமத்து ஆசிரியர்கள் பலரும், விடுமுறைக் கழகத்தை ஒரு பொழுதுபோக்காகக் கருதித் தம்மை மறந்த களிமயக்கிற் சுகித்திருந்த இளைஞர்கள் சிலரும் 'சித்திரப் பாவையின் அத்தக அடங்கி' விரிவுரையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மேடையிலே போராசிரியர், 'கீழ் வகுப்புகளிற் கணிதம் பயிற்றும் முறை' பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார். கேட்கத் திரண்ட ஆசிரியன்மார் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?... "அவரை அழைத்த குற்றத்திற்கு அவரும் தன் கடமைக்கு எதை யாவது சொல்லி விட்டுப் போகட்டும். போனதும் ஈரிரண்டு நாலு என்று தொடங்குவதுதானே? என்று எண்ணினார்களோ, என்னவோ பேராசிரியரின் தொண தொணப்பு எப்போது முடியும் என எதிர்பார்த்தவர்களாய், மேடையின் பின்புறச் சுவரில் தொங்கிய கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்..."

"கூட்டத்திலே இருந்த வயதான 'பழைய' ஆசிரியர்கட்குப் பேராசிரியர் சொன்னது சம்மதமில்லாமலிருப்பதாகவே தோன்றியது. ஆயினும் எதிர்த்து ஒரு வார்த்தையுமே சொல்ல வில்லை..."

"ஆனால் மேடையில் இருந்த நல்லதம்பிப் பண்டிதருக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'இந்தச் சபையிலே எல்லோருமே வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடி மௌனியாக இருக்கிறார்களே' என்று அவருக்கு ஆத்திரமாக இருந்தது."

'கீழ்வகுப்புகளில் தமிழ்ப் பாஷை கற்பித்தல்' என்னும் பொருள் பற்றிப் பேச அழைக்கப்பட்டிருந்த ஓர் நல்லதம்பிப் பண்டிதர்; அந்தப் பொருளை நன்கு ஆயத்தம் செய்துகொண்டும் வந்திருந்தார். ஆனால், கணிதப் போராசிரியருக்குப் பின் அவர் பேச எழுந்தபோதோ, தாம் பேச வேண்டியதை மறந்தார்; முன்பு பேசிய கணிதப் பேராசிரியர் சொன்ன 'முறைகேடான' கருத்துகளை மறுத்துரைக்க வேண்டும் என்னும் ஒன்றையே நினைந்தார். அதன் விளைவாக, அவருடைய பேச்சு, அவருக்குக் கொடுக்கப் பட்டிருந்த பொருளை இடையிட்டுத் தாவி, கணிதப் பேராசிரியருக்கும் அவரைப் போன்றவர்களுக்கும் கடும் கண்டனமாக முடிந்தது!

ஆசிரியர்களின் விடுமுறைக் கழகக் கூட்டத்தின் ஒரே நிகழ்ச்சியில் மூன்று நிலையினர் காட்சியளிக்கின்றார்கள். பட்டாம்பூச்சியின் வாக்கிற் சுழன்று திரியும் வாலைக் குமரிகள், அவர்களில் மொய்க்கும் இளைஞர்கள், திருக்கோணமலைப் பட்டினத்தில் என்னென்னவோ சொந்த அலுவலை முன்னிட்டு விடுமுறைக் கழகக் கூட்டத்தின் பெயரால் அங்கு வந்தவர்கள்; இவர்கள் யாரும் பேராசிரியரின் பேச்சில் கவனம் செலுத்த வில்லை; மணியையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கணிதப் பேராசிரியர் என்ன பேசினார் என்பது கூட இவர்களின் மண்டையில் விழவில்லை. கூட்டத்தில் இருந்த வயதான 'பழைய' ஆசிரியர்களோ, பேராசிரியர் பேசியது தங்களுக்குச் சம்மத மில்லாதிருந்தும் எதிர்த்து ஒன்றும் சொல்லாமல், 'நமக்கென்ன' என்று இருக்கிறார்கள்... இவர்களைப் போலவே. பேராசிரியரின் கருத்தை ஏற்றுக்கொள்ளாத நல்லதம்பிப் பண்டிதர் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முடைய பணியை மறந்து பேராசிரியருக்கு மறுப்புரைக்கிறார்.

நல்லதம்பியைக் 'கூட்டம் குழப்பிப் பண்டிதர் என்கிறார் ஒருவர்; அரபிக் குதிரையாக இருந்தாலும் பிறவிச் சந்தம் போகாதே' என்கிறார் மற்றவர். ஆனாலும் பண்டிதரின் உள்ளே ஒடுங்கிப் படுத்துக் கிடந்த குதிரையைச் சிமிட்டாக் கொடுத்து முடுக்கி விட்டவர்கள் யார்? வேறுபட்ட கருத்து உடைய 'பழையவர்கள்' பேராசிரியரை மறுத்துச் சொல்லியிருந்தால், பண்டிதர் தமது பொருள் பற்றிப் பேசி விட்டுப் போயிருப்பாரோ?...

தெம்பிழந்து போன இன்றைய ஆசிரியர்கள், - தங்களுக்கு மாறுபட்ட கருத்து ஏற்பட்டால் கூட, - பேசுகிறவரின் பதவிக்கும் பவிசுக்கும் அஞ்சி, வாய்மூடிகளாக இருந்து விடுகிறார்கள். மட்டுமோ? தங்கள் கருத்தையே பிரதிபலிக்க எழுந்து நிற்கும் தங்களில் ஒருவனையும் 'முரடன்', 'கூட்டம் குழப்பி', 'சண்டைக் காரன்' என்றெல்லாம் சொல்லிப் பழிக்கிறார்கள். அதன் மூலம் தங்கள் 'பிழைப்பை' விக்கினமின்றி நடத்திக் கொண்டு போகிறார்கள்.

பழைய நிகழ்ச்சி ஒன்று நினைவு வருகிறது; கேட்கிறீர்களா?...

*இந்த நூற்றாண்டின் தொடக்க நாட்களில், தமிழகத்தின் ஒரு மூலையில் அமைந்த ஒரு சிற்றூரின் ஓர் ஏட்டுப் பள்ளிக் கூடம். அண்ணாவி ஒருவர்; சட்டாம்பிள்ளை ஒருவன்; மாணவர்கள் சுமார் நாற்பது பேர். இந்த நாற்பதில் இருபது பேர் அப்பாவிப் பிள்ளைகள்; இருபது பேர் 'பள்ளிக்கூடத்துக் கள்ளன்கள்.' இந்தக் கள்ளன் களிலே ஒருவன் வெற்றிவேல்.*

*அண்ணாவி தமது வயல்கரைகளைப் பார்த்துவிட்டு, வீட்டுக்கு வந்து உணவருந்திச் சுமார் பதினொரு மணிக்குத்தான் பள்ளிக்கு வருவார். அதற்குள், சட்டாம்பிள்ளையை உள்ளிட்ட பள்ளிக் கள்ளன்களெல்லாம் ஒன்று சேர்ந்து, அண்ணாவி வந்ததும் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறத் திட்டமிட்டு வைத்திருப்பார்கள்.*

*அண்ணாவி ஆடம்பரமாக வந்து, அவருக்கென்று உள்ள*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *திண்ணையின் மீது படர்ந்த பனை ஓலைத் தடுக்கிலே அமர்வார் கீழேயிருந்து நறுக்கென்று குத்தும் கருவேலமுள்! துடித்து எழுந்தவர், "யார் செய்த வேலை இது!" என்று இரைவார். உடனே நாலைந்து பேர் ஒரே குரலில் சொல்வார்கள். "அண்ணாவி, வெற்றி வேல்!" என்று. நாற்பது பிள்ளைக் குடிகளின் ஏகச் சக்கராதிபதி அவருடைய கோபக்கனல் தெறிக்கும் விழிகளைத் தன் பக்கம் திருப்பு முன்பே ஏற்கெனவே திட்டமிட்டு வாசற்படி அருகில் உட்கார்ந்திருந்த வெற்றிவேல், எழுந்து வெளியே ஓடுவான். "கொண்டுவா, அவனை!" என்று கர்ச்சிக்கும், அண்ணாவிச் சிங்கம். அவ்வளவு தான். அத்தனை பேரும் அவனைத் துரத்திப் பிடித்து வர எழுந்து வெளியே ஓடுவார்கள்.*
>
> *ஆசிரியப் பெருமகன் ஒரு சில அப்பாவிகளுடன் இங்கே காத்திருப்பார். போனவர்கள் ஏன் வருகிறார்கள்? அவர்கள் திரும்பி வருவதற்கா எழுந்து ஓடினார்கள்? அவர்களுக்குப் பனங் காட்டிலே பதனீர்; தென்னந்தோப்பிலே இளநீர்; குளங்களிலே நீந்தித் திளைக்கத் தெளிநீர்...*

மூன்று நாளைக்கு ஒரு தடவை, ஒரு குற்றமும் செய்யாத வெற்றிவேலின் துணையுடன் பள்ளிக் கள்ளத்தனம் பண்ணிய பழைய பிள்ளைகளையும் நினையுங்கள் பொறுப் புணர்ச்சியை நெஞ்சிலிருந்து கழற்றி எறிந்து விட்டு, - ஒரு கூட்டம் குழப்பிப் பண்டிதரைப் பழித்தும் இழித்தும் பேசிக் கொண்டே, - ஒரு பயனும் இன்றி விடுமுறைக் கழகக் கூட்டங்களை நடத்துகிற தற்கால ஆசிரியன்மாரையும் நினையுங்கள். இது ஒரு களை; பொறுப் புணர்ச்சி என்னும் பண்பாடு பெறாத மனவயலில் சடைத்து வளரும்களை... ஒரு நாள், தற்செயலாக, எழுந்து நின்று கூட்டத்தைத் திசை திருப்பிய பண்டிதரைக் குதிரையாக்கித், தங்கள் கடமையையே திசை திருப்பி வருகிறார்கள் ஆசிரியர்கள்!

ஆசிரியர்களின் விடுமுறைக் கழகக் கூட்டத்தில் சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரைப் பண்டிதரை மட்டுமே காண்பார்கள்; நமக்கு, மேற் குறித்தவர்களின் நினைவெல்லாம் கூட வருகிறது. மறுத் துரைக்க எண்ணமிருந்தும் மவுனிகளாக இருப்பவர்களைப் பற்றி நாம் நினைக்காமல் இருக்க முடியுமா? ஒருவனின் பேச்சு அவனைக் காட்டிக் கொடுப்பது போல, ஒருவனின் மவுனமும் அனைக் காட்டிக் கொடுக்கத்தானே செய்கிறது?

## 3

புறவாழ்வின் தேவைகளுக்காக ஒன்றும் தன் மன நிறைவுக் காக ஒன்றுமாக இரண்டு வாழ்வுகளை ஒரே நேரத்தில் நடத்து கின்ற ஒருவனின் கற்பனைத் தேர், – சதுரங்கத் தேரைப் போலவே, – குறுக்குக் கட்டங்களிலே ஓடுகிறது. வடம் பிடிக்காமலேயே அந்தத் தேரை இழுத்துச் செல்லுகிறார்கள் பலபேர். ஆம், அவர்கள், அந்தத் தேரின் வடத்தைத் தாங்கள் பிடித்திருக்க வில்லை என்றே நினைக்கிறார்கள். அவர்களின் நினைவும் சரியே. ஆனாலும், அவர்களின் கைங்கரியமும் சேர்ந்தே தேரின் இயக்கத்துக்குக் காரணமாகிறது.

முன் இரண்டு பகுதிகளையும் விட்டு, முற்றிலும் வேறானதோர் வாழ்க்கைப் பகுதிக்குள் அடி எடுத்து வைக்கிறோம். தேரோடும் வீதியிலே அல்லவா வந்து நிற்கிறோம்! எல்லா வீட்டுக் காரர்களும் இந்தத் தெருவுக்கு வந்துதானே ஆக வேண்டும்? இங்கே, எழுத்து, வியாபாரம், குடும்பம், சம்பிரதாயம், கலை ஆக்கம் முதலான பலபேர் தத்தம் போக்கில் நடக்கிறார்கள். அவர்களை விலக்கிக் கொண்டும், சிலபோது தன்னை நோக்கி அவர்களைத் திருப்பிக் கொண்டும் செல்லுகிறது தேர்.

ஓர் எழுத்தாளனின் தன்வரலாறாகக் கோலம் காட்டுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர். அதிலே, அவனுடைய காலத்திய கோணல்மாணல்களே அலங்காரப்பட்டுக்களாகப் படர்ந்து தொங்குகின்றன. ஆயினும் என்ன? தேர் தேர்தானே? அது நிலைக்கு வந்தே விடுகிறது.

எழுத்தாளனும் அவனுடைய ஒரே வாசகனும் உரையாடும் கட்டம் தேரில் புதியதொரு மிடுக்கைக் கொண்டு வருகிறது. இந்த எழுத்தாளனின் வாசகன் எப்படி இருப்பானோ, எப்படி இருக்க வேண்டுமோ அப்படி ஓர் "இலக்கியக் கறார்ப் பேர்வழி"யாக அவனைக் காணும்போது, நம்மை அறியாமலே அந்தத் தேரோட்டத்தில் நாமும் கலந்து கொள்ளுகிறோம்.

தமிழில் எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை; அவர்களைச் சரியாக வழிநடத்தி அவர்களின் மனஉணர்ச்சித் தேரை நிலைக்குக் கொண்டுவரும் வாசகர்களுக்குத்தான் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. "இந்தப் பஞ்சம் நீங்கினால் வந்து தோன்றும் அந்த வாசகன் எப்படிப்பட்டவனாக இருப்பான்?..." இந்தக் கேள்விக்கு விடையாகக் கிடைப்பவனே, - (வாசகனுக்குக் குறிப்பில் எஸ்.பொன்னுத்துரை என்று அறிமுகப்படுத்தப் படுகிறவனே) - தமிழ் எழுத்துலகம் வேண்டித் தவங்கிடக்கும் வாசகன்.

'குதிரை' கதையில் மவுனிகளாக இருந்த பழையவர்களும் கடியாரத்தையே பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்களுமே இன்றையத் தமிழ் வாசகர்களிலே பெரும்பாலோர்கள். உள்ளம் செத்துப் போன அவர்களே, இங்கே எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்னும் பெயர்களில் ஓட்டல் விருந்து வைக்கின்றார்கள். சரியான வாசகன் வந்து சேருமுன், அவர்கள் கூடிக் களித்து உண்டு மிழற்றிக் கலைந்து விடுகிறார்கள்.

தேர் நின்று புறப்பட்ட இடங்களை மீண்டும் மனத்திரையில் கொண்டு வாருங்கள். அங்கெல்லாம், எழுத்துலகப் படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளங்களில் ஒவ்வொன்று ஒளியடித்துக் காட்டப்படுகிறது. அந்தப் பள்ளக் கிடங்குகளைத் தள்ளித் தாவிச் சென்ற தேர், கடைசியில் தன் இராசபாட்டையைக் கண்டு நிலைக்கு வருகிறது. இந்தத் தேரைச் சாரத்தியஞ் செய்தவரிடம் இருக்கிற தனிப்போக்கு இது; அவருடைய தேர் தனது நிலைத்தானத்தை அடையாமல் வழியிலேயே நின்று விடுவதில்லை; சற்று முன்பே நின்றாலும், தேர்முட்டி கண்ணில் தெரியும் படியான இடத்தில் வந்துதான் அது நிற்கிறது. 'தேராவது முட்டியாவது' என்கிறீர்களோ? வேறொன்றுமில்லை; இவருடைய இலக்கியம் நம்பிக்கை வறட்சியைக் கீழ்ந்து தள்ளி, நம்பிக்கைப் பாதையில் வந்தே நிற்கிறது.

## 4

படாத பாடெல்லாம் பட்டுத் தம்முடைய வாழ்வை வள வாழ் வாக்கிய 'மாஸ்டர்' முதுமையின் எல்லைக்குள் கிடக்கிறார்; 'தகப்பன் தேடக் கர்த்தன், பிள்ளை அழிக்கக் கர்த்தன்' என்னும் வாக்கை மெய்ப்பிக்கப் பிறந்த அவர் மைந்தன் சதுரங்கப் பலகையிலே அமர்ந்திருக்கிறான்.

அங்கே, – 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம்பொன்' என்னும் வசனத்தை நிலைநாட்டி விடவேண்டு மென்ற துடிப்பு; இங்கே, – 'இளம் கன்று பயம் அறியாது' என்னும் உலக மொழியில் நீந்தும் முனைப்பு.

'முப்பது ஆண்டு வாழ்ந்தவருமில்லை, முப்பது ஆண்டு தாழ்ந்தவருமில்லை!' உலகத்தைப் பார்த்து ஏற்பட்ட அனுபவத்தை இப்படிச் சொல்லிவைத்தான் யாரோ ஒருவன். இதன் உண்மையை நிலைநாட்டி விடவே, ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்திலும் தந்தையும் மகனும் நேர் எதிர் எதிர்க் குணநலன்களோடு பிறக்கிறார்களோ? மோகனும் அவன் தந்தையும் இந்தக் கேள்வியாக எழுகிறார்கள்; இக்கேள்விக்கு விடையாகவும் நிற்கிறார்கள்.

மோகனும் அவன் நண்பனும் சதுரங்கப் பலகையில் செலுத்திய கவனத்தை நாம், மோகன் மீதும் அவன் தந்தை மீதும் செலுத்துகிறோம். எப்போதோ கேட்ட கதை ஒன்று நம் நினைவில் நீர்யானையாக முகம் ஏந்தி எழுகிறது :

*"இருபத்தாறு, இருபத்தெட்டு வயது இளைஞன். ஆஜானு பாகுவான தோற்றம், வளவாழ்வின் நிறம், முகத்திலும் உடலம் எங்கணும் பொலிவு பெய்கிறது. பழக்கமான துணிக்கடையில் வந்து அமர்கிறான். கடை முதலாளி, தந்தையின் காலத்திலிருந்தே குடும்பத்துக்கு நன்கு பழக்கமானவர். மகிழ்வோடு வரவேற்றுப் பேசிக் கொண்டிருக்கிறார்.*

*"இப்பக்கம் பேச்சை நடத்திக்கொண்டே, கழுத்தில் கன அழகோடு நெளிந்து தொங்கும் அங்கவஸ்திரத்தின் ஒரு நுனியால், பளபளக்கும் தனது ஸ்லிப்பரில் படிந்த தூசியைத் துடைக்கிறான் இளைஞன். 'செருப்பைத் துடைக்கப்பட்டு அங்கவஸ்திரமா!' நினைவு அதிர அவனை ஏற இறங்கப் பார்க்கிறார் முதலாளி நண்பர். அவருக்கு உண்மை விளங்கி விட்டது. காலை எட்டு மணி முதல் இரவு ஒன்பது மணிவரை, மடக்கிய காலை மடக்கிய படியே அமர்ந்து பைசாவும் அணாவுமாக வரவு பார்ப்பவர் அவர். இளைஞன், தந்தை தேடிய பணத் தோட்டத்தில் ஆனந்தமாகப் பந்தாடிக் கொண்டிருப்பவன்.*

*"தம்பி, பூட்சு புதிதாக இருக்கிறதே; என்ன விலைக்கு வாங்கினீர்?" முதலாளி அழுத்தலாகக் கேட்கிறார். முகத்திலே உற்சாகப் பொலிவு படர, எழுச்சிக் குரலில் பதில் தருகிறான் இளைஞன்: "சென்ற வாரம்தான் வாங்கினேன். பதினைந்து ரூபாய்."*

*"சிறிது நேரம் மவுனம்... 'துண்டு பழையது போலிருக்கிறது' இது முதலாளி... "ஆமாம் அப்பா இறந்து போகுமுன்,' ஆறு மாதங்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முன்னேதான், — எழுபத்தைந்தோ எண்பதோ கொடுத்து வாங்கினார்'' அலட்சியமாக வருகிறது இளைஞரின் பதில்.*

*"எழுபது எண்பது கொடுத்து அப்பன் வாங்கிய பட்டுத் துண்டு பதினைந்து கொடுத்து மகன் வாங்கிய செருப்பைத் துடைக்கிறது... கடை முதலாளி பெருமூச்சை உள்ளேயே நிறுத்திக் கொள்கிறார். அது, 'தான் தேடாப் பொருளுக்கு மாற்றுமில்லை, உரையுமில்லை' என்னும் தொடராக நெஞ்சினுள்ளே படர்ந்து பரவுகிறது..."...*

இந்தப் பழைய கதையின் நாயகன்தான், மோகன் என்ற பெயரில், மாஸ்டருக்கு மகனாகப் பிறந்திருக்கிறான். அவர் தேடிய பணம் சிறிதாகி, இவனுடைய சிகரெட்டும் கிறிக்கெட் மட்டையும் மதிப்புக்குரிய 'சிலிப்பர்'களாகித் தோன்றுகின்றன!

'ஆட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் அநாயாசமான நகர்த்தல்கள்'...

இதன் விளைவு, ஆட்டத்தின் மற்றொரு கட்டத்தில் வந்து விரிகிறது: 'ஊதாரித்தனமாகக் காய்களை இழந்ததால் ஏற்பட்ட தவிப்பு... மூச்சுக்கு மூச்சு 'செக்' காகவே இருக்கின்றது.'

ஆட்டத்தின் மற்றொரு கட்டம். 'புதுக்கணக்கு ஆரம்பிக்க வேண்டியவன் தனி அரசனைக் காப்பாற்றும் பிரயத்தனத்திலே தவிக்கின்றான். ஆரம்பக் கட்டங்களில் இழைத்த தவறுகளின் கூட்டு மொத்தம் போக்கிடமில்லாத அவதியை உண்டாக்கியிருக்கிறது..'

'குந்தித் தின்றால் குன்றும் மாளும்' என்பது பழஞ்சொல். அந்த முதுமொழி செவியில் ஏறாத விதமாக இளமையின் மதர்ப்பில் நடையிடுகின்ற ஒரு தலைமுறை, முயன்று வளம் சேர்த்த ஒரு தலைமுறையின் வாரிசாக வந்து பிறக்கிறது. இப்போது மட்டுந்தான் இப்படிப் பிறந்ததா? இல்லை; முன்பும் இப்படி நிகழ்ந்து வருவதனால்தானே, 'முப்பதாண்டு வாழ்ந்தவனுமில்லை...' என்னும் மொழி பிறந்து பழமொழியாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கின்றது!

முப்பது முப்பது ஆண்டுகளாக, - ஆறு இடும் மேடும் மடுவு மாத் தலைமுறைகள் தொடர்வட்டமாக வருவதைச் சுட்டிக் காட்டுவது ஒரு பெரிய சாதனை அல்லவே! அப்படியாயின், இது பழங்கதையின் ஒரு புது வடிவந்தானா?

இந்தக் கேள்விக்கு "இல்லை!" என்று பதில் தருகிறது 'யானை': 'மோகனை இப்படிப் பொறுப்பில்லாதவனாக வளர்த்து விட்ட குறை என்னையுஞ் சாரும்' என்று கழிவிரக்கக் குரல் கொடுத்து ஒரு நிகழ்ச்சியை விவரிக்கிறார் அல்லவா, மாஸ்டர்? அதிலேதான், இந்தத் தொடர்வட்டத்தை வெட்டும் விதம் பொதிந்து வைக்கப்பட்டுள்ளது. பணத்தை மட்டும் சேர்த்து விட்டால் போதுமா? அதற்காகவே, உண்ணாமல் உறங்காமல் ஓடினால் போதுமா? ஒற்றைக்கு ஒரே மகன், காலங்கடந்து பிறந்த செல்லப் பிள்ளை என்னும் உணர்ச்சிச் சுழல்களில், அவனை நல்லபடி வளர்த்து உருவாக்கும் பொறுப்பைச் சோர விட்ட குற்றம் மாஸ்டரைச் சார்ந்ததே. ஆமாம்; பையன் சதுரங்க ஆட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் தவறுகள் இழைத்தது போல, அவனுடைய தந்தையும் பிள்ளை வளர்க்கும் பொறுப்பில் தவறு இழைத்து விட்டவரே.

கடிவாளம் மாட்டிய குதிரையாக ஒன்றையே நோக்கி ஓடுகிறவன், மற்றவற்றில், முக்கியமானவற்றிலே கூடக் கோட்டை விட்டு விடுகிறான்! ஒருவன் தன் மகனுக்குப் பெரும் பொருளை மட்டும் விட்டுச் சென்றால் போதாது; அதன் நிழலடிப் பட்டு நலிந்து விடாதவனாக அவனை வளர்த்து விடவும் வேண்டும்...

**ஈழத்** தமிழ்ச் சமுதாயமாம் தோட்டத்தின் நான்கு பக்கங்களை, ஒரே நேரத்தில், நான்குபேர் படம் பிடித்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். இந்த நான்கையும் ஒன்றாக்கி, ஒரே சோற்றுப் பருக்கையாகக் கண்டு, - " ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்று சொல்லலாமா? சொல்லலாம் என்றே தோன்றுகிறது. சிறுகதையே சமுதாயப் பெரும்பானையில் ஒரு சோறு எடுத்துப் பதம் பார்க்கும் கலைதானே?

நான்குபேர் சேர்ந்து எடுத்துப் பார்த்த ஒரு பருக்கை, 'சதுரங்கம்' என்ற பெயர் சூட்டப்பட்டு வாசகர்களை நாடித் தரப் படுகின்றது; 'தேர்'க்காரர் கண்டு பிடித்த வாசகர்கள் தேரோட்டக் கூட்டமாகக் கிடைக்கமாட்டார்கள் என்றாலும், 'குதிரை'க்காரர் கண்ட ஆசிரியன்மாராகவே அவர்கள் அனைவரும் என்றென்றும் நின்றுவிடப் போவதில்லை. 'காலா-ளின்' நெஞ்சிலே படுக்கப் போகுமுன் கிளர்ந்த வினா, 'யானை'யைக் கழிவிரக்கப் பழங் கணக்குப் பார்க்கும் நிலையில் இறங்காதபடித் தடுக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. அந்த நம்பிக்கையைத் தருவதாலே தான் 'சதுரங்கம்' இலக்கிய மேடையில் இடம் பெறுகிறது.

ஈழத்தின் மேல் எனக்கு ஒரு தனிக் காதல் உண்டு; ஈழத்துக்கும் என் மீது அப்படி ஒரு பாசம் உண்டு. அதனாலேதான், இரண்டு ஆண்டுகளாகக் காத்திருந்து இந்த அமைச்சுக் குறிப்பைப் பெற்றிருக்கிறது 'அரசு'. காலங்கடந்து செலுத்தப்படும் அன்புணர்ச்சியிலே அடர்த்தி அதிகம். ஆனால், சதுரங்கமும் அதனை நம்முன் விரித்துள்ள ஈழத்து நால்வரும் இதை விடவுஞ் சற்று அதிகமான அன்புக்கு உரியவர்கள் என்பதே என் எண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரங்கம்
## பிறந்த வரலாறு

எம். ஏ. ரஹ்மான்

மட்டக்களப்பு. மத்திய கல்லூரி. பாலாவின் அறை. என் நுழைவு. அமைதியின் தவம்.

பாலாவும் எஸ்.பொ.வும் சதுரங்கப் பலகைக்கு முன்னால் அமர்ந்திருக்கின்றார்கள். ஆட்டம் உச்சத்தை நோக்கி நகர்த்தப் படுகின்றது. அதிலே குவிந்திருந்த அவர்களுடைய சிரத்தையைப் 'பிசக்க' நான் விரும்பவில்லை. யாரோ எதையோ நகர்த்துகின்றார். யார் - எது தொற்றிய ஆர்வம் இற்ற நிலை எனக்கு. சதுரங்கப் பலகை எங்கே? என் எழுத்துத் தாகம் நத்தும் இலக்கியக் களம் ஒன்று விரிகிறது. என்னுள் வாழும் இலக்கியக் குள்ளன் — இலக்கிய மயன் மறுபெயரா? — தன் வசப்படுத் துகின்றான். என் உடற் கொட்டு அறைக்குள்ளே. நினைவுகள் ஞானரதத்திலே பயண சுகம் அநுபவிக் கின்றன. என்னுள் மதர்த்த அரசு - அரசின் அரசு. பார்த்திருக்கையிலமர்ந்து தரிசனம். அரசின் கரிசனமும், பிரஜைகளின் தரிசனமும்.

சுயம் உயிர்க்கின்றது. பாலாவும் எஸ்.பொ.வும் ஆட்டத்தில். சதுரங்கக் காய்கள் நகர்த்தப் படுகின்றன. அரசு காப்பு, அமைச்சு யாப்பு, ஏனையன சதுரங்க தானைகள். ஒவ்வொரு வகையிலும், ஒவ்வொரு காயின் உயிர்ப்பு. அந்தக் குள்ளனின் அநியாயம்! கிழக்கு மாகாணத்தின் பொது வாழ்வின் நான்கு துறைகளிலே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவப் பங்களிப்புச் செய்து, 'ஒதுங்கியுள்ள' நால்வரை அந்த உயிர்ப்பிலே தரிசித்துத் தெளி கின்றேன். முதுமைக்கு வாரிசு தேடும் ஏக்கம். முதுமைக்கு வாரிசும் மரபே. இத்தொனி தொற்றி நான்கு கதைஞர் நான்கு கதைகளை எழுத...

எஸ்.பொ.வும் பாலாவும் ஆட்டத்தை முடித்துக் கொள்ளுகின்றார்கள். மௌன சதுரங்கம். மூவரின் சிரத்தையும் இலக்கியப் பக்கல் சாய்கிறது. 'சதுரங்கம்' பற்றிய என் சிந்தனையும் கற்பனையும் பேச்சு அலர்த்தலில் நழுவி விழுகின்றன. தொகுக்குநர் அதி காரம் எஸ்.பொ.வுக்கு வாய்க்கின்றது. வ. அ. இராச ரத்தினத்தை நால்வராகச் சேர்க்கும் யோசனை இசைகின்றது.

அந்தோ! ஈழத்தில் இலக்கிய விமர்சனமா? முதுகு சொறிதலையும் விமர்சனம் என்கிறார்கள். தில்லி வெகு தூரத்திலே தான். அங்கு சாலை - இளந்திரையன் நிறை தமிழ்ப் பணி புரிவதை அறிவேன். அவர் பார்வையின் நேர்த்தியையும் வாசித்து மகிழ்ந்தவன். நேரிலே பழகிய- தில்லை; பார்த்ததுகூடக் கிடையாது. இருப்பினும், இலக்கிய நேசிப்பினால் பக்கல் அமர்ந்திருக்கும் நெருக்க உணர்வு. அமைச்சு, சாலை - இளந்திரையனின் யோகம் என்ற யோசனை அரங்கேறுகிறது.

சுவைப் பெருக்கத்திற்கு ஒரு யோசனை. நூலின் இறுதிப் பகுதியான சாலை - இளந்திரையனின் அமைச்சினை வாசித்த பின்னர், நூலிற்குள் நுழையும் உத்தியைப் பயில்க. பரிசோதனையிலே இத்தகைய சிரமம் தக்கதே.


*18.11.1971*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-10-08
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org